# ஆரம்பக்கல்வி



ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை

ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.
ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ 3] [தனி இதழ் 25 ந. பை.

| மலர் 28 | ஜூலை 1965 | இதழ் 7 |
|---|---|---|

CONNEMARA PUBLIC LIBRARY
2 - AUG 1965

# முத்தான கருத்து!
# முற்றிலும் உண்மை!

"நகரங்களில் தேவைக்கு ஏற்பப் புதிய பள்ளிக்கூடங்களைத் தோற்றுவிப்பதில் தனியாருடைய அக்கறை குறைந்து விட்டது. இந்த நிலைமை மாறவேண்டும். கல்வியில் ஆர்வம் வலுத்து வருகின்ற வேகத்தில், புதிய பள்ளிக்கூடங்களைத் தோற்றுவிப்பதற்கான பொறுப்பு முழுவதையும் அரசாங்கத்தால் ஏற்க இயலாது. தனிப்பட்டவர்களின் பொதுநல உணர்வும் தரும சிந்தனையும் இப் பணிகளுக்குப் பயன்படுவது இன்றியமையாதது."

*தெள்ளத் தெளிவாக அமைந்துள்ள இந்தக் கருத்து நர உண்மை நிலையை உள்ளது உள்ளபடி எடுத்துக்காட்டுவதாக அமைந்திருக்கிறது.*

தனியார் பள்ளிக்கூடங்கள் எவ்வளவு இன்றியமையாதவை என்பதையும், அந்தப் பள்ளிக்கூடங்களால் ஆற்றப்படக்கூடிய தொண்டு எத்துணைச் சிறந்தது என்பதையும், எல்லாப் பள்ளிக்கூடங்களையும் அரசாங்கத்தாரே நடத்துவது என்பது இயலாத செயல் என்பதையும் இந்தக் கருத்துரை திட்டவட்டமான முறையில் விளக்கிக் காட்டுகிறது.

அருமையான இந்தக் கருத்துரையை இவ்வளவு அழுத்தந் திருத்தமான முறையில் எடுத்துக்கூறியிருப்பவர், ஏனோதானோ அல்லர்; ஏதும் அறியாதவர் அல்லர்; ஓ அவரா அவருக்கு என்ன தெரியும் இந்தத் துறைபற்றி என்று அலட்சியமாகக் கூறி ஒதுக்கத் தக்க நிலையினரும் அல்லர். இந்தக் கருத்துரையின் உரிமையாளர், பொறுப்பும் சிறப்பும் மிக்க பதவியில் வீற்றிருப்பவர்; நீண்ட நெடுங் கால அனுபவமும் ஆற்றலும் படைத்தவர்; தமிழகத்துக் கல்வித் துறையின் தலையாய அதிகாரத்தைத் தன் கைகளிலே பெற்றிருப்பவர்; சென்னை மாநிலத்து ஆட்சிப் பீடத்தை அலங்கரிக்கும் உரிமையும் பெருமையும் தன்னிடம் கொண்டிருப்பவர். ஆம்! தமிழ்த் திரு நாட்டின் முதலமைச்சராக மட்டுமல்ல, கல்வியமைச்சராகவும் திகழும் திருவாளர் பக்தவத்சலம் அவர்கள்தான், தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உயர்தரமான கருத்துரையை உவகையோடு அளித்திருப்பவர்.

முதலமைச்சர் திருவாளர் பக்தவத்சலம் அவர்கள் மட்டுமல்ல, தமிழ்நாட்டுக் கல்வித்துறையின் வரலாற்றையும் வளர்ச்சியையும் நன்கறிந்த நல்லறிவாளர்கள் அத்தனை பேரும், அந்த மூத்த பெருமகனார் வந்துள்ள அதே முடிவுகளுக்குத்தான் வருவார்கள். இதில் துளியும் ஐயம் இல்லை.

தொடக்கக் கல்வி, நடுத் தரக் கல்வி, கல்லூரிக் கல்வி—இம் மூவகைக் கல்வி நிலைகளும் தமிழகத்தில் இதுபோது பூரிப்பையும் பெருமையையும் அளிக்கத்தக்க அளவுக்கு செழித்து வளர்ந்து ஓங்கி உயர்ந்து சிறந்து பொலிகின்றன. இந்த வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும், மிகப் பெரிய அளவில், காரண கர்த்தாக்களாக விளங்கியவர்கள்—இன்றும் விளங்குபவர்கள், தனியார் பள்ளி நிர்வாகிகளே என்னும் உண்மையை, யாராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

தொடக்கப் பள்ளிகளும் சரி, உயர்நிலைப் பள்ளிகளும் சரி, முதன் முதலில் தனியாருடைய தணியாத ஆர்வத்தின் விளைவாகத் தான் தோன்றின. தனியார் நிர்வாகிகள் பலர், பத்தொன்பதாவது நூற்றாண்டிலேயே, இத்தகைய கல்வி நிலையங்களை நிறுவுவதற்கு, ஆர்வத்தோடும் துணிச்சலோடும் முன் வந்தார்கள்.

கல்விப் பொருளின் அருமையையும் பெருமையையும் நாட்டு மக்கள் அத்தனைப்பேரும் நன்கு உணர்ந்திருக்கிற காலம், இந்தக்காலம்.

வீடு வாசலை நில புலன்களை விற்றாவது தங்கள் பிள்ளைகளுக்குக் கல்வியறிவைப் பெற்றுத் தந்தாக வேண்டும் என்று பெற்றோர்கள் யாவரும் துடிதுடிக்கிற காலம், இந்தக் காலம்.

“நாம்தான் எழுதப் படிக்கத் தெரியாமல், கைநாட்டுப் பேர்வழிகளாகவே காலத்தை ஓட்டிவிட்டோம். நம் பிள்ளைகளாவது நாலு எழுத்தைப் படித்து நல்லபடி வாழ வேண்டும்” என்கிற உணர்ச்சி, மக்கள் சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு பிரிவினரிடமும் ஊடுருவிப் பாய்ந்துவிட்ட அறிவுத் தெளிவு மிகுந்த காலம், இந்தக் காலம்.

ஆனால் தனியார் நிர்வாகிகள் எல்லையற்ற ஆர்வத்தோடும் அஞ்சாத நெஞ்சத்தோடும் தங்கள் பள்ளிக்கூடங்களைத் தொடங்கிய அந்தக் காலம், மக்கள் சமுதாயத்தில் மிகப் பெரும்பாலோர், கல்விப் பொருளின் சிறப்பையோ தேவையையோ சிறிதளவும் உணராமலிருந்த காலம்; “கல்வியாம் கல்வி; யாருக்கய்யா வேண்டும் உங்கள் கல்வி!” என்று கேலி பேசுவதையும் கிண்டல் மொழி வீசுவதையுமே பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள் தனிப் பெருங் கடமை என்று திட்டவட்டமாக எண்ணிக் கொண்டிருந்த காலம்; அன்புகூர்ந்து உங்கள் பிள்ளைகளைப் பள்ளிக் கூடங்களுக்கு அனுப்பிப் படிக்கச் செய்யுங்கள் என்று வேண்டி வேண்டிக் கேட்டாலும், எண்ணற்ற பெற்றோர்கள், முடியாது முடியாது என்று மறுத்துவந்த காலம்.

அத்தகைய அக்கறையற்ற காலத்தில் துணிச்சலோடு கல்வித் துறையில் இறங்கி, தைரியமாகத் தங்கள் பள்ளிக்கூடங்களைத் தொடங்கி, எண்ணற்ற இடையூறுகளுக்கு இடையே அவற்றைச் செம்மையாகவும் சிறப்பாகவும் நடத்திவந்த வீர வரலாறுதான், தனியார் நிர்வாகிகளின் வரலாறு.

கல்வியில் ஆர்வம், அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாக, ஆநந்த பூர்த்தியாகக் கரைபுரண்டு ஓடுகிற இந்தக் காலச் சூழ்நிலையில் நின்றுகொண்டு, தனியார் நிர்வாகிகள் அந்தக் காலத்தில் ஆற்றிய தொண்டைப்பற்றி எண்ணிப் பார்த்தால், அதன் முழுச் சிறப்பும் பொலிவும் தெளிவாக விளங்கமாட்டா. “பள்ளிக்கூடமா – இந்த ஊரிலா – தொடங்கவா போகிறீர்கள் – எதற்காக இந்த வீண் வேலை ?” என்பதுபோன்ற கேள்விக்கணைகளை எட்டுத் திசைகளிலுமிருந்து வீசப்பட்ட அந்தக் காலச் சூழ்நிலையில் நின்றுகொண்டு பார்த்தால்தான், தனியார் நிர்வாகிகள் அந்தக் காலத்தில் ஆற்றிய தொண்டு எவ்வளவு உயர்ந்தது – எத்துணைச் சிறந்தது என்பது தெள்ளத் தெளிவாக விளக்கமாகும்.

ஆண்டுகள் செல்லச் செல்ல, மாவட்ட ஆட்சி மன்றங்கள், மாநகர ஆட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள் முதலிய உள்ளாட்சி நிறுவனங்களும், மாநில அரசாங்கமும் பல்வேறு கல்வி நிலையங்களை நிறுவ முன்வந்தன என்பது உண்மையே. ஆனால் அப்படி அவை முன்வந்த காலத்திலும், அவற்றால் நடத்தப்பட்ட கல்வி நிலையங்களின் எண்ணிக்கையைவிடத் தனியார் நிர்வாகிகளால் நடத்தப்பட்ட கல்வி நிலையங்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தது.

தனியார் கல்வி நிலையங்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தது என்பது மட்டுமல்ல உண்மை. அரசாங்கப் பள்ளிகளிலும் உள்ளாட்சி மன்றப் பள்ளிகளிலும் அளிக்கப்பட்டு வந்த கல்வியின் தரத்தைவிடத் தனியார் கல்வி நிலையங்களில் தரப்பட்டுவந்த கல்வியின் தரம் மிக உயர்ந்ததாக இருந்தது.

இறந்த காலத்தில் மட்டுமல்ல, நிகழ் காலத்திலும் நிலைமை அப்படித்தான் இருக்கிறது. இப்போதும் தனியார் பள்ளிகளில்தான் கல்வியின் தரம் உயர்ந்ததாக இருக்கிறது.

தனியார் பள்ளிகளின் தனிப் பெருந் தொண்டைப் பற்றி எண்ணிப் பார்க்கும்போது மற்றொரு மிக முக்கியமான உண்மையையும் நம் சிந்தனையில் நிறுத்தவேண்டும். அரசாங்க மானிய உதவியைப் பெறும் தனியார் பள்ளிகளால் அரசாங்கத்திற்கு ஏற்படும் செலவைவிட, உள்ளாட்சி மன்றங்களாலும் அரசாங்கத்தாலும் நேர்முகமாக

நடத்தப்படுகிற பள்ளிகளால் அரசாங்கத்திற்கு ஏற்படுகிற செலவு, மிக அதிகமாக இருக்கிறது — என்பதே அந்த உண்மை.

தனியார் பள்ளிகளில் தரப்படுகிற கல்வியின் தரமும் உயர்ந்தது. அந்தப் பள்ளிகளால் அரசாங்கத்திற்கு ஏற்படுகிற செலவும் குறைவு. நிலைமை இப்படி இருக்கும்போது, அரசாங்கத்தின் கடமைகள் என்னவாக இருக்கமுடியும்? 1. ஏற்கெனவே நடைபெற்றுவரும் தனியார் பள்ளிகளுக்குப் போதிய அளவில் நிதி வசதியும் பிற வசதிகளும் தருவது. 2 புதிதாகப் பல தனியார் பள்ளிகள் தொடங்கப்படுவதற்குத் தேவையான உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளிப்பது. இந்த இரண்டும் தானே அரசாங்கத்தின் கடமைகளாக இருக்க முடியும்? அப்படித்தான் இருந்தது, நம் தாய்த்திரு நாட்டுக்கு அரசியல் விடுதலை கிடைக்கிற வரையில்.

விடுதலை கிடைத்த சில ஆண்டுகளுக்குப் பின்னர் வரையில்கூடத் தனியார் பள்ளிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கின்ற உயர்ந்த வழியை — உன்னதமான வழியைத்தான் அரசாங்கம் பின்பற்றி வந்தது. அத்தகைய சீரிய கொள்கையையும் சிறந்த நடைமுறையையும் தமிழ்நாட்டு அரசாங்கம் பின்பற்றி வந்த வரையில், புதிய புதிய தனியார் பள்ளிகள் தோன்றிக்கொண்டே இருந்தன. அப்படித் தோன்றியதால், கல்விப் பொருளை அள்ளி வழங்கும் பொறுப்பு மிக்க பணியின் பளு முழுவதும் அரசாங்கத்தின்மீது விழாமல், அப்பெரும் பளுவின் ஒரு பெரிய பகுதி, தனியார் நிர்வாகிகளால் தாங்கப் பட்டுவந்தது.

ஆனால் சென்ற பத்து அல்லது பன்னிரண்டு ஆண்டுகளாக ஏனோ தெரியவில்லை, தமிழ்நாட்டு அரசாங்கத்தின் கல்விக் கொள்கைகளும் மானிய விதிகளும், தனியார் பள்ளிகளின் வளர்ச்சியையும் தோற்றத்தையும் தடுத்து நிறுத்தும் தன்மை உடையனவாகவே அமைந்துவிட்டன.

வேண்டுமென்றே அரசாங்கத்தார் தனியார் பள்ளிகளின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தவல்ல கொள்கைகளையும் ஏற்பாடுகளையும் வகுத்துவிட்டார்கள் என்று நாம் கூறவில்லை. அப்படி யாரேனும் கூறினால், அந்தக் கூற்றில் உண்மை இருக்கவும் முடியாது. ஆனால் நடந்தது என்னவென்றால், வேறு ஏதேதோ நோக்கங்களை முன்னிட்டு

அரசாங்கத்தார் வகுத்த கொள்கைகளும் ஏற்பாடுகளும், தனியார் பள்ளிகளின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்துகிற விளைவை உடையன வாக அமைந்து விட்டன.

தொடக்கப் பள்ளிகளிற் பயில்கிற எல்லா மாணவர்களுக்கும் இலவசக் கல்வி என்கிற திட்டத்தை அரசாங்கத்தார் கொண்டு வந்த போது, அந்தத் திட்டத்தின் விளைவாகத் தனியார் பள்ளிகளுக்கு ஏற்பட்ட இழப்பு முழுவதையும் ஈடுகட்டித் தர முன் வந்திருக்க வேண்டும். நியாயமான அளவில் நஷ்ட ஈட்டைத் தர அரசாங்கம் முன் வந்திருந்தால், இலவசக் கல்வித் திட்டத்தால் தனியார் பள்ளிகளுக்கு எத்தகைய இடையூறுகளும் ஏற்பட்டிருக்க மாட்டா. ஆனால் அரசாங்கம் அளிக்க முன்வந்த நஷ்டஈடு - இன்றளவும் தந்து கொண்டிருக்கிற நஷ்டஈடு, இலவசக் கல்வித் திட்டத்தால் தனியார் பள்ளிகளுக்கு ஏற்பட்ட நஷ்டத்தில் நான்கில் ஒரு பங்கைக்கூடத் தருவதாக அமையவில்லை.

அரசாங்கம் அளித்து வருகிற நஷ்ட ஈடு மிகக் குறைந்த அளவினதாக இருந்து வருகிற காரணத்தால், தனியார் தொடக்கப் பள்ளிகளின் நிலைமை, வேதனைக்கு உரியதாக மாறிவிட்டது. மாணவர்களிடமிருந்து கட்டணமும் வசூலிக்கக்கூடாது — அரசாங்கத்தாரும் போதிய அளவில் மானியத் தொகையைத் தர மறுக்கிறார்கள் — இத்தகைய இக்கட்டான நிலையில், பள்ளிக்கூடத்தை நடத்துவதற்குத் தேவையான பணத்தை எங்கிருந்து பெறுவது? இந்தக் கேள்வி, மாபெரும் உருவம் உடையதாக வளர்ந்து, தனியார் பள்ளி நிர்வாகிகளை இரவும் பகலும் வாட்டி வதைக்கத் தொடங்கி விட்டது.

இருக்கின்ற தனியார் பள்ளிகளின் நிலைமை இவ்வளவு வேதனைக்கும் துயரத்திற்குமிடையே சிக்கித் தவிக்கின்றபோது, புதிதாகத் தனியார் பள்ளிகளைத் தொடங்க யார்தான் முன் வருவார்கள்? சென்ற சில ஆண்டுகளாகப் புதிதாகத் தனியார் பள்ளிகள் தோன்றாமல் இருப்பதற்குரிய காரணம் இதுதான்.

புதிய பள்ளிக்கூடங்களைத் தோற்றுவிப்பதில் தனியாருடைய ஆர்வம் குறைந்துவிட்டதே என்பதைப்பற்றி மிகுந்த வருத்தத்தோடு குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் திருவாளர் பக்தவத்சலம் அவர்கள், இந்த நிலைமை மாறவேண்டும் என்கிற தம்முடைய நல்ல விருப்பத்தையும் தெளிவான முறையில் குறிப்பிட்டுள்ளார்கள்.

தனியார் பள்ளிகள் புதிதாகத் தோன்றாமலிருக்கிற இன்றைய நிலைமை ஏன் மாறவேண்டும்? தனியார் துறையில் புதிய பள்ளிகள் தோன்றவேண்டிய அவசியம் என்ன? இக் கேள்விகட்கு உரிய விடையையும் முதலமைச்சர் அவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்கள். கல்வியில் ஆர்வம மிக வேகமாக வளர்ந்து, எங்கு பார்த்தாலும் புதிய புதிய பள்ளிக்கூடங்கள் தேவை என்கிற நிலைமை ஏற்பட்டுள்ள இந்தக் காலத்தில், புதிய பள்ளிகளைத் தோற்றுவிப்பதற்கான பொறுப்பு முழுவதையும் அரசாங்கம் ஏற்க இயலாது என்பது தான் அமைச்சர் அவர்கள் அளித்துள்ள விடை.

உண்மைதான்! புதிய பள்ளிக்கூடங்கள் யாவற்றையும் அரசாங்கமே தொடங்கி நடத்தமுடியாது என்பதும் உண்மை. அத்தகைய பள்ளிகளைத் தொடங்கத் தனியார் நிர்வாகிகள் முன் வந்தால் தான் பிரச்சினை தீரும் என்பதும் உண்மை. ஆனால் தனியார் நிர்வாகிகள் ஏன் அவ்வாறு செய்ய முன்வரவில்லை? நாம் மேலே சுட்டிக் காட்டியதுபோல, அதற்குத் தேவையான சூழ்நிலை இல்லாததால்!

செடிகொடிகள் செழித்து வளர வேண்டுமானால், போதிய சூரிய வெளிச்சமும் காற்றும் இருந்தாக வேண்டும். செடிகொடிகள் வளரவில்லையே வளரவில்லையே என்று கைகளைப் பிசைந்து கொண்டிருப்பதாலோ, கண்ணீர் சிந்துவதாலோ, செடிகொடிகள் வளர முடியுமா? தேவையான அளவு ஞாயிற்றின் ஒளியும் காற்றும் கிடைப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தால்தான் செடி கொடிகள் வளரும்.

அதுபோலத்தான், தனியார் பள்ளிகளுக்குத் தேவையான அளவு மானிய உதவியை அளிக்க அரசாங்கம் ஆர்வத்தோடு முன் வந்தால்தான், இருக்கும் பள்ளிகள் சிறக்கும். புதிய பள்ளிகளும் பிறக்கும்.

பெற்றோர்களிடம் பணவசதி இல்லாத காரணத்தால், எந்த ஏழைப்பிள்ளையின் கல்வியும் தடைபடக்கூடாது என்பதுதான் இலவசக் கல்வித் திட்டத்தின் அடிப்படை நோக்கம். இந்த நோக்கம், மிகச் சிறந்தது; மிக உயர்ந்தது. மறுப்பார் இல்லை. ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசக் கல்வியை அளிப்பதற்குத் தேவையான அளவில், இலவசப் பள்ளிகள் இருந்தாக வேண்டும் என்பதை யாரும் மறக்கமுடியாது. ஆனால் ஆரம்பப் பள்ளிகள் அத்தனையுமே இல

வசப் பள்ளிகளாக இருந்தாக வேண்டும் என்பது எப்படி நியாய மாகும்?

தமிழகத்தில் உள்ள எல்லாப் பெற்றோர்களுமே, தங்கள் பிள்ளை களின் தொடக்கக் கல்விக்குச் செலவிட முடியாத அளவுக்கு ஏழை கள் அல்லர். தங்கள் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்குத் தேவை யான பணத்தைச் செலவிடும் வசதியும் விருப்பமும் உடைய பெற்றோர் கள் பல்லாயிரக் கணக்கில் இருக்கிறார்கள். பண வசதி படைத்த அத்தகைய பெற்றோர்கள்மீது இலவசக் கல்வித் திட்டத்தை எதற் காகத் திணிக்கவேண்டும்?

ஏழைப் பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு இலவசக் கல்வியை அளிப்பது, நியாயம்; முறை; ஒழுங்கு; தேவை. ஆனால் பணம் படைத்த பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு எதற்காக இலவசக் கல்வி? அத்தகைய வசதி படைத்த பிள்ளைகளுக்காக, கட்டணம் வசூலித்து நடத்தப்படும் தொடக்கப்பள்ளிகள் பலவற்றை அனுமதிக்க அரசாங் கம் முன் வருவதுதான் நியாயம்; முறை.

(1) இலவசமாகக் கல்வியை அளிக்க முன் வருகிற தனியார் பள்ளிகளுக்குத் தேவையான அளவு நிதி உதவியை அரசாங்கம் அளிக்க வேண்டும்.

(2) அரசாங்க நிதி உதவியைப் பெறாமல், ஆனால் மாணவர் களிடமிருந்து கட்டணம் வசூலித்துத் தங்கள் பள்ளிகளை நடத்த விழையும் தனியாரை, அவ்வாறே செய்ய அரசாங்கம் அனுமதிக்க வேண்டும்.

இந்த இரண்டு நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண் டால் தனியார் பள்ளிகள் புதிதுபுதிதாகத் தோன்றுவது உறுதி.

தனியார் பள்ளிகளின் அருமையையும் பெருமையையும் நன்கு உணர்ந்து அதனை வெளிப்படையாகவும் தெரிவித்துள்ள தமிழகத்து முதலமைச்சர் அவர்கள், அவை செழித்து வளர்வதற்குத் தேவையான இந்த இரு ஏற்பாடுகளையும் உடனடியாகச் செய்ய முன் வர வேண்டும் என்பது, நம்முடைய பணிவார்ந்த வேண்டுகோள்.

முன் வருவாரா? நாடு கேட்கிறது, ஆவலோடு! தமிழகத்துக் கல்வித் துறையின் எதிர்காலம் கேட்கிறது, ஆர்வத்தோடு!

# சீனிவாச ராமாநுஜம்

—வே. கபிலன்.—

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்று சொல்லிச் சென்ற மேதையின் வழியிலே தோன்றிய மனிதர் குல முதல்வர்கள் பலர்.

எழுத்தின் மூலமாக நல்ல பல எழுச்சியைக் கண்ட உலக மாந்தர், எண்ணின் வாயிலாகவும் அந்த வளர்ச்சியைக் கண்டிருக்கின்றனர் என்றால் அது மிகையாகாது. அல்லவா?

—அப்படி எண்ணின் வாயிலாக நமக்கு வழிகாட்டிகளாக விளங்கியவர்களில் கணிதக் கலைஞர் சீனிவாச ராமாநுஜமும் ஒருவர்.

1887ஆம் ஆண்டு, டிசம்பர் மாதத்தில், ஈரோட்டில் பிறந்த அன்னவர் வாழ்க்கை, ஏழ்மையைக் கண்டு அஞ்சி ஒதுங்கிவிடுகின்றவருக்கு ஒரு வழித்துணை என்றே கூறலாம். இராமாநுஜத்தின் தந்தை, கும்பகோணத்தில் இருந்த ஒரு ஜவுளிக் கடையில் ஒரு குமாஸ்தாவாக வேலை பார்த்தவர். அப்படியென்றால் அவரது வாழ்க்கையின் அடிப்படை அமைப்பு எப்படி இருந்திருக்குமென்பதை விவரிக்க வேண்டியதில்லையல்லவா?

இராமாநுஜத்துக்கு ஐந்து வயது பூர்த்தியாகி, ஆறாவது வயது தொடக்கம்... அப்போது அங்கு ஒரு திண்ணைப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். அதன் பிறகு, அதாவது 1897ஆம் ஆண்டில் உயர்நிலைப் பள்ளியில் கால் அடி எடுத்து வைத்தார். 1897ஆம் ஆண்டில், தொடக்கப் பள்ளியின் இறுதித் தேர்வில முதல் மணியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தத் தேர்வுக்குள் அவரை நோக்கி வந்த கொடிய கால கட்டங்கள் கொஞ்சமல்ல. அப்படியிருந்தும் விடாமுயற்சியோடு வெற்றியின் சிகரத்தை எட்டிப் பிடித்தார்.

'கணக்கு' என்று சொன்னாலே பலருக்குக் கசக்கும் ஆனால் அவருக்கு அது இனிப்பாகவே இருந்தது. அதனால்தான் மூன்றாவது படிவத்தில் தொடர் எண்ணில் நல்ல உணர்வு பெற்றிருந்தார். அதுபோலவே 4–ஆம் படிவத்தில் திரிகோணமிதி'யில் அதிக ஆர்வம் கொண்டிருந்தார். அந்த ஆர்வத்தின் விளைவால், பி.ஏ. வகுப்பு படித்துக்கொண்டிருந்த தம் நண்பரை அணுகி, 'லோனி'யின் திரிகோணமிதி என்னும் கணித நூலை வாங்கி வந்து தாமாகவே பயின்று தகுந்த விடையைக் கண்டு பிடித்து வெற்றி கண்டார். 5–ஆம் படிவத்தில் காலடி எடுத்து வைத்ததுமே 'சைன்' 'கோசைன்' பற்றிய 'யூலரி'ன் புது வடிவத்தைக் காண முயன்று முழு வெற்றியடைந்தார். ஆனால் அந்த

உற்சாகம் அவரிடம் அதிக நாள் இருக்கவில்லை. அதற்குக் காரணம், அது வேறொருவரால் ஏற்கெனவே கண்டுபிடிக்கப்பட்டு விட்டது என்பது தெளிவானதால்!

1903-ஆம் வருடத்தில், அதாவது, ஆறும் படிவத்தில், தளர் நடை போட்டுக் கொண்டிருந்த போது, கார் (Carr) எழுதிய கணிதப் புத்தகமொன்று அவர் கைக்குச் சிக்கியது. அதைக் கொண்டு ஆராய்ச்சி பல நிகழ்த்தி ஒரு புதிய உலகத்தின் தலைவாசலில் வந்து நின்றார் அதன்பின்னர், 'ஜியோமிதி'யில் பயிற்சி பெற்று, 'அல்ஜீப்ரா'வில் சிந்தனை செலுத்தி புதிய தொடர் வடிவங்களைச் சிருஷ்டித்தார்.

எப்படியோ....1903ஆம் ஆண்டில் மெட்ரிகுலேஷனில் வெற்றி பெற்று, 1904ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில், கும்பகோணத்திலுள்ள ஒரு கல்லூரியில் எஃப். ஏ. வகுப்பில் புகுந்தார். கணிதத்தில் ஆர்வம் மிகுந்த அவர் மற்ற பாடங்களில் தம் கவனத்தை ஓரளவுக்குக்கூடச் செலுத்தாததால் தேர்வில் தோல்வி கண்டு துவண்டார். அந்தத் தளர்ச்சியால் ஆந்திராவுக்குச் சென்று விட்டார். மீண்டும் 1906-இல் வந்து, சென்னை. பச்சையப்பன் கல்லூரியோடு இணைந்தார். இப்படி இணைந்தபோது இணைந்து விட்ட நோயால் மீண்டும் அதே ஆந்திராவுக்குச் சென்று விட்டார். அங்கிருந்தவண்ணம், அதாவது 1907இல் பல்கலைக் கழகத் தேர்வு எழுதி தோல்வி கண்டார். அந்தத் தேர்வுக்காக முன் மாதிரி அதிக கவலை கொள்ளாமல் 1909 ஆம் ஆண்டு முழுமையிலும் கணிதத்தில் முழுக்கவனம் செலுத்தலானார். இந்த வருடத்தில்தான் அவருக்குத் திருமணம் நடைபெற்றது.

புதிய பொறுப்பை ஏற்றுக் கொண்ட இராமானுஜம் வேலை தேடும் படலத்தில் ஈடுபட்டார். யார் யாரையோ சந்தித்தார். கடைசியில் சேஷு ஐயர் உதவியால் 'அக்கவுண்டண்ட் ஜெனரல்' ஆபீஸில் தற்காலிகப் பணியை ஏற்றுக்கொண்டார். அந்தப் பணி முடிந்ததும் மாணவர்க்குப் பாடம் கற்றுக் கொடுத்து, அதன் மூலமாகக் கிடைக்கும் சொற்ப வருமானத்தைக் கொண்டு ஜீவிக்கலானார்.

மீண்டும் சேஷு ஐயர் உதவி கிடைத்தது. அவர் உதவியால் நெல்லூர் கலெக்டர் இராமச்சந்திரராவ் அவர்களைக் கண்டார். இராமானுசத்தின் திறனைக் கண்ட கலெக்டர், குமாஸ்தா பணியைத் தந்தார். அதோடு, அவரது புலமைக்குமெருகேற்றும் வண்ணம் ஊக்குவித்துக் கணித ஆய்வில் ஈடுபடவைத்தார்; அவ்வப்போது வேண்டிய பண உதவியும் செய்தார். ஆனால் பிறர் உதவியில் வாழ விரும்பாத இராமானுசம், 1912ஆம் வருடத்தில் திருவளர் சென்னையில் 'போர்ட் டிரஸ்டு' ஆபீஸில் முப்பது ரூபாய் ஊதியத்துக்குக் குமாஸ்தாவாகச் சேர்ந்தார். அந்த

வேலையோடு, 'கணித ஆராய்ச்சி' வேலையிலும் தீவிரமாக ஈடுபட்டு வந்தார். அந்த ஆராய்ச்சியின் முடிவாக இரண்டு கட்டுரைக் கருநூல்கள் வெளிவந்தன.

இப்படி, நேரம் கிடைத்தபோதெல்லாம் கணித ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்த இராமாநுசத்தை நோக்கி, சேஷு ஐயர் உருவில் ஒரு நல்ல பலன் வந்தது.

ஆம்; கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தோடு இணைந்த, 'டிரினிடி' கல்லூரியில் கணிதப் பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த ஜி. எச். ஹார்டியின் தொடர்பு, அதாவது, கடிதத்தின் மூலமாக நமது கணிதக் கலைஞருக்குக் கிடைத்தது. கணித மேதையாக விளங்கும் தன்மை இராமாநுசத்துக்கு இருப்பதை நன்குணர்ந்த ஹார்டிக், உடனடியாக இலண்டனுக்கு வருமாறு கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தைக் கண்ட இராமாநுசம், "கடிதம் கிடைத்தது. மிகுந்த சந்தோஷம். ஆனால் ஒரு விஷயம். அங்கு வந்தால் என்னுடைய மதக் குறிக்கோள்களை விட்டு வாழ நேரிடுமென்று கருதுகிறேன். ஆகையால், சென்னைப் பல்கலைக் கழகத்திலேயே அந்த ஆய்வுத் திறனை நடத்த வழி செய்து தருமாறு வேண்டுகிறேன்!" என்று கேட்டுக் கொண்டார். அதன்படியே அவரும் உதவி செய்ய முயற்சி எடுத்துக்கொண்டார். அதன் விளைவாக, சென்னைப் பல்கலைக் கழகத்தில் முழுநேர ஆய்வாளராக இருக்கும் வாய்ப்பு கிடைத்தது. அதற்குத் தகுந்த ஊதியமாக மாதந்தோறும் 75 ரூபாய் வழங்கப்பட்டது.

ஓராண்டுக்குப் பின்னர் மீண்டும் ஓர் அழைப்பு வந்தது. கேம்பிரிட்ஜிக்கு வருமாறு ஹார்டி கடிதம் எழுதினார். அதை மறுத்துக் கடிதம் எழுத விரும்பாத இராமாநுசம் தம் பெற்றோர் அனுமதியோடு 1914ஆம் ஆண்டு கேம்பிரிட்ஜுக்குப் பயணமானார். அங்கிருந்த மூன்றாண்டு காலகட்டத்தில் சிறந்த கணித மேதையானார். அதாவது ஹார்டியின் பேருதவியோடு உலகுக்குச் சிறந்த கணித மேதையானார். புத்தம் புதிய சூத்திரங்களையும் தேற்றங்களையும் கண்டுபிடித்து அனைவரையும் வியக்கும்படிச் செய்தார். அல்ஜீப்ராவில் தனித்திறன் பெற்று விளங்கினார். சிறப்பாக, தொடர் பின்னத்திலும், புற ஜியாமிதித் தொடரிலும் ஈடற்றவராக பிரகாசித்தார். இவர், பிறரோடு கலந்து கண்டுபிடித்தவை டுகல்-இராமாநுசம் சமன்பாடு Dougal-Ramanujan Identity; "ரோஜர்ஸ்-இராமாநுசன்' Rogers-Ramanujan Identities' என்னும் பெயர்கள் உலகப் பிரசித்தி பெற்றன. இவையன்றி, இவரது மூல எண் தேற்றமும் (Prime Number Theorem) உலகத்தின் பல முடுக்குகளிலெல்லாம் கீர்த்திபெற்று விளங்குகிறது.

—இவ்விதமாக பல்வேறு ஆராய்ச்சிகளின் மூலமாகப் புதிய

பல பாதைகளை வருத்து வந்த இராமாநுசம் 1917ஆம் ஆண்டில் நோயாளியானார். அவரைக் குணப்படுததும் முயற்சியில் இலண்டன மாநகர மருத்துவமனை பெரிதும் முயன்றது. அங்கும் அவர் பேசாமல் இருக்கவில்லை. 'ஆராய்ச்சி' என்னும் இன்பக் கடலில் மிதக்கலானார்.

இராமாநுசத்தின் அரிய கண்டு பிடிப்புகளைக் கண்டு மகிழ்ந்த, 'ராயல் சொஸைடி'யும் 'கேம்பிரிட்ஜ் டிரினிடி கல்லூரி'யும் அவரை முக்கிய அங்கத்தினராக ஏற்றுக்கொண்டு கௌரவித்தன.

—இப்படி, இரண்டு முக்கிய ஸ்தாபனங்களுக்கும் தேர்ந்தெடுத்து கௌரவிக்கப்பட்ட முதல் இந்திய மகன் இவரே.

எப்படியோ....1920ஆம் ஆண்டில் குணப்படுத்த முடியாத நோயோடு இந்தியாவுக்கு வந்தார். அதே ஆண்டு, ஏப்ரல் 26இல், தம்முடைய பொய்யுடம்பை விடுத்துப் புகழுடம்பைப் பெற்றார்.

1887 ஆம் ஆண்டில் தோன்றி, 1920 ஆணடில் வாழ்வை முடித்துக்கொண்ட விவேகியை—புத்து மூன்று வயதுக்குள்ளாகவே குன்றின்மீதிட்ட விளக்கெனப் பிரகாசித்த கணிதக் கலைஞரை—இந்தியத் தாயின் புகழை உலகு அறியச் செய்த உத்தமர். சீனிவாச ராமாநுஜத்தைப் போற்றிப் புகழ்வோமாக.

---

அதிசயம்

# இருபத்தைந்து நிமிஷத்தில் பங்களா!

லண்டன், ஜூன் 8—ஏற்கனவே தொழிற்சாலைகளில் தயாரிக்கப்பட்ட வீட்டுப்பகுதிகளைக் கொண்டும் நவீனப் போக்குவரத்து, நிர்மாணியந்திர சாதனங்களை உபயோகித்தும் ஒரு பங்களாவை 25 நிமிஷத்தில் நிர்மாணித்துவிட முடியும். வீடுகளைக் கட்டும் இப்புதிய முறையை பிரதான பிரிட்டிஷ் கட்டுமான நிறுவனமொன்று பரீட்சார்த்தமாகச் செய்து காட்டியுள்ளது.

தொழிற்சாலைகளில் முன்கூட்டித் தயாரிக்கப்பட்ட வீட்டுப் பகுதிகள், 15 மீட்டர் நீளமும் (சுமார் 45 அடி நீளம்) 9 அடி அகலமும், (சுமார் 27 அடி அகலம்) கொண்ட மனைக்குக் கொண்டு வரப்பட்டு மேற்படி முறையின்படி ஒன்று பூட்டப்பட்டு, வீடாக அமைக்கப்படுகின்றது. பிறகு அந்த வீட்டில் தண்ணீர்க் குழாய், மின்சார வசதி முதலிய வசதிகளை அமைக்க மேலும் 35 நிமிஷ நேரம் தான் பிடிக்கிறது. இவை முடிந்ததும் குடியேறுவதற்கு வீடு தயாராகி விடுகிறது. வீட்டை நிர்மாணிக்க ஆரம்பத்தில் இருந்து கடைசி வரை ஆகும் நேரம் சுமார் ஒரு மணிதான்.

மாறுவேடத்தில்

# பத்திரிகை விற்ற இளவரசி

மக்கள் எப்படி வாழ்கின்றனர் என்று நேரில் கண்டறிய டச்சு இளவரசி பீட்ரிக்ஸ் மேற்கொண்ட ஒரு துணிகரச் செயல் ஹாலந்து நாட்டவரை ஆச்சரியத்தில் மூழ்கடித்தது.

அவர் பொய்முடியைத் தரித்துக்கொண்டார். தலையில் பச்சை நிறக்குட்டையை அணிந்துகொண்டார். தொள தொளப்பான மழைக் கோட்டைப் போட்டுக்கொண்டு, கண்ணாடியை மாட்டிக்கொண்டார். பிறகு ரட்சண்ய சேனை ஊழியர் ஒருவரின் சைக்கிளை எடுத்துக் கொண்டு ஆம்ஸ்டர் டாமின் துறைமுக வட்டாரத்தில் உள்ள "கிராண்ட்ரோட்" ஜில்லாப் பகுதிக்குக் கிளம்பினார்.

ரட்சண்ய சேனையின் வாரப் பத்திரிகைப் பிரதிகளை விற்றபடி அவர் வழக்கமாக விபசாரிகள் நடமாடும் துறைமுகப்பகுதி ஓட்டல்களில் புகுந்து சுற்றிப்பார்த்தார்.

"தி டெலிகிராப்" என்னும் பத்திரிகையின் சாமர்த்தியமான புகைப்படக்காரர் மட்டும் கண்டு பிடிக்கவில்லை என்றால், ஒருவருக்குமே இளவரசியின் மாறுவேடப் பயணம் தெரியவந்திருக்காது. பீட்டர் ஜொன்னேவிட் என்னும் அவர் ஒரு ஓட்டலில் உட்கார்ந்து பீர் குடித்துக்கொண்டிருந்தபோது இளவரசி உள்ளே நுழைவதை அவர் பார்த்துவிட்டார். சற்றுத் தூரத்திலிருந்தபடி யாருக்கும் தெரியாமல் இளவரசியைப் பின்தொடர்ந்து ரகசியக் காவலாளர்களையும் அவர் ஏமாற்றி விட்டு இளவரசியை இருநோட்டோப் படங்கள் பிடித்தார். பிறகு என்ன? அப்புகைப் படங்கள் ஐரோப்பாவில் சுமார் பாதிப் பத்திரிகைகளில் முதல் பக்கத்தில் வெளியிடப் பட்டன.

---

## பழங்கள் கெடாமல் பாதுகாக்க மெழுகுப் பூச்சு!

புதுடில்லி, மே 26—பழங்களுக்கும் காய்கறிகளுக்கும் மெழுகுப்பூச்சுக் கொடுப்பதன் மூலம் அவற்றை நீண்ட நாட்களுக்குக் கெடாமல் பாதுகாக்க முடியும் என்று மைசூரிலுள்ள மத்திய உணவு நுட்ப ஆராய்ச்சிக் கழகம் நிரூபித்துள்ளது. இதனால் இந்தியாவில் பழங்கள், காய்கறிகளின் விற்பனை வசதியில் அபிவிருத்திக்குச் சிறந்த தோதுக்கள் ஏற்பட்டுள்ளன.

இங்கு அனேகமாக எல்லா வர்த்தகப் பழங்கள், காய்கறிகளையும் விரிவான சோதனைகள் நடத்தப்பட்டதிலிருந்து மா, ஆரஞ்சு போன்ற பழங்களும் உருளை, தக்காளி போன்ற காய்கறிகளும் மெழுகுப் பூசப்பட்டால் பல நாட்கள் கெடாமல் இருக்கின்றன என்பது தெளிவாகியுள்ளது.

மேலும், மெழுகு பூசுவதால் பழங்களிலும் காய்கறிகளிலும் பளபளப்பு அதிகமாகிறது. இது அவற்றின் விலையை உயர்த்து

கிறது. அறுவடை ஆனதும் உடனடியாகவிற்று விட வேண்டும் என்ற நிர்ப்பந்தமின்றி அதிக நாள் சேமித்துவைக்கவும் அதிக தொலைவிடங்களுக்கு அனுப்பி வைக்கவும் இந்த முறை விவசாயி களுக்கு உதவியாக உள்ளது.

மெழுகுப்பூச்சும் முறை சுலப மானது. அதிகச் செலவில்லா தது. தோட்டத்திலேயே இதை நிறைவேற்றிவிட முடியும். மாம் பழம், ஆரஞ்சு, ஆப்பிள் போன் றவற்றுக்கு 100 பழங்களுக்கு 13 காசுகள் விதமும், 100 பழங் கள் கொண்டதொரு வாழைக் குலைக்கு ೧ காசுகள் விதமும்தான் செலவு பிடிக்கும் என்று கணக் கிடப்பட்டுள்ளது.

---

## கண்ணாடிப் பெட்டிக்குள் வளர்ந்த குழந்தை

---

தென் இங்கிலாந்து ஜுன்.—2 பிறந்ததிலிருந்து ஒரு கண்ணாடிப் பெட்டியில் வளர்ந்த ஒரு பெண் குழந்தை இன்று தனது முதல் பிறந்த நாளைக் கொண்டாடியது.

தனது ஒரு வயது வாழ்வின் பெரும்பகுதியைக் கண்ணாடிப் பெட்டிக்குள் கழித்தது. அந்தக் குழந்தை அழகாகவும் ஆரோக் கியமாகவும் திடகாத்திரமாகவும் இருக்கிறது.

கண்ணாடிப் பெட்டியில் வளர்ந்த இந்தக் குழந்தையின் பெயர்,ஸாரா பிராங்க்லின்.பிரிட் டனில் வேறு எந்தக் குழந்தை யும் கண்ணாடிப் பெட்டிக்குள் வளர்ந்ததில்லை. ஸாரா குறை மாதத்தில் பிறந்த குழந்தை.

யு. எஸ். சர்வகலாசாலை பேரா சிரியர் ஒருவர் விண் வெளிக்கப் பல் அமைப்பு முறையில் தயா ரித்த ஒரு கண்ணாடிப் பெட் டியை குழந்தை ஸாரா தனது இல்லமாகக் கொண்டது. கிருமி கள், பூச்சி, வாட்சி முதலியன குழந்தைகளைப் பாதிக்காமல் இருக்கும் பொருட்டே இந்த ஏற்பாடு.

குழந்தை ஸாராவுக்கு 6 மாதம் பூர்த்தியாகும் வரை, அவள் உணவு புசிப்பதற்கு மாத்திரம் வெளியே எடுக்கப்படுவது வழக் கம். இப்போது அவள் தனது கண்ணாடி வீட்டிலிருந்து வெளி யே வந்து உலாத்துகிறாள். ஓடு கிறாள். ஆடுகிறாள். தூங்குவ தற்கு மாத்திரம் கண்ணாடி வீட் டிற்குச் செல்கிறாள்.

கண்ணாடிப் பெட்டியில் வளர்ந்த காரணமாக மற்றக் குழந்தைகளுக்கும் ஸாராவுக்கும் அதிக வித்தியாசம் இல்லை. ஸாரா சிறிது வெளுத்திருக்கி றாள்.

ஸாராவின் தந்தை கிரஹாம் பிராங்க்ளின் குழந்தைகளின் பழக்கங்களை ஆராயும் நிபுணரா வார். கண்ணாடிப் பெட்டிகளுக் குள் வைத்துக் குழந்தைகளை வளர்க்கும் முறையை அமெரிக் காவில் 200 குழந்தைகளுக்கு அமல் நடத்திப் பார்த்ததாகவும் இந்தச் சோதனைகள் மூலம் குழந் தைகளின் அறிவை வளர்க்க முடி கிறதென்றும் ஆரோக்கியத்தை யும் பாதுகாக்க முடிகிறதென்றும் திரு பிராங்க்ளின் கூறுகிறார்.

---

## சிங்கத்தின் மூக்கைக் கடித்து

### சகோதரனை மீட்டவீரர்

லிஸ்பன், ஜூன் 29—சிங்கம் தன் சகோதரனைக் கொன்றுவிடாமல் காப்பாற்றுவதற்காக சிங்கத்தின் மூக்கை ஒரு மனிதன் கடித்ததாக போர்ச்சுகீசிய செய்தி ஸ்தாபனம் லூஸிடானியா இன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சகோதரர்களான லூஸியோ, ஜோகிம் சான்ஸா இருவரும் அங்கோலாவில் வேட்டையாடப் போயிருந்தனர். அப்போது சிங்கமொன்று லூஸியோ மீது பாய்ந்து அவரைத் தரையில் கிடத்தி மார்பில் அழுத்திக் கொண்டிருந்தது.

ஜோகிம் சுற்று முற்றும் பார்த்தார். தன்னுடைய வேலையாள் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு பயந்தோடி விட்டதைக் கண்டார். அதனால் சிங்கத்தைச் சுட்டுக் கொன்று சகோதரனை மீட்க முடியாமல் இருந்தார். வேறு வழியில்லாமல் போகவே ஜோகிம் சிங்கத்தின் மீது பாய்ந்தார். அதைத் தலைக்கீழாகக் கவிழ்ப்பதற்குப் போராடினார். கைகளினால் ஒன்றும் செய்ய முடியவில்லை. பின்பு வெடுக்கென்று சிங்கத்தின் மூக்கைப் பிடித்துக் கடித்தார். இந்த யுக்தி பலித்தது. சிங்கம் குட்டிக்கரணம் அடிக்க செய்தார். அதுதான் சமயமென்று லூஸியோ வேகமாக நழுவிச் சென்றார். சிங்கத்தைச் சுட்டு வீழ்த்தினார். சிங்கத்துடன் நடத்திய போராட்டத்தில் காயமடைந்த சகோதரர்கள் இப்போது நம்பூலா ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகிறார்கள். அவர்களுக்கு அபாயமொன்றுமில்லை.

---

## 1980-ல் உலக முழுவதும் பஞ்சம்

நியூயார்க், மார்ச். 27-"உலகில் மக்கள் தொகை வேகமாகப் பெருகிவருகிறது. ஆனால், அதற்குத் தகுந்தாற்போல் உணவு உற்பத்தி பெருகவில்லை. இந்த நிலைமை நீடித்தால் 1980-ஆம் ஆண்டு உலகம் முழுவதும் பஞ்சம் வந்துவிடும்" என்று உணவு, விவசாயம்பற்றிய ஐ. நா. ஸ்தாபன டைரக்டர் டாக்டர். பி. ஆர். சென் கூறினார்.

---

## கடல் பாசி—சத்தான உணவு

சென்னை, மார்ச். 27—"கடலிலிருந்து கிடைக்கும் பாசியை, மண்டபத்தில் உள்ள ஆராய்ச்சி நிலையத்தில் பரிசோதனை நடத்தி, அதிலுள்ள நாற்றத்தைப்போக்கி, சத்துள்ள உணவுப் பண்டம் தயாரிக்கும் முறையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதற்கான பூர்வாங்க திட்டம் தூத்துக்குடியில் விரைவில் ஏற்படுத்தப்படும்" என்று கூறினார் மந்திரி ராமையா.

---

## தேசிய ஒருமைப்பாடு பிரதிக்ஞை சர்க்காரின் உத்தரவு

சென்னை, ஜூலை 26—மாணவர்கள் தினசரி வகுப்புகள் தொடங்கு முன் தேசிய கீதம் பாடி ஒருமைப்பாடு பிரதிக்ஞை எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற சர்க்கார் உத்தரவு பள்ளிக்கூடங்களில் அமலாகும்; கல்லூரிகளைப் பொறுத்த வரையில் தான் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

சர்க்காரின் புது உத்தரவை விளக்கி முதன் மந்திரி திரு. பக்தவத்ஸலம் இன்று நிருபர்களிடம் கூறியதாவது:—

பள்ளிக்கூடங்களில் எல்லா மாணவ மாணவிகளும் ஒவ்வொரு நாள் காலையிலும் குறிப்பிட்ட நேரத்தில் ஓரிடத்தில் கூட முடியும்; ஆனால் கல்லூரி மாணவர்களின் வகுப்பு நேரம் மாறுபட்டிருப்பதால் குறிப்பிட்ட நேரத்தில் எல்லோரும் கூட முடியாமலிருக்கிறது. சில கல்லூரித் தலைவர்கள் இந்தக் கஷ்டத்தை ஏற்கனவே சர்க்காருக்குச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

இதன் பேரில், உத்தரவின் அமலை கல்லூரிகளில் நிறுத்தி வைக்குமாறு, சர்க்கார் சொல்லியிருக்கிறது. இருந்தாலும், சில கல்லூரிகள் ஏற்கனவே இவ்வுத்தரவை அமல் நடத்தி வருகின்றன; அங்குள்ள மாணவர்கள் ஒருமைப்பாடு பிரதிக்ஞை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். இப்படி நடந்து வருமிடங்களில் அது தொடர்ந்து நடக்க அனுமதிக்கப்படும் என்று முதன் மந்திரி தெரிவித்தார்.

---

## "ஆரம்பக் கல்வி" பத்திரிகை இனாம்

சென்ற ஆண்டு எமது வேண்டுகோளுக்கிணங்கி, பற்பல எயிடெட் பாடசாலை மானேஜர்களும், தலைமை ஆசிரியர்களும், எமது பாடப் புத்தகங்களை வைத்து ஆதரித்தமைக்கு எமது அன்பு கலந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

அம்மாதிரியே 1965–66 ஆண்டுக்கும் மீண்டும் எமது பாட புத்தகங்களைத் தொடர்ந்துவைத்து எமது பத்திரிகையை ஆதரிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

இவ்வாண்டும் எமது பாட புத்தகங்களைத் தொடர்ந்து வைத்துக்கொள்ளும் தலைமை ஆசிரியர்கள், 1965–66–க்குத் தொடர்ந்து வைத்துக்கொள்வதாக, நமது அலுவலகத்திற்கு ஜூலை 31–ம் தேதிக்குள் ஒரு கார்டு மூலம் தகவல் அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். அவ்விதம் தகவல் அனுப்பும் பாடசாலையின் பெயர்கள் 1965–66 ஆண்டுக்கு மறுபடியும் புதிதாக ரிஜிஸ்டர் செய்யப்பட்டு வழக்கம்போல் நமது ஆரம்பக் கல்வி பத்திரிகையை இனாமாகத் தொடர்ந்து அனுப்பப்படும். புத்தகங்கள் வாங்கும் புத்தகக் கடை ரசீதுகளை (Cash Bills) அலுவலகத்திற்கு 1965 ஜூலைமாதம் 31ஆம் தேதிக்குள் அவசியம் அனுப்பிவிடவும். சென்னை அலுவலகத்திற்கு அனுப்பப்படும் ஆர்டர்களுக்கு Billகள் அனுப்பத் தேவையில்லை. ஆர்டர்களைக்கொண்டே பெயர்களை ரிஜிஸ்டர் செய்யப்படும்.

# அமெரிக்க அரசியல் சட்டம் உருவான வரலாறு

**1787**-ம் ஆண்டு செப்டம்பர் மாதம்; வெப்பம் மிகுந்த ஒரு நாளில், ஒரு சிலர் சேர்ந்து முக்கிய பத்திரம் ஒன்றில் கையெழுத்திட்டனர். சுதந்திரத்தின் வரலாற்றிலேயே மிக முக்கியமான பத்திரம் இது. ஆம்; இதுதான் அமெரிக்க அரசியல் சட்டம். அன்று செப்டம்பர் 17-ம் தேதி; அவர்கள் கையெழுத்திட்ட இடம் பென்ஸில்வேனியா மாநிலத்துச் சட்ட மன்றம். பிலடெல்பியாவில் இருக்கிறது. இப்பொழுது இதற்குச் சுதந்திர மன்றம் என்று பெயர்.

கட்டிடம் ஏற்கனவே வரலாற்றுப் புகழ் பெற்றிருந்தது. சுதந்திரப் பிரகடனம் பிறந்தது இந்தக் கட்டிடத்தில் தான். "கான்டினன்டல் காங்கிரஸ்" என்ற பெயருடன், அமெரிக்கப் புரட்சியில் ஈடுபட்டுப் போராடிய 13 காலனிகளின் பிரதிநிதிகளின் சபை இங்குதான் கூடிற்று.

அரசியல் சட்ட சபை நான்கு மாதம் பிலடெல்பியாவின் வெப்பத்தையும் பொருட்படுத்தாது பாடுபட்டது. யாரும் உள்ளே வராமல் இருக்கக் கதவுகளையும் சாளரங்களையும் மூடிக்கொண்டு வேலை செய்தனர் பிரதிநிதிகள். பிரதிநிதிகளுக்குள் பல கருத்து வேற்றுமைகள் இருந்தன. அவர்கள் பிரதிநிதிகளாக இருந்த மாநிலங்களிடையேயும் வேற்றுமை இருந்தது. ஆனால், எல்லாப் பிரதிநிதிகளும் ஒரு இலட்சியத்தில் ஒன்றுபட்டிருந்தனர். "இன்னும் சிறந்த (அமெரிக்க யூனியன் ஒன்றை அமைக்கவேண்டும்" என்பதுதான் இந்த இலட்சியம். இதை அடைவதற்கு, இளம் குடியரசில் வேற்றுமை விதைகளை ஊன்ற அவர்கள் விரும்பவில்லை; மாறாக விட்டுக் கொடுக்க அவர்கள் தயாராக இருந்தனர்.

காங்கிரசில் (சட்டமன்றம்) இருக்கவேண்டிய பிரதிநிதிகள்

டாக்டர் பிலிப்ஸ் பிராட்லி

குறித்துத்தான் முக்கிய கருத்து வேற்றுமை ஏற்பட்டிருந்தது. இருசபைகளுக்கும் (பிரதிநிதிகள் சபை, செனெட் சபை) மக்கள் தொகையின் அடிப்படையின்பேரில் பிரதிநிதிகள் தொகை நிர்ணயிக்க வேண்டுமென்று பெரிய மாநிலங்கள் விரும்பின. சிறிய மாநிலங்கள் சமமான பிரதிநிதித்துவம் வேண்டுமெனக் கூறின. கனெக்டிக்கட் மாநிலப்

பிரதிநிதிகள் ஒரு சமரச யோசனையைத் தெரிவித்தனர். மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு (கீழ்) பிரதிநிதி சபைக்குப் பிரதிநிதிகளை அனுப்புவது; மேல் சபைக்குச் சமமான எண்ணிக்கையில்பிரதிநிதிகளை அனுப்புவது என்பதுதான் இந்தச் சமரச யோசனை.

இன்னும் வேறு சமரச யோசனைகளும் இருந்தன. அடிமைகள் பிரச்னை, வர்த்தகத்தை ஒழுங்கு படுத்துதல், ஆகியவை குறித்து வடக்கு மாநிலங்களுக்கும் தெற்கு மாநிலங்களுக்கும ஏற்பட்ட சமரசம் இவற்றில் ஒன்று. புதிய மாநிலங்களுக்கும் அரசியல் சமத்துவம் பற்றி ஏற்பட்ட சமரசம் இன்னொன்று. அசல் 13 மாநிலங்களின் மிக விரிவான பிரதேசங்களில் புதிய மாநிலங்கள் விரைவில் ஏற்படும் என்று உணரப்பட்டது. இன்னும் வேறு பிரச்னைகள் பிரதிநிதிகளிடையே பிளவு உண்டு பண்ணின. ஆனால், இவை அனைத்தும் இறுதி நகலில் தீர்க்கப்பட்டன. அரசியல் சட்டம் உறுதியான, அமுல் செய்யக்கூடிய பத்திரமாக உருப் பெற்றது. சில பிரச்னைகளில் பிரதிநிதிகள் பெரிதும் ஒத்துப் போயினர். இவற்றில் ஒன்று, புதிய நாட்டில் "பெடரல்" (மத்திய) அரசாங்க அமைப்புப் பற்றியது. மத்திய அரசாங்க, மாநில அரசாங்க அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டன. புதுப்புது நிலைகள் தோன்றுகையில் அவற்றிற்கேற்ப எதிர்காலத்தில் மாற்றங்கள் செய்வதற்கும் வகைசெய்யப்பட்டது.

ஒற்றுமை கண்ட இரண்டாவது துறை; எல்லா அரசாங்கங்களின் அதிகாரமும், "வரம்பிற்கு உட்பட்டது" என்பது ஆகும். தனி நபர்களுக்கு ஆதாரமான சில உரிமைகள் மனிதன் என்ற முறையில் உண்டு என்றும் இந்த உரிமைகளை எந்த அரசாங்கமும் குறைக்க முடியாது என்றும் அரசியல் சட்டத்தை அமைத்தவர்கள் கருதினர். இக் கொள்கை 13 அசல் மாநிலங்களின் (இப்பொழுது 50 மாநிலங்கள்) அரசியல் சட்டங்களின் உரிமை சாஸனத்தில் சேர்க்கப்பட்டிருந்தது. இது பல மாநிலங்களின் கோரிக்கைக்கு இணங்கதேசிய(யு.எஸ்) அரசியல் சட்டத்திலும் சேர்க்கப் பட்டது.

கருத்து ஒற்றுமை ஏற்பட்ட மூன்றாவது துறை, இரண்டாவது துறையைச் சிறந்த முறையில் உறுதி செய்வது பற்றியதாகும். சட்ட மன்றத்து அதிகாரம், நிர்வாகத்துறை அதிகாரம், நீதி மன்ற அதிகாரம் ஆகியவற்றைத் தனித்தனியாக வரையறுக்கும் கொள்கை இது. "கண்காணிப்பும் சமநிலையும்" என்ற ஒளிவுமறைவற்ற சிறந்த முறையின் வழியாக இக்கொள்கை அமுல் செலுத்தப்பட்டது. இதனால் அரசாங்கத்தின் எந்தக் கிளையும் மற்றக் கிளைகளின் மீது நிரந்தரமாக அதிகாரம் செலுத்த முடியாமல் போயிற்று. எடுத்

ஆக் காட்டாக, சட்டமன்றம் நிறைவேற்றிய ஒரு மசோதாவை ஜனாதிபதி ரத்து அதிகாரம் பயன் படுத்தி நிராகரிக்கலாம். ஆனால், இரு சபைகளும் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மை வோட்டுகள் பெற்று ஜனாதிபதி நிராகரித்த மசோதாவை நிறைவேற்றிவிடலாம். மற்ற நாடுகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்வது ஜனாதிபதியின் பொறுப்பு. ஆனால், ஒவ்வொரு ஒப்பந்தத்தையும் மூன்றில் இரண்டு பங்கு பெருவாரி வோட்டுக்களின் பேரில் செனெட்சபை அங்கீகரித்தாக வேண்டும்.

ஆபிரகாம் லிங்கன் சொன்ன "மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் மக்களின் அரசாங்கம்" ஏற்படக்கூடிய புதிய சகாப்தத்தைத் தோற்றுவித்தது இந்த அரசியல் சட்டம். ஜனநாயகக் கொள்கைகளின் அடிப்படையில் எழுத்தில் வடிக்கப் பெற்ற அரசியல் சட்டம் அப்பொழுது வேறெங்கும் இல்லை. அமுல் செலுத்திப் பார்க்கப்பட்டதுமில்லை. இறுதியான ஆதிபத்ய உரிமை மக்களுடையது; இந்த உரிமை அரசாங்கத்தின் மூலம் செயல் படுகிறது; இந்த அரசாங்கமும் சட்ட நெறியின் வரம்பிற்குட்பட்டது. இவையே ஜனநாயகத்தின் அடிப்படைக் கொள்கைகள்.

1787-ம் ஆண்டில் உருவான அரசியல் சட்டம் தோற்றுவித்த அரசாங்க அமைப்பு மாற்றப் படாமல் பெரிதும் அப்படியே இருக்கிறது.

பல புதிய பிரச்சினைகள்—பொருளாதார, சமூகப் பிரச்னைகள்—சென்ற 175 ஆண்டுக் காலத்தில் தோன்றின என்பது உண்மையே. அடிமைகள் குறித்தும் இன்னும் பல அக்கறைகளினாலும் ஏற்பட்ட மோதல்கள் 1861-க்கும் 1865-க்கும் இடையே உள்நாட்டுப் போரை மூட்டின. 1863-ல் லிங்கன் விடுத்த அடிமை விடுதலைப் பிரகடனம் அடிமைகளுக்கு விடுதலை அளித்தது. இந்தப் பிரகடனம் உள்நாட்டுப் போருக்குப் பிறகு, அரசியல் சட்டத்தில் செய்யப்பட்ட ஒரு திருத்தத்தின் மூலம் அமுல் செய்யப்பட்டது. 1920-ஆண்டில் செய்த இன்னொரு திருத்தம் மூலம் நாடு முழுவதிலும் பெண்களுக்கு வோட்டுரிமை வழங்கப் பட்டது.

சட்டமன்ற நடவடிக்கையும் மத்திய அரசாங்க, மாநில அரசாங்க நடவடிக்கையும் அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு இருக்கின்றனவா என்பதை முடிவு செய்வது தலைமை நீதிமன்றமாகும்.

—அமெரிக்கன் ரிப்போர்ட்டர்.

# தக்காளியின் கதை

சின்னஞ்சிறு செம்பழமாக (பெரி) இருந்து பெரிய உருண்டை வடிவத்தை தக்காளி பெற்றது ஒரு வெற்றியாகும். அது பல ஆண்டுகளாகப் பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டு வந்திருக்கின்றது. "விண்ணுலக ஆப்பிள்", "காதல் ஆப்பிள்", "பொன் ஆப்பிள்", "மூர் ஆப்பிள்" என்று 1965ம் ஆண்டு வரை அது பல விதமாக அழைக்கப்பட்டு வந்துள்ளது; அந்த ஆண்டில்தான் அது "டொமேடோ" (தக்காளி) என்னும் பெயர் பெற்றது. மெக்ஸிகோவில் அது தோன்றிய பிறகுதான் அது அவ்வாறு அழைக்கப்பட்டது. அதன் பிறகு பல்வேறு மொழிகளில் அதற்கு அப்பெயர் ஏற்பட்டு விட்டது.

## எங்கிருந்து வந்தது?

தக்காளியானது மத்திய அல்லது தென்னமெரிக்காவில் தோன்றியிருக்கலாம்; ஆனால் அதன் மூலத்தைக் குறித்துப் பல்வேறு விதமான உரிமைகள் எழுப்பப்படுகின்றன. இந்தியாவே அதன் தாயகமென்பர் சிலர்; சீனம் என்பாருமுள்ளனர். ஆனால் பெருவில்தான் அது முதன் முதலாகப் பயிர் செய்யப்பட்டது என்று வரலாற்று ஆசிரியர்கள் அடித்துச் சொல்கின்றனர். பொன்னைத் தேடிச் சென்ற ஸ்பானியர்கள் அங்கு பொன் ஆப்பிளைக் கண்டனர். பெருவியத் தோட்டங்களில் அது ஏராளமாக வளர்ந்து கிடந்தது. அதனால் எல்லோரும் விரும்பி யுண்ணும் பழமாக அதைப் பாப்ப முடிந்தது. இன்று போலவே அன்றும் அதன் பொன்னிறம் அல்லது குருதிச் சிவப்பு நிறமானது அதற்குப் பெருமைக்குரிய இடத்தைக் கொடுத்திருந்தது. பெருவியர்கள் தக்காளியைப் பற்றிப் பெரிதும் சிந்தித்திருந்ததால், அவர்களது பெயர் பெற்ற பாண்டங்களை அழகு படுத்தும்போது தக்காளியையும் சேர்த்துத் தீட்டியிருந்தனர்.

## இது எந்த இனம்?

தக்காளி ஒரு காய்கறியாக உண்ணப்பட்டபோதும் அது ஒரு செடியின் பழமேயாகும். அதைப்பற்றி இயற்கையாகவே பல வழிவழிக் கதைகள் வழங்கி வருகின்றன. அது இரவில் மலரக்கூடிய தீங்கான செடியினக் குடும்பத்தைச் சேர்ந்ததாகும். இந்த இனத்தில் அருஞ்சுவையூட்டும் கத்தரிக்காய், இனிப்பு மற்றும் கார மிளகு, உருளைக் கிழங்கு முதலியன சேர்ந்திருக்கின்றன; இவற்றில் எதனிடமும் உயிருக்குத் தீங்கு விளைவிக்கும் மேற் கூறிய இரவில் மலருஞ் செடியினத்தின் தன்மைகள் இல்லை.

## அஞ்ச வைத்த பழம்

அமெரிக்கக் கண்டத்தில் ஆதி காலத்தில் குடியேறியவர்களில் பலர் தக்காளியை முதன் முதலாகக் கண்டதும் அதன் அழகிற்கு அஞ்சினர். அதை அழகிய ஆனால் ஆபத்தான அணங்குடன் ஒப்பிட்டுப் பார்த்தனர். துயருற்ற காதலன் அல்லது தற்கொலை செய்து கொள்ளப் போகிறவர் மட்டுமே தக்காளியுடன் விளையாடுவதைச் சிந்தித்துப் பார்க்க முடியும் என்று எழுதிவைத்திருக்கின்றனர். பாவத்தின் மறு சொல்லாக அது பிரிட்டனில் கருதப்பட்டது; அறுவடை விழாக்களில் தக்காளிக்கு பெருமைக்குரிய இடத்தைத்தர மதத் தலைவர்கள் மறுத்தனர்; நெறியற்றதென்றுகூறி அதைத் துர்திருஷ்டமானது என்று அவர்கள் ஒதுக்கினர்.

## எதிர்ப்பில் செழித்த பழம்

இவ்வளவெல்லாம் இருந்தும் தக்காளி செழித்தது; ஆனால் ஆரம்பத்தில் அது வியப்புக்குரிய பொருளாகவே இருந்தது. செயலூக்கமுள்ள ஸ்பானியர் பல புதிய பொருட்களை அறிமுகப் படுத்தியது போல தக்காளியையும் ஐரோப்பாவுக்குக் கொண்டு வந்தனர். அதை முனைந்து பயிர் செய்வது குறித்து அவர்கள் அப்போது எண்ணிப் பார்க்கவில்லை. நீண்ட கடற் பயணத்தையும், உணவையும் பதனமாக எடுத்துச் செல்வதற்கு அக்காலத்திலிருந்த நிலையையும் எண்ணிப் பார்க்கும்போது, அமெரிக்கக் கண்டத்திலிருந்து தக்காளியை அவர்கள் எவ்வாறு எடுத்துச் சென்றிருக்கலாம் என்பது மர்மமாக இருக்கிறது. ஆனால் எப்படியோ அவர்கள் கொண்டு சென்றனர். உண்ணக் கூடியதாகவும் அது மீண்டும் பிழைத்து விட்டது.

## தக்காளியும் போர்த்துக்கீசியரும்

அவர்களைப் போலவே அந்நாட்களில் தீரச் செயல்களில் வல்லவ

---

### கல்விச் செல்வம் :

கல்விச் செல்வம்தான் நமக்குரிய அரசியல் பாதுகாப்பு. இந்த ஓடத்திற்கு வெளியே எல்லாம் வெள்ளக் காடுதான்.

—எச். மான்

ஒரு குழந்தை கனவானாகவோ, சீமாட்டியாகவோ இருக்கும்படி கல்வி போதிக்க வேண்டாம்; ஆனால் மனிதனாகவும், ஸ்திரீயாகவும் இருக்கக் கற்பியுங்கள்.

—ஹெர்பர்ட் ஸ்பென்ஸர்

கற்பிப்பதன் இரகசியம் மாணவனுக்கு மதிப்பளிப்பதில் இருக்கின்றது.

—எமர்ஸன்.

பொதுக் கல்வியே அரசாங்கத்தின் முதல் இலட்சியமாயிருக்க வேண்டும்.

—நெப்போலியன்.

ராயிருந்த போர்த்துகீசியர் தக்காளியைச் சமையற்கலையில் புகுத்தினர்; அவர்கள் தக்காளியைக் கொண்டு மணச்சுவையூட்டுவது "போர்த்துகீசியப் பண்டம்" என்னும் அளவுக்குச் சமையற்கலையில் தக்காளியைச் சேர்த்தனர். தாராளமாகத் தக்காளியின் மணச்சுவையின்றி உண்ணும் உணவை மத்தியதரைக் கடற்பகுதியில் வாழும் மக்களில் ஒரு சிலரே பயனுள்ள உணவாகக் கருதுகின்றனர்.

## "காதற் தக்காளி"

சமையற்கலையில் புதிய கண்டுபிடிப்புகளைச் சேர்ப்பதில் புகழ் பெற்று விளங்கும் பிரஞ்சுக்காரர்கள் ஆரம்பத்திலேயே தக்காளியைப் பயன்படுத்தத் தொடங்கி விட்டனர். அவர்கள் தான் அதை முதன் முதலாக "காதல் ஆப்பிள்" என்று அழைத்தனர். காதலின் சின்னமான சிவப்பு ரோஜாவின் நிறத்தை யொத்ததாகத் தக்காளியின் சிவப்பு நிறமிருந்ததால் அதைக் "காதல் ஆப்பிள்" என்றனர். ரோஜாப் பூக்களுடனும், காதலுடனும் தக்காளி இணைத்துப் பேசப்படுவது உச்சக் கட்டத்தை அடைந்தது. காதற் பாங்களை சர் வால்டர் ராலேன் தனது அன்புக்குரிய முதலாம் எலிசபெத் அரசிக்குத் தக்காளிச் செடியை அன்பளிப்பாகக் கொடுத்தான் என்று வரலாறு கூறுகிறது. அதனால் காதலியர்க்குத் தக்காளிச் செடியை அளிப்பது அந்நாளில் ஒரு நாகரிகப் பழக்கமாகியது. எலிசபெத்தின் அரசவையைச் சேர்ந்த அனைவரும் தமது காதலியர்க்குத் தக்காளிச் செடியைக் காதற் சின்னமாக அனுப்பி வைத்தனராம். அச் செடிகளில் எவை செழித்து வளர்ந்து, பூத்துக் காய்த்தனவோ, அவை மலர்க் கூடைகளைவிட விரும்பி ஏற்கப்பட்டன. ஷேக்ஸ்பியர் தக்காளியைப் பற்றிப் பாடல் எதுவும் பாடியதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் டிக்கன்ஸ் அதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

அடிநாட்களில் தக்காளியில் பலவகை இருந்ததாகத்தெரிகிறது. பொன்னிறமானதும், சிவப்பானதுமான தக்காளிகள் இன்றும் இருந்தபோதிலும் சிவப்புத் தக்காளிகளைத் தவிர நாம் வேறு வகைகளை அரிதாகவே காண்கிறோம். நியூஜிலாந்தில் நேர்த்தியான மரத்தக்காளிகள் உள்ளன.

## நச்சுக் கதை

யாரோ எங்கோ நச்சுக்கதையொன்றைக் கட்டிவிட்டனர். அக் கதையைத் தகர்த்துத் தக்காளி உண்ணக் கூடியதுதான் என்பதை மெய்ப்பிப்பதற்காக முதல் தக்காளியை ஆண்மையுடன் உண்டுகாட்டியவருக்குநாம்நன்றிக் கடன்பட்டிருக்கிறோம். அதன் பிறகு மக்கள் தக்காளியை அவித்தனர், பொரித்தனர், சுட்டனர், அதைக் கொண்டு சுவைமிக்க பல பண்டங்களைச் செய்தனர். தக்காளியைச் சமைக்கும்போது அது நிறத்தையோ மணத்தையோ

இழப்பதில்லை என்பது கண்டறியப்பட்டது. பல்வேறு விதமான கூட்டுச் சாக்குகளுடன் நன்கு கூடுவதுடன் தனியாகவும் அது சுவையுணவாக விளங்குகிறது.

## பல்சுவைக் கூட்டு

தக்காளி குடிப்பதற்கேற்ற சிறந்த பானகம் என்பதைச் சில கெட்டிக்காரர்களான சமையற்காரர்கள் கண்டனர். அதைக் காரமாகவும், இனிப்பாகவும் வழங்கலாம். பச்சைத் தக்காளியிலிருந்து செய்யும் பழப் பாகு அருஞ்சுவையாக இருக்கும். பச்சைத் தக்காளிகளை இறைச்சியைப் போல் வறுக்கலாம். பல இறைச்சிப் பண்டங்களில் சேர்த்துக்கொள்ளவும் செய்யலாம்.

நன்கு பழுத்த தக்காளியை அப்படியே முழுசாக அல்லது துண்டாக அறுத்து வழங்கலாம். ஆனால் அப்படியே செடியிலிருந்து கொண்டுவந்த புத்தம் புதிய பழமாக இருக்கவேண்டும். பச்சடியாகவும் ஆக்கிச் சாப்பிடலாம். அதன் தோலை உண்ணலாமாயினும் சில வேளைகளில் அது முரடாயிருக்கும். அதனால் அதன் தோலை முதலில் உரிப்பது நல்லது. அது மிகவும் எளிது. தக்காளித் தோலையுரிப்பதற்கு மூன்று சிறந்த வழிகளைக் கீழே கொடுத்திருக்கிறேன்.

## தோலையுரிக்க எளிய வழிகள்

1. கவர்முள்ளில் தக்காளியைக் குத்தித் தோல் கொப்பளிக்கும் வரையில் நல்ல சூட்டில் காட்டவும். அதன் பிறகு தோலை எளிதாக உரித்துவிடலாம். இவ்வாறு தோலை யுரிப்பதால் தக்காளிக்கு நல்ல மணமிருக்கும்.

2. கொதிநீரில் தக்காளியைப் போட்டுச் சில விநாடிகள் வைத்திருக்கவும். பிறகு குளிர்ந்த நீரில் அதை எடுத்துப்போடுக. இப்போது தோலை எளிதாக உரிக்கலாம்.

3. உண்மையிலேயே பழுத்த தக்காளியைக் கத்தியின் மழுங்கிய பக்கத்தைக் கொண்டு நசுக்கியே உரித்துவிட முடியும்.

தக்காளியைப் பச்சடியாக வழங்குவதானால் நன்றாக அதைக் குளிரவைத்துக்கொள்க.

## கனியவைக்க

பறித்தபோது தக்காளி நன்றாகப் பழுத்திருக்க வில்லையானால்,

---

**அநீதி :**

அநீதி யிழைப்பவன் அநீதிக்கு உட்பட்டவனைவிட அதிகத் துயரடைவான்.

—பிளேட்டோ.

அநீதியைத் தாங்குவதைவிட, அநீதி யிழைப்பது மேல் என்று எவரும் சொல்லத் துணியார்

—அரிஸ்டாட்டல்.

உனக்கு அநீதி இழைக்கப்பட்டால் அமைதியாகப் பொறுத்துக்கொள் ; நீ அதைச் செய்வதில் தான் துக்கம் ஏற்படும்.

—டெமாக்ரீடஸ்.

பழுப்பு நிறத்தாள்பை யொன்றில் போட்டு மூன்று நான்கு நாட்களுக்கு இருட்டில் வைத்திருக்கவும். ஆனால் அந்த இடத்தில் ஈரப்பசை இருத்தலாகாது. அவ்வாறு வைக்கப்படும் பழங்கள் விரைவில் பழுத்துவிடும். ஆனால் மெதுவாக இரா. இங்கிலாந்தில் கோடையின்போது, குடிசைப் பலகணிகளில வரிசையாகப் பழுத்த தக்காளிகள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்.

தக்காளியை வெட்ட வேண்டுமானால் காம்பைச் சுற்றியுள்ள கெட்டியான நடுப் பகுதியை நறுக்கித் தூண்டு போடவும். பழைய தக்காளிகளை அவ்வாறு செய்வது கடினம். ஏனென்றால் அவற்றில் நிறையக் கூழ்ச்சாறு இருக்கும்

தக்காளியை வேகவைக்கும் போது அல்லது நிறைய அவற்றைப் பயன் படுத்தும்போது, எப்போதும் சிறிதளவு சர்க்கரையைச் சேர்த்துக்கொள்க. அதனால் தக்காளியின் மணம் மிகுதியாகும். சர்க்கரை காரச்சத்தை எடுத்துவிடும.

தக்காளி பழுத்ததாயிருக்குமானால் பயன்படுத்த முன்னால் குளிர்ந்த இடம் அல்லது குளிர் பதனப் பெட்டியில் வைப்பது மிகவும் நல்லது. பயன்படுத்துவதற்கு முன்னால் ஒருபோதும் தோலையுரிக்க வேண்டாம்.

கோதுமை மா, மக்காச்சோள மா அல்லது ரொட்டித் தூளுக்கு கலைக் கொண்டு தக்காளியைக் கெட்டியாக்கலாம். ஆனால் அதிகமாகக் கெட்டியாக்கி விட வேண்டாம். போதிய அளவு கெட்டியாக்குவது நல்லது.

பெரிதும் நீர்ச்சத்து எடுக்கப்பட்டதுதான் தக்காளி வடிசாறு அல்லது பசையாகும். அவையிரண்டிலும் திரவம் சேர்க்காமலேயே தக்காளியின் மணம் மிகுதியாக இருக்கும்.

தக்காளிச் சாறு என்பது தவறாக வழங்கிவரும் பெயராகும். ஏனென்றால் தோலை யெடுக்கப்பட்ட பிறகு மிஞ்சும் தக்காளியின் கூழும், சாறும் கலந்ததே அதுவாகும். நான் தக்காளியை அப்படியே தோலுடன் போட்டு எல்லாம் மெதுவாவது வரையிலும் வேகவைக்கிறேன். பின்னர் அதைக் கலக்கிச் சல்லடையில் போட்டு வடிக்கட்டி அத்துடன் உப்பு, மிளகு முதலியவற்றைச் சேர்க்கிறேன்.

பழுத்ததும், கெட்டியானதுமான தக்காளிகளையே வாங்க வேண்டும். கனிந்த பழமாக வாங்கக் கூடாது.

—தினமணி

---

அபாயம்

கூச்சமுள்ளவன் அபாயம் வருமுன்பே நடுங்குவான்; கோழை அது வரும் பொழுது நடுங்குவான்; தைரியமுள்ளவன் வந்த பிறகு அஞ்சுவான்.

—ரிச்டெர்.

# அறியாமற் செய்யும்

# பெரிய தவறுகள்!

அறியாமற் செய்யப்படுவது தவறு! அறிந்தே செய்வது குற்றம்! குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். அறியாமற் செய்யப்படும் தவறுகள் மன்னிக்கப்படுகின்றன.

தவறு என்று தெரியாமலும், ஒரு தவறைத் திரும்பத் திரும்பச் செய்யும் பொழுது அது குற்றமாகிறது என்பதை உணராமலும் சிலர் அன்றாடம் செய்துவரும் தவறுகள் அனந்தம்.

## இது தவறுதான்

கையிலிருந்த கண்ணாடிப் பாத்திரம் கீழே விழுந்து உடைந்து வீடு முழுவதும் சிதறி விழுகிறது. உடன் என்ன செய்கிறார்கள். அந்தப் பகுதியில் யாரையும் நடமாட விடுவதில்லை. மிக்க கவனமாகக் கூட்டிப் பெருக்கிக் கண்ணாடியின் துகள்கள் கூட இல்லாதபடி சாணம் போட்டுத் துவட்டி எடுத்துச் சுத்தப்படுத்தி விடுகிறார்கள்.

கண்ணாடியின் சிறு தூள் தரையில ஒட்டி இருந்தாலும் அதுகாலில் பாய்ந்து வேதனை தரும் என்பது தெரியும். தெரிந்த காரணத்தினால்தான் அவ்வளவு பாதுகாப்பாகக் கூட்டிப் பெருக்கித் தூய்மைப் படுத்துகிறார்கள். வீட்டிற்குள் இவ்வளவு பாதுகாப்பாக நடந்து கொண்டவர்கள்—கூட்டிப் பெருக்கியெடுத்த கண்ணாடித்துண்டுகளை வீதியில் வீசி எறிந்து விடுகிறார்கள். சிதறிக்கிடக்கும் கண்ணாடித் துண்டுகளால் எத்தனை பேருடைய பாதங்கள் கிழிக்கப்பட்டு வேதனைக்குள்ளாகின்றனர்.

இது அறியாமற் செய்யும் தவறுதானே? கண்ணாடித் துண்டுகளைக் கழிவுத் தொட்டியில் கொண்டுபோய்க் கொட்ட வேண்டும் என்ற உணர்வு பெரும்பாலோர்க்கு வருவதில்லை. தங்களைப் பாதுகாத்துக்கொண்டவரையில் சரி. இந்தத் தவறை அவர்கள் அறிந்து செய்வதில்லை! பாவம் அறியாமல் செய்கிறார்கள்.

அதோடு ஒருவர் வாழைப் பழம் தின்றுவிட்டுத் தோலை நடுரோட்டில் எறிந்து விட்டு நடந்து கொண்டிருக்கிறார். அவசரமாகப் பாதையைக் கடந்த ஒருவர் தோல் சறுக்கிக் கீழே விழுகிறார். விழுந்தவர் எழுவதற்குள் வேகமாக வந்த கார் அவர் மீது

[தினகரன்]

மோதிவிடுகிறது. லேசான காயம். இதனால் பெரும் கூட்டம். போக்குவரத்துச் சிறிது நேரம் தடைப்படுகிறது. இவ்வளவு அசம்பாவித நிகழ்ச்சியும் நடைபெறுவதற்கு ஒரு பொறுப்பற்ற மனிதர்தான் காரணம்! சுளையை விழுங்கிவிட்டுத் தோலை ஓரமாகப் போட்டுப் போயிருந்தால் இத்தனையும் நடந்திருக்குமா?

இதோ பஸ் ஸ்டாப்பில் நிற்கும் ஒருவரைக் கவனியுங்கள். இடுப்பிலிருந்து பொடி மட்டையை எடுத்து விரல் நிறையப் பொடியை வழித்து மூக்கிலே செலுத்திவிட்டுக் கையைக்குடுகுடுப்பைக்காரன் உடுக்கையை ஆட்டுவது போல் வேகமாக உதறுகிறார். காற்று ஒரு பக்கமாக வீசிக் கொண்டிருக்கிறது. அவர் கையில் ஒட்டியிருந்த மூக்குப் பொடித் தூள் அத்தனையும், வரிசையில் நிற்போரின் கண்களில் கலந்து விடுகிறது. ஒரே எரிச்சல், கைக்குட்டையை எடுத்துக் கண்களைத் துடைத்துக்கொண்டு விழிப்பதற்குள், வந்த பஸ் நகர்ந்து விடுகிறது. இனி அடுத்த பஸ்வரும் வரை 'பொடி' விஷயத்தால் பாதிக்கப்பட்டவர்கள் காத்துக்கிடக்கவேண்டும். பொது இடங்களில் பொறுப்பற்ற முறையில் நடந்துகொள்ளும் சில மனிதர்களால் ஏற்படும் இப்படிப் பட்ட தொல்லைகளைச் சொல்லி முடியாது. இதைப்போன்றது தான் எச்சில் துப்புவது, காரி உமிழ்வது, மூக்கைச் சிந்துவது.

வெற்றிலையைக் குதப்பிக் கொண்டு காரில் பிரயாணம் செய்யும் சில பெரிய மனிதர்கள், கார் ஓடிக்கொண்டிருக்கும்போதே காறித்துப்புவார்கள். அதனால் வீதியில் நடந்து கொண்டிருக்கும் எத்தனை வெள்ளைச் சட்டைகளில் சிவப்புச் சாயம் பூசப்பட்டு விடுகிறது.

காரில் போகிறவர்களின் இந்தக் கண்மூடித்தனமான செயலால் பாதிக்கப்பட்டவர்களின் உள்ளங்கள் எவ்வளவு வேதனைப்படுகின்றன என்பதை அருகிலிருந்து பார்த்தவர்களே உணர முடியும்.

அதோ ஒரு தோடுடைய செவியன் வேகமாக வெற்றிலை போட்டபடியே வந்து கொண்டிருக்கிறார் பாருங்கள். வெற்றிலைபோட்டு முடித்துவிட்டார். விரலில் மீதிச் சுண்ணாம்பு ஒட்டியிருக்கிறது. அதை என்ன செய்தார் பார்த்தீர்களா? சிவப்பு உருவத்தோடு சிவனே என்று நின்று கொண்டிருக்கும் அஞ்சற் பெட்டி (Post Box) யின் தலையில் தடவி விட்டுப் போகிறார். சுண்ணாம்பை வழித்துப் போடுவதற்கா இடமில்லை? அதிலே ஏன் தடவவேண்டும். அஞ்சற் பெட்டிக்கு மட்டும் இரண்டு கைகள் இருந்திருக்குமானால் அதன்மீது சுண்ணாம்பைத் தடவியவரின் கன்னத்தில் ஓங்கி அறையச் சொல்லியிருப்பேன். நீங்கள் நன்றாகக் கவனித்துப் பாருங்கள்! சென்னை நகரத்தில் மட்டும் அல்ல; தமிழ் நாட்டின் மூலை முடுக்குகளில் உள்ள எந்த அஞ்சற்

பெட்டியாவது சிகப்புச் சாயம் பூசியதோடு சீரழிக்கப்படாமல் இருக்கிறதா என்று—ஒரு பெட்டியைக்கூட உருப்படியாய்க் காண முடியாது? சில இடங்களில் சிவப்பே தெரியாமல் வெள்ளைக் கோடு கிழிக்கப்பட்டுப் பார்ப்பதற்கே அருவருப்புத் தோன்றும்.

பாவம் நாகரிகம் தெரியாத தோடுடைய செவியன் போன்றவர்கள் தான் இப்படிப்பட்ட தவறைச் செய்கிறார்கள் என்று எண்ணுகிறீர்கள்.

அதோ நாகரிகத்தின் சின்னமாக ஒருவர் வருகிறார் பாருங்கள். வாயில் சிகரெட் புகைகிறது. அஞ்சற்பெட்டி அருகில் வந்ததும் சிகரெட் தீய்ந்து விடுகிறது. மனிதர் என்ன செய்ய வேண்டும். கீழே போட்டு காலால் தேய்த்து விட வேண்டியதுதானே முறை? செய்வாரா அப்படி — எல்லாப் பாபங்களையும் சுமந்துகொள்ளத் தான் அஞ்சற்பெட்டி இருக்கிறதே! அதன் தலையில் சிகரெட்டைத் தேய்த்துத் தூக்கி எறிந்து விடுகிறார். தோடுடைய செவியன் வெள்ளை யடித்தான். தோல் பையை சுமந்து வரும் இவர் கருப்படிக்கிறார். எல்லோருமாகச் சேர்ந்து அஞ்சற் பெட்டியின் உருவத்தை ஆபாசப்படுத்தி விட்டுப் போகிறார்கள்.

அஞ்சற்பெட்டி மட்டும்தானா? இதோ எம்.இ.எஸ். பெட்டிபார்த்தீர்களா? ஈய வண்ணம் பூசியிருக்கிறார்கள். வெள்ளையாக இருக்கிறது. அதோடு ஒரு கூடைக்கார கிழவி வெற்றிலையை அசைபோட்டபடி வந்துகொண்டிருக்கிறாள்; அருகில்வந்ததும் அதன் மீது எச்சிலைத் துப்பிவிட்டுப் போகிறாள். வேறு இடம் கிடைக்கவில்லையா அவளுக்கு! இதைத் தவறு என்று அவளுக்கு எடுத்துச் சொல்ல யார் இருக்கிறார்கள். நடைபாதையில் போகும் ஒவ்வொருவரும் இதைப் பார்த்துக்கொண்டு தான் போகிறார்கள். இதையெல்லாம் எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்க நேரம் எங்கே இருக்கிறது அவர்களுக்கு. ஆனால் ஒன்று. இது தவறு என்று அவர்களுக்கே தெரியாதே!

இவரைப் பார்த்தீர்களா?

இவர் காலில் சாணத்தை மிதித்துக்கொண்டார். மிதித்துக் கொண்டால் என்ன தரையில் தடவிவிட்டு நடக்க வேண்டியது தானே என்பீர்கள். செய்வாரா அப்படி! நேரே எம். இ. எஸ். பெட்டி இருக்குமிடத்திற்கு வந்தார். அதன் விளிம்புகளில் சாணத்தைத் தடவிக் காலைச் சுத்தப்படுத்திக்கொண்டு நடந்து போகிறார் அந்த நாகரிக மனிதர்.

பொதுமக்களாகிய நம்மால் அசிங்கப்படுத்தப்படும் பொதுச் சொத்துக்கள் இவை மட்டுமல்ல. பஸ் ஸ்டாண்டு, தந்திக் கம்பம், இன்னும் எத்தனையோ உள்ளன.

## ஒரு வார்த்தை

பொதுமக்கள் நலன் கருதி வைக்கப்பட்டிருக்கும் அஞ்சற்பெட்டி போன்ற பொருள்களைப்

பாதுகாப்பது நமது கடமையாகும். காரணம் அது நம்சொத்து. நாம் செலுத்தும் வரிப்பணத்திலிருந்துதான் அவைகள் நிறுவப்பட்டிருக்கின்றன என்பதை உணரவேண்டும் — முதலில் அப்படிச் செய்வது ஆபாசம் தவறு என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

மேல்நாட்டுக்காரர்களில் எவரேனும் நம் நாட்டின் பாதைகளில் உள்ள அஞ்சற் பெட்டிகளைக் காணுவார்களேயானால் நமது அறிவு வளர்ச்சியை ஒருபடி குறைவாகவே மதிப்பிடுவார்கள்.

என்ன செய்வது! எல்லாம் பழக்கத்தில் வந்துவிட்டன. தடுப்பதற்கு யாரும் இல்லாததால் அந்தத் தவறு நடந்து கொண்டே இருக்கிறது எனச் சிலர் விவாதிக்கலாம்.

தடுப்பதற்கு யாரும் இல்லை என்பதற்காக ஒரு தவறைச் செய்துகொண்டே இருக்கக் கூடாது. வீதியில் இருக்கும் அஞ்சற் பெட்டியை உங்கள் வீட்டில் இருக்கும் பெட்டகமாக, கண்ணாடிப் பீரோவாக எண்ணிக் கொள்ளுங்கள். இப்படி எண்ணிக்கொண்டால் சுண்ணும்பு, சாணம், சிகரெட்துண்டு இவைகளைத் தேய்க்க மனம் வருமா?

வெய்யிலில் காய்ந்து, மழையில் நனைந்து பொதுச் சேவை செய்துகொண்டிருக்கும் அஞ்சற் பெட்டி ஒவ்வொருவருக்கும் சொந்தமானது. அதை ஆபாசப் படுத்தாதீர்கள்.

—"தமிழ்"

---

அநுதாபம் :

மனித மனத்தில் அன்புக்கு அடுத்த படியான தெய்வீக உணர்ச்சி அநுதாபமே.

—பர்க்.

மற்றவர் துயரத்தைப் பகிர்ந்து கொண்டு உருகாத கல் நெஞ்சங்கள் மிகக் கேவலமானவை.

—ஏ. ஹில்.

தானம் அளிப்பதைவிடச் சில சமயங்களில் இரக்கப்படுதல் மேலாகும். ஏனெனில் பணம் மனித இயல்புக்கு வெளியேயுள்ள பொருள்; ஆனால் அநுதாபத்தை அளிப்பவன் தன் ஆன்மாவால் தொடர்பு கொள்கிறான்.

—டால் போர்டு.

அபாயம் :

அபாயம் மனிதனையும் விலங்கையும் ஒரே நிலைக்குக் கொண்டு வருகின்றது; அவசியம் வரும்பொழுது எல்லோரும் ஒன்றுதான்.

—பைரன்

# கல்வித் துறைச் செய்திகள்

## பள்ளிகளில் கட்டணம் கூடாது

### சென்னை சர்க்கார் உத்தரவு

சென்னை, ஜுலை. 6—1965-66 கல்வி யாண்டிலிருந்து தனியார் நிர்வாகத்தில் உள்ள எந்தத் துவக்கப் பள்ளியிலும் மாணவர்களிடமிருந்து எவ்வித கட்டணமும் வசூலிக்கப்படக் கூடாது என்று ராஜ்ய சர்க்கார் உத்தரவிட்டுள்ளது.

எஸ்.எஸ் எல்.ஸி வரை மாணவர்களுக்கு இலவசக் கல்வியளிக்கும் கொள்கையைப் பின்பற்றியே ராஜ்ய சர்க்கார் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

பள்ளிகளில் கல்விக் கட்டணம் ரத்து செய்யப்படுவதால் பள்ளிகளுக்குப் போதனை, நிர்வாகத்துக்கான மானயங்கள் வழங்கப்படும் என்று உத்தரவு மேலும் கூறுகிறது.

ஆசிரியர்கள் பிராவிடண்ட் நிதி சம்பந்தப்பட்டவரை, மேற்கொண்டு உத்தரவு பிறப்பிக்கப்படும் வரையில், 1965–66ம் வருஷம் முதற்கொண்டே ஆசிரியர்களிடமிருந்து சந்தாவை வசூலித்து பிராவிடண்ட் நிதிக்கு நிர்வாகங்கள் அனுப்பலாம் என்றும் சர்க்கார் தெரிவித்துள்ளது.

—

## பள்ளிகளில் விஞ்ஞானக் கல்வி

### யுனிஸெப் உதவி

ஐ.நா. ஜுன். 26—இந்தியாவின் யுனிஸெப் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களுக்காக 40·9 லட்சம் டாலர்களை ஒதுக்க ஐ நா. குழந்தைகள் நிதி நிர்வாகபோர்டு அனுமதி அளித்துள்ளது. ஏற்கனவே ஏற்கப்பட்ட பொறுப்புக்களுக்காக இதில் 878000 டாலர்கள் அடங்கும். எஞ்சிய தொகை 45 லட்சம் டாலர்களுக்கான புதுப் பொறுப்புகளுக்காக இருக்கும்.

இந்தத் திட்டங்களில் ஒன்று நாட்டில் பிரைமரி, நடுத்தர, செகண்டரி பள்ளிகளில் விஞ்ஞானக் கல்விக்கு உதவுவதற்காக இருக்கும்.

இந்தத் திட்டத்துக்கு 21.8லட்சம் டாலர்கள் உதவ யூனிஸெப் முன் வந்துள்ளது. இதற்காக நடப்பு ஆண்டுக்கு 8 லட்சம் டாலர்களை ஒதுக்கியுள்ளது.

விஞ்ஞான கல்வி போதனையை பள்ளிகளுக்கு விஸ்தரிப்பதே இந்தத்திட்டத்தின் நோக்கமாகும். சர்க்காரின் நான்காவது ஐந்தாவது திட்டத்தின் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது இது.

பள்ளிகளின் எல்லாக் கட்டங்களிலும் சுகாதார கல்வி உட்பட

பொது விஞ்ஞானக் கல்வி பல மடையச் செய்வது, சமூக பொருளாதார அபிவிருத்தியிலும் தொழில் நுட்பக்கல்வி முன்னேற்றத்திலும் குழந்தைகளைப் பங்கு வகிப்பதற்கு தயார் செய்வதில் முக்கிய அம்சமாக விளங்கும் என்று கருதப்படுகிறது

## புதிய செகண்டரி பள்ளிகளுக்காகக் கட்டவேண்டிய தொகை

### இருமடங்காக்குவதென அரசினர் முடிவு

சென்னை, ஜூன் .30—சென்னை ராஜ்யத்தில் செகண்டரி பள்ளிகள் நிறுவ முன் வருபவர்கள் இனி ரூ. 70,000 கட்டவேண்டும். இது வரை ரூ. 35,000 கட்டினால் போதும் என்றிருந்தது.

இத்தகவலை முதல் மந்திரி திரு. பக்தவத்சலம் இன்று நிருபர்களிடம் தெரிவித்தார்.

புதிதாக ஆரம்பிக்கப்படும் பள்ளிகளுக்கு வசதிகள் செய்து கொடுக்கவும், அவற்றை பராமரித்து வரவும் போதிய நிதி இருக்கவேண்டும் என்பதற்காக இவ்வாறு முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்றார் முதன் மந்திரி.

ஏற்கனவே இருந்துவரும் பள்ளிகள் விஷயத்தில் டிபாசிட் அதிகரிக்கப்படாது என்றும் தெளிவுபடுத்தினார்.

புதிய பள்ளிகள் ஆரம்பிப்பதற்காக சர்க்காருக்கு ஏராளமான கோரிக்கைகள் வந்தவண்ணமிருப்பதாகவும், இவ்வாறு வரும் ஒவ்வொரு கோரிக்கையையும், அதன் தகுதி, அந்தந்தப் பகுதியின் தேவைகள், கிடைக்கும் வசதிகள் ஆகியவற்றின் அடிப்படையில் அதிகாரிகள் பரிசீலிப்பதாகவும் அவர் சொன்னார்.

## 4—வது திட்டத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் இடவசதிக்கு முக்கிய இடம்

### ரூ. 257 கோடி செலவு மதிப்பீடு

புதுடில்லி, ஜூன். 13—இனி வரும் திட்டங்களில் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்குமான வீடுகள் முக்கியமாகக் கருதப்படும்.

சர்வகலாசாலை மான்யக் கமிஷன் நியமித்த மாணவர், ஆசிரியர் வீட்டு வசதிக் குழுவின் அறிக்கையில் இந்த யோசனை கூறப்பட்டுள்ளது.

தரம், கட்டுமான பலம், வசதிகள் எதையும் இழக்காமல், உயர்தரக் கல்விச்சாலைகளுக்கான ஜாகை கட்டிடங்கள் செலவைக் குறைப்பதற்குத் தொடர்ந்து ஆராய்ச்சி நடத்துவதற்குத் தனிக் குழுவை அமைப்பதைப் பற்றி மான்யக் கமிஷன் பரிசீலிக்க வேண்டுமென்றும் கோருகிறது.

நான்காவது திட்ட முடிவில் மாணவர்களில் 25 சதவிகிதம் பேருக்கு விடுதிகள் கட்ட ரூ. 120 கோடி பிடிக்குமென்று மதிப்பிடப்படுகிறது. சர்வகலாசாலைகளிலும், கல்லூரிகளிலும் இருக்

க்க் கூடிய ஆசிரியர்களுக்கான ஜாகைகள் கட்ட ரூ 137 கோடி ஆகும். இது பேர்பாதி ஆசிரியர்களுக்குத்தான் வீட்டு வசதி உண்டாக்கும்.

## பரீட்சை தேருத மாணவர்களுக்கு அபராதம்

### கல்வி ஆலோசனைக்குழு யோசனை பரிசீலனை

சென்னை, ஜூலை. 1 —இப்போதைய இலவசக் கல்வித் திட்டத்தின்கீழ், 6 முதல் 8 வகுப்புகள் வரையில் ஒரு தடவைக்கு மேல் பரீட்சை தவறும் மாணவர்களுக்கு ரூ. 18 அபராதம் விதிக்கும் யோசனை பரிசீலனையில் இருந்து வருகிறது. அதேபோல் 9, 10, 11 வகுப்புகளில் தவறும் மாணவர்களுக்கு ரூ. 30 அபராதம் விதிக்கும் பிரேரணையும் பரிசீலனையிலுள்ளது.

இந்த அபராதம் விதிக்கப்படுமானல், அதை 3 தவணைகளில் வசூலிக்கும் யோசனை உள்ளது.

சமீபத்தில் முதல் மந்திரி திரு. எம். பக்தவத்சலம் தலைமையில் கூடிய சென்னை ராஜ்ய கல்வி ஆலோசனைக் குழு இப்பிரேரணையை அங்கீகரித்ததாகத் தெரிகிறது.

சென்னை அரசாங்கம் இப்பிரேரணையின் எல்லா அம்சங்களையும் ஆராய்ந்து, விரைவில் இறுதியாக முடிவு செய்யுமென்று தெரிகிறது.

இப்போது வகுப்புகளில் 40 அல்லது 45 மாணவர்கள் இருக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதை 50 மாணவர்கள் என்று நிர்ணயிப்பதற்குக் குழு ஆதரவளித்தது.

## பள்ளிகளின் தரத்தை உயர்த்த டைரக்டர் டைடஸ் கோரிக்கை

### கட்டுப்பாட்டை வளர்க்க குடிமைப் பயிற்சி வகுப்புகள் துவங்கும்

### மதிய உணவு, சீருடை திட்டங்கள் திருப்திகரமாக நடக்கவில்லை என்கிருர்

வேலூர், ஜூலை. 4—மாணவரிடையே கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் வளர்க்க ராஜ்ய சர்க்கார் இவ்வாண்டிலிருந்து பள்ளிகளில் குடிமைப் பயிற்சியளிக்கத் தீர்மானித்திருக்கிறது.

எல்லா மாணவர்களிடமிருந்தும் நன்னடத்தைக்கு உத்தரவாதம் பெறுமாறு கல்வி ஸ்தாபனங்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

செகண்டரி கல்வி டைரக்டர் திரு. வி. டி. டைடஸ் இன்று இங்கு இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

தேச பக்தியுடனும், முற்போக்கு மனேபாவத்துடனும் நடந்துகொள்ள மாணவர்களுக்குப் போதிக்கவேண்டும் என்று வேலூர் தாலுகா செகண்டரி பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள், தலைமையாசிரியைகள் கூட்டத்தில் திரு. டைடஸ் கூறினர்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:

பள்ளிகளில் கல்வித் தரம் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை. மாணவரிடை கட்டுப்பாடின்மை அதிகரித்து வருவதும், இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின்போது தெரிந்தது. தலைமையாசிரியர்கள் மாணவரிடை கட்டுப்பாட்டையும் ஒழுக்கத்தையும் தக்கபடி புகுத்தவில்லை என்பதையே இது காட்டுகிறது. கல்வித் துறையில் ராஜ்யம் எடுத்துள்ள நற்பெயர் நிலைக்க வேண்டுமானால், செகண்டரி பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர் மாணவரிடையே அதற்கேற்ற சூழ்நிலையைத் தோற்றுவிக்க வேண்டும். பாரபட்சமிராது, நீதி வழங்கப்படும் என்ற உறுதி மாணவருக்கு ஏற்பட வேண்டும்.

ஆசிரியர் பற்றுக்குறையைச் சமாளிக்க நான்காம் திட்டத்தில் அதிகப்படியான ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் திறக்கப்படும்.

ராஜ்யத்தில் தேவைக்கு மேல் ஆரம்பப் பள்ளிகள் உள்ளன. எனவே, புதிய ஆரம்பப் பள்ளிகள் திறக்கத் தேவையில்லை. இருக்கும் பள்ளிகளுக்கு வேண்டிய வசதிகளைச்செய்து கொடுப்பதிலேயே சர்க்கார் இனி கவனம் செலுத்தும்.

இலவசச் சீருடை, மதிய உணவு, மாணவர்சேர்ப்புபோன்ற சர்க்கார் திட்டங்கள் பெரும்பாலான ஆரம்பப் பள்ளிகளில் திருப்திகரமாக அமல் நடத்தப்படவில்லை.

நான்காம் திட்ட முடிவுக்குள் 14 வயதிலிருந்து 17 வயதுக்குட்பட்டவர்களில் குறைந்த பட்சம் 30 சதவிகிதத்தினருக்காவது உயர்நிலைக் கல்வி அளிக்கவேண்டும் என்று சர்க்கார் உத்தேசித்திருக்கிறது.

பள்ளிக்கூடங்களில் அனுமதி விஷயத்தில் பிரச்னை ஏதுமில்லை. பெற்றோர் குறிப்பிட்ட பள்ளிகளில் குழந்தைகளைச் சேர்க்க விரும்புவதால்தான் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இப்படி நல்ல பள்ளிக்கூடமாய்த் தேடிப் போக அவசியமில்லாமல், எல்லாப் பள்ளிக்கூடங்களையுமே உயர்தரமுள்ளதாக்க வேண்டும் என்று திருடைடஸ் வற்புறுத்தினர்.

## சம்பள வசூல் தடையை ஆட்சேபித்து தாவா

### ஹைகோர்ட்டில் 'ரிட்' மனு: இடைக்கால தடை உத்தரவு

சென்னை, ஜூன். 9—அரசாங்கத்தின் அங்கீகாரம்பெற்ற எந்தப் 'பிரைமரி' (ஆரம்ப) அல்லது 'அப்பர் பிரைமரி' (உயர்தர ஆரம்ப) பள்ளியிலும் மாணவர்களிடமிருந்து 65–66 கல்வி ஆண்டின் துவக்கத்திலிருந்து சம்பளம் வசூலிக்கலாகாது என்று அரசாங்கம் பிறப்பித்த உத்தரவை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் 'தாவா' தொடரப்பட்டுள்ளது.

பிரஸ்தாப உத்தரவு நியாயமற்ற நிர்ப்பந்தத்தை விதிக்கிறது. பாரபட்சத் தன்மையுடையது. எனவே செல்லத்தக்கது அல்ல என்று உத்தரவிடுமாறு

ஹைகோர்ட்டில் ஒரு 'ரிட்' மனு தாக்கலாகியுள்ளது.

மனுதாரர் சேப்பாக்கம் திரு. இந்து பால பாடசாலையின் மானேஜரும், கரெஸ்பாண்டெண்டுமாகப் பணியாற்றி வருபவர்.

மனுமீது கோர்ட் முடிவுகூறும் வரை, சர்க்கார் உத்திரவின் அமுலை நிறுத்திவைக்க வேண்டுமென்று மனுவில் கோரப்பட்டது. அதற்கு ஏற்ப, நான்கு வார காலம் கெடு வைத்து நோட்டீஸ் பிறப்பித்துடன், இடைக்காலத்தடையுத்தரவையும் நீதிபதி ஆர். சதாசிவம் ஒன்று பிறப்பித்தார்.

மனுதாரர் தமது தாவாவில் கூறியிருப்பதன் கருத்தாவது :—

என் பாடசாலையில் கல்வி போதனை நல்ல தரமானது என்று ஒப்புக்கொள்ளப் பட்டுள்ளது. மாணவர்களிடமிருந்து சம்பளம் வசூலிக்கலாகாது என்று சர்க்கார் முடிவு செய்துவிட்டதாக வந்த உத்தரவு ஆச்சரியத்தை விளைவித்தது.

1958ல் சம்பளம் வசூலிக்கும், 1 முதல் 5 வகுப்பு வரையுள்ள பள்ளிக்கூடங்களுக்கு கிராண்டு கிடையாது என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பித்தது. சம்பள வசூலை நீடிக்க விரும்பும் பள்ளிக்கூடங்கள் அம்மாதிரி முடிவு செய்து அறிவிக்கலாம், அங்கீகாரம் நீடிக்கும் என்று அவ்வுத்தரவு கூறியது. அப்பொழுது சம்பள வசூல் பள்ளியாக இப்பள்ளி நீடிக்கும் என அறிவித்து விட்டோம்.

புது உத்தரவுப்படி சம்பள வசூலை நிறுத்திவிட்டால் உபாத்திமை கிராண்டும், பராமரிப்பு கிராண்டுந்தான் அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும். இது தரமான கல்வி போதனையைப் பாதிக்கும்.

பள்ளிக்கூடத்தை நடத்துவது ஒரு பணி அல்லது தொழில். அதை முறைப்படி நடத்த எந்தப் பிரஜைக்கும் உரிமை யுண்டு. அதற்கு நியாயமற்ற நிர்ப்பந்தங்களை விதிக்கலாகாது என்று அரசியல் சட்டம் கூறுகிறது. இப்போதைய உத்தரவு நியாயமற்ற நிர்ப்பந்தம். அது செல்லத்தக்கதல்ல.

அரசாங்கம் பத்து சத மானியம் தருகிறது. செலவுகளுக்கு அது போதுமானது அல்ல.

ஆங்கிலோ — இந்தியர்களும், மைனாரிட்டிகளும் நடத்தும் பள்ளிகள் மட்டும் சம்பளம் வசூலித்து பள்ளிக்கூடங்களை நடத்தலாமென அரசாங்கம் கூறுகிறது. அவற்றிற்கு மட்டும் இந்த விலக்கு அளித்திருப்பது நியாயமற்ற பாகுபாடு. பிரஜைகளிடையே பாகுபாடு செய்யலாகாது என்று அரசியல் சட்டம் கூறுகிறது.

எனவே சர்க்கார் உத்தரவு சட்டப்படி செல்லத்தக்கதல்ல, அமுலாகக் கூடியதல்ல, பாரபட்சத் தன்மையுள்ளது என்று அறிவிக்குமாறு மனுதார் கோரியுள்ளார்.

---

## நடப்பு ஆண்டில் தமிழகத்தில் 110 உயர்நிலைப் பள்ளிகள் ஏற்படும்

---

### 4வது திட்டத்தில் இலவசப் புத்தகம், சீருடை பற்றி முதலமைச்சர் தகவல்

சென்னை, ஜூலை. 6—தமிழகத்தில் நடப்பு ஆண்டில் புதிதாக 110 உயர்நிலைப் பள்ளிகளைத் திறக்க சென்னை அரசு அனுமதித்துள்ளது. இவற்றில் 12 பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளாக இருக்கும்.

பழைய ஜில்லா போர்டு பள்ளிகள் பெரும்பாலானவை உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படும். இவை தற்போது விசேஷ ஜில்லா கல்வி அதிகாரிகள் மேற்பார்வையில் உள்ளன. இவற்றை ராஜ்ய சர்க்கார் மேற்கொள்ளக்கூடும்.

மதுரை, ஜூலை. 6—நான்காவது திட்ட காலத்தில் ஏழை மாணவர்களுக்கு இலவச உடை, உணவு, புத்தகங்கள் ஆகியவற்றை சர்க்கார் வழங்கும் என்றும், இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட இலாகா கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது என்றும் முதல் மந்திரி திரு. பக்தவத்சலம் இன்று தெரிவித்தார்.

மதுரையிலிருந்து 20 மைலில் நத்தம் என்னுமிடத்தில் இன்று அவர் சர்க்கார் பெண்கள் உயர்நிலைப் பள்ளியைத் திறந்து வைத்துப் பேசினார்.

துவக்கப் பள்ளிகளில் போதிக்க பயிற்சி பெற்ற செகண்டரி கிரேடு ஆசிரியைகளே இருக்கவேண்டும். துவக்கக் கல்வி கட்டத்தில் குழந்தைகளுக்குப் படிப்பு சொல்லித்தர ஆசிரியைகளே தகுதியானவர்கள் என்றும் முதன் மந்திரி கூறினார்.

ராஜ்ய சர்க்கார் வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதியைக் கல்விக்காகச் செலவிட்டு வருகிறது. கல்வி வளர்ச்சிக்காக-குறிப்பாக பெண்கள் கல்வி விஷயத்தில்—ராஜ்ய சர்க்கார் கொண்டுள்ள அக்கறையையே இது எடுத்துக் காட்டுகிறது என்றும் அவர் சொன்னார்.

பஞ்சாயத்து யூனியன் பகுதிகளில் உயர்நிலைப்பள்ளியை யூனியன்கள் நேரடியாக நடத்தவில்லை யென்றாலும், தக்க முறையில் நடக்கும்படி கவனித்துக்கொள்ள அவற்றுக்குப்பொறுப்பு உண்டு என்று சொன்னார். பெண்களுக்கான புது உயர்நிலைப் பள்ளியைத் துவக்கியதற்காக நத்தம் பஞ்சாயத்து யூனியனை அவர் பாராட்டினார். துவக்கப் பள்ளியில்கூட நூல் நிலையம் இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஏழை மாணவர்களுக்கு இலவச பாட புத்தகங்கள் சப்ளை செய்யப்பட வேண்டு மென்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தீர்மானம் நிறைவேற்றியுள்ளதையும் அவர் நினைவுபடுத்தினர். வகுப்பில் பாதி மாணவர்களுக்கு இலவச பாட புத்தகங்கள் சப்ளைசெய்யப்பட வேண்டுமென்பதே தமது ஆசை என்றும் சொன்னார். இந்த முடிவு நான்காவது திட்ட காலத்தில் நிறைவேறும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

# ராஜ்யங்களில் கல்விக் கவுன்சில்கள் நிறுவ சிபாரிசு

**ஸ்ரீநகர், ஜூன். 4—ராஜ்யங்களில் கல்வித் துறை பூராவையும், இணக்கமான முறையில் அபிவிருத்தி செய்வது பற்றி சர்க்காருக்கு யோசனை கூறுவதற்காக ராஜ்ய கல்விக் கவுன்சில்களை அமைக்க வேண்டுமென்று, இந்தியாவின் கல்விக் கமிஷன் யோசனை தெரிவித்துள்ளது.**

இன்று ஸ்ரீநகரில் கல்வி இலாகா காரியதரிசிகள், கல்வி இலாகா டைரக்டர்கள் அடங்கிய மகாநாட்டில் இந்த யோசனை தெரிவிக்கப்பட்டது. கல்விக் கமிஷன் தயாரித்துள்ள ஒரு யாதாஸ்தின் மீது இம்மகாநாட்டில் விவாதம் நடைபெற்றது.

கல்வித் திட்டத்தின் பல்வேறு அம்சங்களைக் கவனித்துக் கொள்ள விசேஷ கமிட்டிகளோ அல்லது நிரந்தர கமிட்டிகளோ ஏற்படுத்தலாம் என்றும் கல்விக் கமிஷன் கூறியிருக்கிறது.

கல்வி இலாகாவின் நிர்வாகப் பணியையும், மேற்பார்வைப்பணியையும் தனித்தனியாகப்பிரிப்பது சம்பந்தமாகவும் கமிஷன் யோசனை கூறியுள்ளது. கல்வி ஸ்தாபனங்களை நிர்வகிப்பதற்காக கல்வி இலாகாவின் பொதுவான கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாய், சுயாதிகாரத்துடன் கூடிய குழுக்களை அமைக்கலாம் என்று கூறுகிறது.

எல்லா சர்க்கார் செகண்டரி பள்ளிகளையும் நிர்வகிப்பதற்காக சுயாதிகாரத்துடன் கூடிய போர்டு ஒன்றை ஏற்படுத்த வேண்டும். அதே போல ஒவ்வொரு ஜில்லாவிலும் ஆரம்பக் கல்வி வளர்ச்சியைக் கவனித்துக் கொள்ள சட்டபூர்வமான போர்டுகளை ஏற்படுத்த வேண்டும். பிரைமரி, மிடில் ஆகிய இரு கட்டங்களையும்சேர்ந்த ஆரம்பக்கல்வியை இது கவனித்துக்கொள்ள வேண்டும். இவற்றில் ஜில்லா பரிஷத் அல்லது பஞ்சாயத்து சமிதி பிரதிநிதிகளும் அதிகார சார்பற்ற கல்வித் துறையினரும் இருக்க வேண்டும் என்றும் கமிஷன் கூறுகிறது.

செகண்டரி கல்வி போர்டைப் பொறுத்தவரை முழுநேர சேர்மனுடன் கூடிய கச்சிதமான குழுவாக அது இருக்க வேண்டும். உப அத்யட்சகருக்குள்ள அந்தஸ்து அவருக்கு இருக்க வேண்டும். சர்வகலாசாலைகளின் பிரதிநிதிகளும், மற்றும் பிறபொதுநல பிரதிநிதிகளும் அதில் இருக்க வேண்டும்.

கணிதம் உள்ளிட்ட, விஞ்ஞான அறிவு வளர்ச்சி விஷயத்தில் முனைப்புக் காட்டும் அதே சமயத்தில் கலை, இயல் பாடங்கள் விஷயத்திலும் விசேஷ கவனம் செலுத்த வேண்டும் என்று திரு. சாக்ளா இக் கூட்டத்தில் கூறினார்.

கலை இயல் பாடப் பயிற்சிக்காக விசேஷ கோடை வகுப்புகள் நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்றார்.

## கல்விப் போதனையில் புதிய முறை

### டாக்டர் ஸி. பி. யோசனை

சென்னை. ஜூலை. 5—கல்வி போதிப்பதில் புதிய முறையைக் கையாளும்படி அண்ணாமலை சர்வகலாசாலை உப அத்யட்சகர் டாக்டர் ஸி.பி. ராமசுவாமி அய்யர் யோசனை கூறினார். பாட புத்தகத்தில் உள்ளதை மட்டும்போதிக்காமல் பொதுவாக அப்பாடத்தின் விஷயத்தைப்பற்றி பூராவாக போதிக்க வேண்டும் என்று கூறினார்.

பாடப்புத்தகத்தில் ஒன்றிரண்டு அத்தியாயங்களை போதித்து விட்டுப்பாக்கியைமாணவர்களை படித்துக் கொள்ளும்படி விட்டு விடவேண்டும் என்றும் அவர் கூறினார்.

பாடப்புத்தகங்களில் இருப்பதை அப்படியே உருப்போடும்படி செய்யாமல் விஷயத்தைப் புரிந்துகொள்ளும்படி செய்வதே அதன் நோக்கம் என்று அவர் கூறினார்.

கிண்டி இன்ஜினீயரிங் கல்லூரி விவேகானந்தா மண்டபத்தில் பரீட்சைகள் பற்றி டாக்டர் ஸி. பி. பேசினார். மாணவர்களுக்கு குறிப்பிட்ட விஷயத்தைப்பற்றி எவ்வளவு பரிச்சயம் இருக்கிறது என்பதைக்கண்டு பிடிப்பதுதான் பொதுப்பரீட்சையின்நோக்கமாக இருக்கவேண்டும். பாடத்தின் சில விசேஷப் பகுதிகளை மாணவன் உருப்போடுவதற்கு ஊக்கமளிக்கும் வகையில் பரீட்சைகள் அமைக்கக்கூடாது என்றும் அவர் சொன்னார்.

மாணவர்கள் இருந்து படிக்கும் சர்வகலாசாலைகள், குருகுலபாணியில் அமைந்துள்ள கல்வி ஸ்தாபனங்களில் வருஷாந்திரப்பரீட்சைகள் தேவையில்லை. ஆனால் தற்காலக்கல்வி ஸ்தாபனங்களில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தொடர்பே இல்லை. வருஷப் பரீட்சைகள் நடத்தலாம். ஆனால் ஒவ்வொரு வாரமும் மாணவன் எப்படி முன்னேறி வந்திருக்கிறான் என்பதைக் கருத்தில் கொண்டு மார்க்குகளை நிர்மாணிக்க வேண்டும். இப்படிச் செய்தால் பரீட்சையின் போது பயத்தினால் சரியாக எழுதாத மாணவர்கள் வகுப்பில் நன்கு படித்து வந்திருந்தால், பரீட்சையில் தேர்ச்சி பெற்று விடுவான் என்று டாக்டர் ஸி.பி. கூறினார்.

ஆந்திரப் பிரதேச தொழில் கல்வி டைரக்டர் திரு. பி. எம். தாஸ் தலைமை வகித்தார்.

## பஞ்சாயத்து யூனியன் பள்ளி ஆசிரியர்கள் மாற்றல்

ராஜ்யத்தில் பஞ்சாயத்து யூனியன்களால் நடத்தப்படும் ஆரம்பப் பள்ளிக் கூடங்களில் வேலை செய்யும் ஆசிரியர்களின் உத்தியோக மாற்றல்கள் சம்பந்தமான மனுக்கள் அல்லது பிரோரணைகளை இனி அட்ஹாக்ப் போர்டு கவனிக்கும். இந்தப்போர்டுக்கு ரெவி

னியூ டிவிஷனல் அதிகாரி தலைமை வகிப்பார்.

சர்க்கார் சமீபத்தில் பிறப்பித்த ஒரு உத்தரவுப்படி ரெவினியூ டிவிஷனல் அதிகாரி தவிர, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், பஞ்சாயத்து யூனியன் தலைவர், பிரஸ்தாப பஞ்சாயத்து யூனியன் மீது அதிகார வரம்புள்ள கல்வி அதிகாரி ஆகியோர் இந்தப் போர்டில இருப்பர். உத்தியோக மாற்றலுக்கான மனுக்களை ஏப்ரல் அல்லது மே யில் போர்டு பரிசிலித்து முடிவு செய்யும். சாதாரணமாகக் கல்வியாண்டின் நடுவில் ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியரின் உத்தியோக மாற்றலுக்கான எந்த மனுவோ அல்லது பிரேரணையோ பரிசீலிக்கப்படமாட்டாது. எனினும் சில பிரத்தியேக சந்தர்ப்பங்களில் கல்வியாண்டின் மத்தியில் உத்தியோக மாற்றலைச் செய்ய ஜில்லா கலெக்டரின் அங்கீகாரம் தேவை.

உத்தியோக மாற்றல்களைக் கவனிக்க உடனடியாக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் அட்ஹாக் போர்டுகள் நியமிக்கப்படும்.

---


# புதுமுறை சங்க வாய்பாடு

V. K. சேஷாத்திரி. B.A., L.T.

(Retired Deputy Inspector of schools.)

புதிய மெட்ரிக், நயாபைசா திட்டப்படி எளிய முறையில் மாணவர்களுக்குச் சுலபமாகப் புரியும் வகையில் புது முறை சங்க வாய்பாடு இயற்றப் பெற்றிருக்கிறது.

தனிப் பிரதியின் விலை ரூ. 0- 13 ந. பை. 100 வாய்பாடு மொத்தமாக வாங்குபவர்களுக்கு 100 பிரதிகள் ரூ. 9 வீதம் கொடுக்கப்படும். அதற்குக் குறைந்து, புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுப்பவர்களுக்கு 25% கழிவு கொடுக்கப்படும்.

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

# பஸ் கண்டக்டர் பலவிதம்

[ப. நா. பாலசுப்பிரமணியன்]

தினமும் கால் கடுக்க நின்று பஸ்ஸுக்கு தவம் செய்து கடைசியில் தொத்திக்கொண்டு பிரயாணம் செய்யும் நமக்குப் பஸ் பிரயாணக் காட்சிகள் கண் முன் நிற்கின்றன. அல்லது "பஸ்ஸைக் களி" நடனம் புரிகின்றன! நம் நாட்டைப்போல அந்நிய நாடுகளிலும் பஸ்கள் உண்டா, உண்டெனின் பஸ் பிரயாணம் எப்படிப் பட்டது. பஸ் கண்டக்டர்கள் எப்படிப்பட்டவர்கள் என்ற சந்தேகங்கள் உங்களுக்குத் தோன்றுவது இயற்கையே.

## ஆஸ்திரேலியா

ஆஸ்திரேலியாவில் பஸ் கண்டக்டர் வேலைக்குச் சிறந்த மதிப்பிருக்கின்றது. எனவே பஸ் கண்டக்டர் வேலை பார்ப்பதை ஆஸ்திரேலியாவில் ஆண்கள் தமது பாக்கியமெனக் கருதுகின்றனர். கண்டக்டர் வேலைக்கு ஆஸ்திரேலியாவில் அதிகப் போட்டியும் உண்டு! டிராம்களில் பெண்களும் கண்டக்டர்களாகப் பணி யாற்றுகின்றனர்! வசதி நிறைந்த பஸ்கள் அடிக்கடி வருவதால் ஆஸ்திரேலியாவில் பஸ்ஸுக்காகத் தவம் செய்யவேண்டியதில்லை! எல்லா வற்றிற்கும் மேலாக ஆஸ்திரேலியாவில் பஸ் கட்டணம் கொள்ளை மலிவு!

## பர்மா

நம் அண்டை நாடான பர்மாவில் யாரும் பஸ் ஓட்டலாம்! பஸ் ஓட்ட பயிற்சியோ அன்றி தகுதியோ தேவையில்லை! பின்பக்க வழியாகத்தான் ஏற வேண்டும் என்ற கட்டாயமில்லை! நின்ற பிறகுதான் இறங்கவேண்டுமென்ற நியதியுமில்லை. பஸ் ஓடும்போதே ஏறவும் இறங்கவும் செய்யலாம். பஸ்ஸில் நம்மிடம் டிக்கட்டிற்காகப் பணம் கேட்பவரே கண்டக்டர்! ஆம்; பர்மாவில் பஸ் கண்டக்டர்களைப் பிரயாணிகளிடமிருந்துவேறு படுத்திப் பார்ப்பது வெகு கடினம்!

## சுவிட்சர்லாந்து

சுவிட்சர்லாந்தில் பஸ் கண்டக்டர்களே டிரைவர்களாகவும் பணியாற்றுகின்றனர்! சிறிய ரயில்வே ஸ்டேஷன்களில் ஒரே மனிதர் ஸ்டேஷன் மாஸ்டராகவும், டிக்கட்டு கொடுப்பவராகவும், பெறுபவராகவும் பலவித வேலைகளைச் செய்வதை நாமறிவோமல்லவா? இதேபோன்று சுவிட்சர்லாந்திலுள்ள பஸ்களில் ஒரே மனிதர் டிரைவராகவும், கண்டக்டராகவும் பணி புரிகிறார்! அதாவது அவர் டிரைவர்—கம் கண்டக்டர்!

பிரயாணிகள் டிரைவரது ஆசனத்திற்கு அருகாமையில் உள்ள வாயில் வழியாகப் பஸ்ஸில் ஏறுகின்றனர். ஏறியவுடன் டிரைவரிடம் சென்று உரிய காசைக் கொடுத்து டிக்கட்டுகளைப்பெற்று

ஆசனங்களி லமர்ந்து பிரயாணம் செய்கின்றனர். இதனால் சென்னையைப்போல் டிக்கட் கொடுப்பதற்காக ஒரு இடத்தில் பஸ்ஸை நிறுத்தும் அரிய பழக்கத்தை சுவிட்சர்லாந்தில் காண முடியாது! 'ரைட்ஸ், ரைட்ஸ்' என்ற கூக்குரல், விசில் சத்தம் முதலானவற்றைக் கேட்கும் பாக்கியம் சுவிட்சர்லாந்து பஸ் பிரயாணிகளுக்குக் கிடையாது!

## பாரிஸ்

பாரிசிலுள்ள பஸ் கண்டக்டர்களுக்கு டிக்கெட் கொடுக்கும் முக்கியமான வேலை கிடையாது! பஸ் ஸ்டாபிங்குகளிலுள்ள கம்பங்களில், எண்கள் வரிசையாகக் கொண்ட 'டிக்கெட் ரோல்' இணைக்கப் பட்டிருக்கும். சரியான காசைப் போட்டுவிட்டு தேவையான டிக்கட்டைப் பிய்த்துக் கொள்ளலாம். இந்த டிக்கெட்டின் எண் வரிசைப் படியே பஸ்களிலமர்ந்து பிரயாணம் செய்ய முடியும். பாரிஸ் பஸ் கண்டக்டரின் வேலை என்ன தெரியுமா? டிக்கெட்டின் எண் வரிசைப்படி இருக்கைகளில் பிரயாணிகளை யமர்த்தி இனிய முறையில் அவர்களை உபசரிப்பதுதான் பாரிஸ் பஸ் கண்டக்டரின் வேலை!

## லண்டன்

லண்டன் பஸ் கண்டக்டர் பிரயாணிகளின் அன்பிற்குப் பாத்திரமானவர். லண்டன் பஸ் கண்டக்டர்களில் பலர் பன்மொழிப் புலவர்களாக விளங்குகின்றனர்.

48ஆம் பக்கம் பார்க்க


"ஆரம்பக் கல்வி"
ஆபீஸ்.
94-95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை-1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரு. 2-50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரு. 2-00

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரு. 2-00

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரு. 1-00

வருடாந்திர பிராவிடெண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரு. 2-00

Form of Certificate of Income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரு. 2-00

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு:

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

குழந்தைகள் அரங்கம்

# காகிதத்தின் வரலாறு

பீட்டர் நைட்

இந்தக் காலத்தில் நார்க்கண்ணாடி போன்ற பொருட்களாலும் படகுகளைச் செய்ய முடியும் என்பதை நம்மில் பலர் அறிந்திருக்கலாம். அப்படி கண்ணாடி நாரினாலான படகுகள் மிக உறுதியானவையாகும்; நீண்டகாலம் உழைக்கும். ஆனால் ஒரு காலத்தில் படகுகள் 'காகித"த்தால் செய்யப்பட்டன. அவற்றில் பல அக்காலத்தில் கப்பல் என்று அழைக்குமளவுக்குப் பெரியவையாக இருந்தன. "காகிதத்தால்" ஆனபோதிலும் அவை குழந்தைகளின் விளையாட்டுப் பொருளான காகிதக் கப்பலாக இல்லை. அவை அக்காலத்தில் "காகிதங்"களாக இருந்தனவேதவிர இன்று எதைக் காகிதம் என்று குறிப்பிடுகிறோமோ அவ்விதக் காகிதமாக இருக்கவில்லை. கப்பலைச் செய்வதற்குப் பயன்படுத்தியதைப் போலவே முக்கிய நிகழ்ச்சிகளையும், தங்களுடைய கணக்கு விவரங்களையும் எழுதுவதற்கு அதைப் பயன்படுத்தி வந்தனர்.

சைபெரஸ் பாபிரஸ் என்ற தாவரவியலாளர் குறிப்பிடும் ஒரு வகைக் கோரைப் புற்களைக் கொண்டு அவை செய்யப்பட்டன. அவை எகிப்தில் நைல் நதி டெல்டா பகுதிகளிலிருந்து பெறப்பட்டன.

அக் கோரைப் புற்களின் தண்டுகள் தகுந்தபடி நாராகப் பிரிக்கப்பட்டு பாய் பின்னுவது போலப் பின்னப்பட்டன. துணி போன்ற அப்பொருள் பிறகு நைல் நதி நீரில் ஊற வைக்கப்பட்டது. அப்படிச் செய்யும்போது நார்கள் நெருக்கமாக ஒன்று சேர்ந்தன. தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் பின்னர் அப்பாய்களைச் சம்மட்டியால் அடித்து எழுதுவதற்கேற்ற வகையில் மேற்புறத்தை நைசாக்கினர். பிறகு அவை வெயிலில் காயவைக்கப்பட்டன.

இவ்வித பாபிரஸ் "காகித"ங்கள் பழங்காலத்தில் கடைகளில் 20 தாள் கொண்ட சுருணைகளாக விற்கப்பட்டன.

அக்காலத்திய மக்கள் உபயோகித்த 'காகித'ங்கள், இக்காலத்திய புத்தகங்கள், செய்தித்தாள்கள் ஆகியவற்றைப்போலத் தனித் தனி காகிதங்களாக மடித்து உபயோகப்படுத்தப்படவில்லை. மாறாக அவை சுருணைகளாக சுருட்டி வைக்கப்பட்டு வந்தன. எழுதும் போதோ படிக்கும் போதோ அவை விரிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டன. சுருணைகளில் நல்ல தரமான தாள் உள்ளேயும், மட்டமான தாள் வெளியேயும் வைக்கப்பட்டு வந்தன.

எழுதுவதற்கு மட்டுமின்றி, நெய்யப்பட்ட பாபிரஸ் தாள்கள் லேசான படகுகளைச் செய்யவும் பயன்படுத்தப்பட்டு வந்தன. படகின் பாய்களைச் செய்யவும் மற்றும் படுப்பதற்கான பாய்கள், அணிவதற்கான துணிகள் ஆகிய

வற்றைச் செய்வதற்கும் அவை பயன்படுத்தப்பட்டு வந்தன.

பழங்கால பாபிரஸ் இப்போது கீழ் எகிப்தில் வளருவதில்லை. பல ஆயிரம் வருடங்களுக்கு முன்னர், பாபிரஸ் துணிகள் அல்லது தாட்களில் பெரும்பகுதி எகிப்தி லிருந்துதான் வந்தன எனினும் நைல் நதியின் மேற்புறப்பிராந்தியங்கள், சிரியா, எதியோப்பியா ஆகியவற்றில் பாபிரஸ் புற்களை இன்றும் காணலாம்.

புத்தகங்களை அச்சிடவும் உலகச் செய்திகளை வெளியிடவும், கடிதங்களை எழுதவும், சிப்பங்கட்டவும் ஒவ்வொரு ஆண்டு மேலும் மேலும் அதிக அளவில உபயோகித்து வரும். அன்றாட உபயோகம் பொருளுக்கு மனித குலம் கீழ்த்திசை நாடுகளுக்கு எந்த அளவுக்கு கடமைப்பட்டுள்ளது என்பதை நாம் உணர்ந்துள்ளோமோ?

எகிப்தியர்கள் பாபிரஸ் புற்களைப் பயன்படுத்த ஆரம்பித்த பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் தான்வறக் குறைய இன்றுள்ள காகிதத்தைப் போன்ற காகிதத்தைச் செய்யும் முறை கண்டு பிடிக்கப்பட்டது. சுமார் 1,800 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த சாய்–லூன் என்ற ஒரு சீனர்தான். கந்தைத் துணிகளைக் கொண்டு முதன் முதலில் காகிதம் தயாரித்தவர் என்று பொதுவாக நம்பப்படுகிறது. காகிதத் தயாரிப்புக்கு இன்னமும் கந்தைத் துணிகள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால்இவ்வித காகிதத் தயாரிபபு முறையை சீனாவுக்கு வெளியே வெளி உலகுக்கு முதலில் அறிமுகப் படுத்தியவர்கள அராபியர்களே. விஞ்ஞானத்தையும், மற்ற அறிவையும் பரப்ப காகிதத்தை அவர்கள்தான் முதன் முதலில் பயன்படுத்தினர்.

சுமார் 1200 ஆண்டுகளுக்கு முன்னர் அராபியர்கள் பிரபல சாமர்க்கண்ட் நகரைக் கைப்பற்றினர். அப்போது சீனப் படை ஒன்று அவர்களைத் தாக்கியது. அராபியர்கள் சீனப் படையை முறியடித்து சீனர்களை சிறைப் பிடிததனர். அவர்களில் சிலர் காகிதம் தயாரிக்கும் முறையை அறிந்தவர்களாக இருந்தனர்.

அவர்கள் மூலம் அறிந்த அக் கலையை அராபியர்கள் முதலில் தாங்களே மேற்கொண்டார்கள். முதலில் அவர்கள் சணல் நாரையும், பிறகு மற்ற தாவர நார்களையும் பயன்படுத்த ஆரம்பித்தனர். 9–ம் நூற்றாண்டில் காகிதத்தில் எழுதப்பட்ட அராபியக் கையெழுத்துப் பிரதிகளை இப்போதும் காணலாம். அவற்றை நன்கு படிக்கவும் முடிகிறது. சுமார் 900 வருடங்களுக்கு முன்னர்—அதாவது ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும காகித ஆலைகளே இல்லாமல் இருந்த சமயத்தில்—கெய்ரோவில் காகித உற்பத்தி நடைபெற்று வந்தது.

ஐரோப்பா மீது படையெடுத்து ஐரோப்பிய நாடுகளைப் பிடித்த மூர்கள்தான் காகித தயாரிப்புத் தொழிலை ஐரோப்பாவுக்குக் கொண்டு வந்தனர். ஸ்பெயினில் பல நகரங்களில் காகித உற்பத்தி சாலைகளை நிறுவினர். சிசிலி

அராபியர் ஆதிக்கத்தில் இருந்த போது காகிதத் தயாரிப்பு இத்தாலிக்கு வந்தது.

ஐரோப்பாவில் அச்சடிப்பு முறை கண்டு பிடிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான புத்தகங்கள் தோன்ற ஆரம்பித்தன. பின்னர் மக்கள் மேலும் மேலும் நல்ல அதிக அளவில் எழுதவும், படிக்கவும் கற்றுக்கொள்ளவே காகிதத் தயாரிப்புக்கு மூலப் பொருள் பஞ்சமும் ஏற்பட்டது. பிறகு கந்தைகளுடன் படிப்படியாக எஸ்பார்ட்டோபுல் பிறகு மரக் குழம்பு ஆகியவையும் பயன்படுத்தப்பட்டன. பின்னர் காகித தயாரிப்புக்கு ரசாயன விஞ்ஞானம் என்ஜினீரிங் அறிவு ஆகியவையும் பயன்படுத்தப் பட்டன. இதன் மூலம் காகித உற்பத்தி பெயரளவில் பெருகியதுடன் தேவைக்குத் தகுந்தபடி வகை வகையாக காகிதங்களைத் தயாரிப்பதும் சாத்தியமாகியது.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் உபயோகிக்கப்பட்ட எகிப்திய பர்பிரஸ் புற்களினாலான "காகிதங்கள்" எப்படி அவ்வளவு நேர்த்தியானவையாகவும், நீடித்து உழைப்பவையாகவும் இருந்தன என்பதை ஒருவராலும் சரியாக விளக்க முடியவில்லை.

—"தினமணி"

---

## சேவல் இல்லாத கோழி முட்டைகள்!

முட்டை வியாபாரத்துக்காக கோழிகளை வளர்த்தால் அந்தப் பண்ணைக்கு சேவல்கள் தேவையில்லை. சேவலின் சேர்க்கை இல்லாமலே பெட்டை முட்டையிடும்.

சேவல் சேர்க்கையால் உண்டான முட்டைக்கும், சேவல் சேர்க்கை இல்லாமல் வந்த முட்டைக்கும் உணவுத் திறனில், ஊட்டத் திறனில் ஒரு வித்தியாசமும் இல்லை. இந்த இரண்டு முட்டைகளுக்கும் ஒரு வித்தியாசம் என்னவெனில், சேவல் சேர்க்கைக்குப் பிறகு உண்டான முட்டை குஞ்சு பொரிக்காது. ஆகையால் சேவல் சேர்க்கையில்லாமல் வந்த முட்டையில் ஜீவன் உண்டாகவில்லை

ஜீவன் உண்டாகாத முட்டை, அதாவது சேவலின்றி இடப்பட்ட முட்டை, ஜீவனுள்ள முட்டையை விட நாள்பட்டு நீடித்து இருக்கும். ஜீவன் உண்டான முட்டையானது 68° Fக்கு உட்பட்டதும் பரிணமிக்கத் தொடங்குகிறது. ஆகையால் வெள்ளையும் மஞ்சளும் விரைவில் வீணாகத் தொடங்குகின்றன. 95° முதல் 110° வரை வெப்பத்தில் நாற்பத்தியெட்டு மணி நேரத்தில் முட்டையில் ரத்தம் தோன்றுகிறது. அந்த முட்டை உணவுக்கு லாயக்கில்லாமல் போகிறது. ஜீவன் உண்டாகாத முட்டை அதே வெப்பத்தில் ஐந்து நாட்கள் வரை கெடுவதில்லை.

இந்தியாவில் பல இடங்களில் 68° F மேல் நிலவுகிறது. குளிர்பதனி வசதிகள் குறைவு. ஆகையால் ஜீவன் உண்டான முட்டை

(47–ம் பக்கம் பார்க்க)

# மாலை நேர வகுப்புகளில் சேர, குறைந்த பட்ச வயது நிர்ணயம்

## ஜூலை முதல் வாரம் ஆரம்பமாகும்

**மாலைநேர வகுப்புகளை நடத்த சென்னை நகரில் உள்ள சர்க்கார் ஆர்ட்ஸ் காலேஜும்; ராணிமேரி கல்லூரியும் தயாராகிக் கொண்டிருக்கின்றன. இந்தச் சமயத்தில் இந்த வகுப்புகளில் சேர்த்துக் கொள்ளப் படுபவர்களுக்கான வயது வரம்பு பற்றி ஒரு சர்ச்சை கிளம்பியுள்ளது.**

இரண்டு வருஷ பி. யூ. சி. வகுப்பில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களே சேர்த்துக் கொள்ளப் படுவர் 3 வருஷ பட்டப் படிப்புக்கு 20 வயதிற்கு மேற்பட்டவர்களே சேர்த்துக் கொள்ளப்படுவர்.

சாதாரணமான கல்லூரி வகுப்புகளில் சேர்த்துக் கொள்ளப் படாத மாணவர்கள் மாலை நேர வகுப்புக்களுக்கு வராமல் தடுத்து வேலை செய்பவர்களை மட்டுமே மாலை நேர வகுப்புக்களில் சேர்ப்பதற்கு வசதி செய்யும் நோக்கத்துடன் குறைந்த பட்ச வயதை சர்வகலாசாலை நிர்ணயித்திருப்பதாக விளக்கப்படுகிறது.

ஆனால் புத்திசாலியாயுள்ள ஏழை மாணவர்கள், சம்பாதிக்கும் போதே படிக்கும் வாய்ப்பை இந்த வயது வரம்பு பாதித்து விடும் என்று ஒரு பிரிவினர் கருதுகின்றனர்.

பள்ளிக்கூடப் படிப்பு முடிந்தவுடன் நேராக வேலையில் சேர வேண்டிய நிர்ப்பந்தம் உள்ள ஒரு பையன் மாலை நேர வகுப்புக்களில் சேர்வதற்கான குறைந்த பட்ச வயது வரம்பை அடையும் வரை 2, 3 வருஷங்களை வீண் செய்ய வேண்டியிருக்கும். இதற்குள் படிக்கும் பழக்கத்தையும் அவன் இழந்துவிடக்கூடும்.

சரித்திரம் போன்று 'ஆர்ட்ஸ்' பாடங்கள் மட்டுமே மாலை நேர வகுப்புக்களில் போதிக்கப்படும் என்பது குறித்தும் அதிருப்தி நிலவுகிறது. விஞ்ஞான பாடங்களைப் போதிப்பதற்கு ஆசிரியர் விஞ்ஞான சாதனம் போன்ற கூடுதலான வசதிகள் தேவையாதலால், இந்த வருஷம் "ஆர்ட்ஸ்" பாடங்களை மட்டுமே இந்தக் கல்லூரிகள் போதிக்கும்.

மாலை நேர வகுப்புக்களை நடத்துவதில் அனுபவம் கிடைத்தவுடன், இந்தக் குறைபாடும் சரி செய்யப்பட்டு விடும் என்று தெரிகிறது.

ஜூலை முதல் வாரத்தில் வகுப்புகள் ஆரம்பமாகும். ஜூன் 15-ந் தேதி மாணவர்களைச் சேர்க்கும் வேலை ஆரம்பமாகும்.

வகுப்புக்கள் மாலை 5-30 மணிக்கு ஆரம்பமாகும் என்று தற்காலிகமாக நிர்ணயிக்கப்பட்டுள்ள போதிலும் ஆபீசுகளில் வேலை செய்பவர்கள், வகுப்புக்களுக்குச் சரியாக வருவதற்கு உதவும் பொருட்டு 6 மணிக்கு வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படலாம். வகுப்புகள் 3 மணி நேரம் நடக்கும்.

இந்திய வீராங்கனை

# ஜான்ஸி ராணி லக்ஷ்மிபாய்

எஸ். டி. காசிராஜன்

இந்தியாவில் ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்டவர்கள் ஆடவர் மட்டுமல்ல; ஆயிரமாயிரம் பெண்களும் உண்டு. அவர்களுள் ஒருத்தி ஜான்ஸி ராணி லட்சுமிபாய். அவளுடைய வாழ்வுக்காலம் முப்பத்தோரு ஆண்டுகள்தான். அதாவது, ஒரு சராசரி இந்தியப் பெண், கணவன் ஒருவனைக் கைப் பிடித்து, இரண்டு, மூன்று மழலைச் செல்வங்களைப் பெற்றெடுத்து, வாழ்க்கைப் பாதையின் மையத்தே வந்து நிற்பது இந்த வயதில்தான். ஆனால் ஜான்ஸி ராணியின் வாழ்வு அந்த வயதில் முடிந்துவிட்டது. அதற்குள்தான் அவள் எத்தனை வீரமான வாழ்வு வாழ்ந்து விட்டாள்?

தன்னைவிட அதிக வயதுடைய ஒருவருக்குத் தனது பதினேந்தாவது வயதில் இரண்டாந்தாரமாக வாழ்க்கைப்பட்ட அவள் இல்லறம் நடத்தியது பதினோரு ஆண்டுகள்தான். இருபத்தி ஆறும் வயதில் அவள் விதவையானாள். முப்பத்தி ஒன்றும் வயதில் அந்நிய ஆட்சிக்கு எதிராகச் சுதந்திர போர் புரிந்து வீர சொர்க்கமடைந்து விட்டாள்.

*　*　*

அவளது பெற்றோர்கள் காசிக்குச் சென்றிருக்கும்போது அங்கு 1827ம் ஆண்டில் அவள் பிறந்தாள். அவர்கள் மராத்திய தேசத்து கார்காடா பிராமண வகுப்பைச் சேர்ந்தவர்கள். தந்தையின் பெயர் மோரோபான்ட் என்பது. தாயின் பெயர் பகிரதி. சிறுமியாய் இருக்கும் பொழுது அவளுக்கிடப்பட்ட பெயர் மாணகர்னிகா. மாணகர்னிகா என்பது மாநதி கங்கையின் படித்துறைக்கு அமைந்தபெயர். மணமாகும் வரைக்கும் அவளது பெயர் மனு. திருமணத்துக்குப் பின் அவளது பெயர் லட்சுமிபாய்.

*　*　*

அவளுடைய தந்தையார் பேஷ்வாவுக்கு ஆலோசகராக இருந்தார். பேஷ்வாவுக்கு மோரோ பாண்டிடமும், அவரது அழகு மகள் மனுவிடமும் அபார அன்பு. அவளை ஒரு நல்ல இடத்தில் மணமுடிக்க வேண்டும் என்று பல முயற்சிகள் செய்து, கடைசியில் ஜான்ஸியின் மன்னரான கங்காதர்ராவிடம் ஆள் சொல்லி அனுப்பினார். கங்காதர் தமது அமைச்சர்களை அனுப்பி மனுவைப் பார்க்கச் சொன்னார். அவளை அவர்களுக்குப் பிடித்து விட்டது. 1842ல் திருமணம் நடந்தது. அப்பொழுது அவளுக்கு வயது 15.

இன்பமான இல்லறம். அதன் சின்னமாக ஓர் ஆண்மகவும் பிறந்தது. ஆனால் அது மூன்று மாதத்

திலேயே இறந்து ஜான்ஸியையே துயரக்கடலில் ஆழ்த்தியது. அதைத் தொடர்ந்து மற்றுமொரு பேரிடி. அவளுடைய கணவர் 1853ல் இறந்துவிட்டார்.

* * *

இந்தச் சமயத்தில்தான் ஹார்டின்சுக்குப் பதிலாக டல்ஹௌஸி என்பவர் இந்தியாவுக்கு வைஸ்ராயாக வந்தார். அவர் ஒரு யதேச்சாதிகாரி. ஆதிக்க வெறி பிடித்தவர். ஆங்கில சாம்ராஜ்யத்தின் ஆளுகை இந்தியாவெங்கும் நிலவ வேண்டும் என்று ஓர் பைத்தியக்கார வேகத்தோடு அவர் செயல் புரிந்தார். ஏதாவது ஒரு காரணம் கூறி, இந்திய சமஸ்தானங்களை ஒன்றன்பின் ஒன்றாக பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டே வந்தார்.

தம் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு அவர் கடைபிடித்த வழி ஒன்றுண்டு. இதற்கு வாரிசில்லா சமஸ்தானக் கொள்கை (Doctrine of Lapse) என்று பெயர். அதாவது ஒரு இந்திய சமஸ்தானாதிபதி வாரிசு இன்றி இறந்துவிட்டால், அவரது அரசு, அவர் ஏதாவது ஒரு தத்துப்புத்திரன் எடுத்திருந்தாலும், அவனுக்குப் போகாது. அந்தத் தத்துப்புத்திரனுக்கு ஆங்கில அரசாங்கம் ஏதாவது பென்ஷன் கொடுக்கும். அவ்வளவே. மற்றபடி அந்த சமஸ்தானம் ஆங்கில சாம்ராஜ்யத்தோடு சேர்ந்துவிடும். இந்தப் பயங்கரப் பேராசைக் கொள்கை மூலம் டல்ஹௌஸி, சடாரா, ஜெய்ப்பூர், சாம்பல்பூர் முதலிய சமஸ்தானங்களை விழுங்கி விட்டார். ஜான்ஸி சமஸ்தானமும் அதே வழியில்போய் விடுமென்ற பயம் மக்களைக் கவ்வியிருந்தது.

* * *

ராணி லட்சுமிபாய் தனது கணவர் இறந்த துக்கத்தில் மூழ்கி செயலற்றுப் போய்விடவில்லை. ஜான்ஸியை எதிர்நோக்கி இருக்கும் ஆபத்தை உணர்ந்தாள். ஆட்சியின் பொறுப்பை அவளே ஏற்றுக்கொண்டாள். ராணுவம் அவளுடைய நேரடிக் கண்காணிப்பின் கீழ்வந்தது. காலை நேரங்களில் பாதுகாப்புத் திட்டங்களைக் கவனிப்பாள். பிற்பகலில் நீதி, நிர்வாகம், வருவாய் துறை வேலைகளைப் பார்ப்பாள். மாலை நேரங்களில், மத ஸம்பந்தமான புத்தகங்களை, மற்றவர்கள்படிக்கக்கேட்டுக் கொண்டிருப்பாள்.

அவள் ஓர் அழகி. அவளை உயரம் என்று சொல்ல முடியாது. கட்டை என்றும் சொல்ல முடியாது. கொஞ்சம் பருமன் என்று வேண்டுமானால் சொல்லலாம். உருண்டையான முகம். நீள மூக்கு, கரிய பெரிய கண்கள்; காதுகளில் இரண்டே இரண்டு தங்க வளையல்களைத் தவிர வேறு நகை எதுவும் அணிவதில்லை. உடுப்பதோ வெண்மையான மெல்லிய மஸ்லின் ஆடை. இவ்வளவோடும் அவளைப் பார்க்கும் பொழுது அவள் அழகாகவே இருந்தாள் என்று அவளுடைய

வக்கீல் ஜான்லாங் கூறியிருக்கிறார்.

*   *   *

தன்னுடைய சமஸ்தானத்திற்கு வந்துள்ள ஆபத்தை உணர்ந்த அவள், தன் கணவர் தத்துப்புத்திரனை எடுத்திருந்த தாமோதரை அரசு செலுத்த அனுமதிக்க வேண்டுமென்று கவர்னர் ஜெனராலுக்கு எழுதினாள். அவளது கோரிக்கை செவிடன் காதில் ஊதிய சங்காகவே முடிந்தது. 1854ம் ஆண்டு, பிரிட்டிஷ் அரசாங்கம் ஜான்ஸியை எடுத்துக் கொண்டு அவளுக்கு மாதத்திற்கு ரூ. 5000 உபகாரச் சம்பளம் அளிப்பதாக வாக்களித்தது. ஆனால் அவள் அதை வாங்கவே இல்லை, சாகும் வரையிலும்.

ஜான்ஸியை பிரிட்டிஷ் அரசாங்கம் எடுத்துக் கொண்டதால் தன் மாளிகையை விட்டு விட்டு தனக்கெனத்தரப்பட்டிருந்த ஒரு வீட்டில் அவள் குடியேறினாள். ஜான்ஸியைத் திரும்பப்பெற செல்வாக்குள்ள ஆங்கிலேயர்கள்மூலம் மூன்று ஆண்டுகள் முயற்சித்தாள். அவளுடைய முயற்சி விழலுக்கிறைத்த நீராகவே முடிந்தது.

இப்பொழுதுதான் இந்தியாவின் முதல் சுதந்திரப் போர் ஆரம்பித்தது. அதுதான் சிப்பாய் கலகம். நாடெங்கிலும் பரவலாகமூண்ட அந்தக்கலகத்தை ஒடுக்குவதில் பிரிட்டிஷ் அரசாங்கம் தனது முழுப் படைகளை ஈடுபடுத்தியிருந்த சமயத்தில் ராணி லக்ஷ்மிபாய் 1857ம் ஆண்டு ஜூன் மாதம் ஜான்ஸியின் அரசியாகத் தனக்குதானே பிரகடனம் செய்து கொண்டு ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டாள். உடனே அரசாங்கத்தின் கவனம் ஜான்ஸியின் பக்கம் திரும்பியது. ராணியிடமிருந்து ஜான்ஸிகோட்டையைக் கைப்பற்ற பிரிட்டிஷ் அரசாங்கம் ஸர்ரோஸை அனுப்பியது. ரோஸ் ஒரு தீரர். எனினும் அவரால் ராணியிடமிருந்து அக்கோட்டையை ஓராண்டுக்காலமாக மீட்க முடியவில்லை. ஆனால் அந்த ஓராண்டுக்குப் பின் கோட்டை அவர் வசமாயிற்று. ஆதலால் ராணி லட்சுமி பாய் ஆணுடைதரித்து தன் தத்துப் புத்திரனை தன்னோடு எடுத்துக் கொண்டு, இரவிலேயே கோட்டையை விட்டுப் பறந்து விட்டாள். ஒரு நாள் முழுவதும் குதிரையிலேயே பயணம் செய்து 102 மைல்களைக் கடந்தாள்.

கன்ஞ் என்ற இடத்தில் தாந்தியா தோபியை சந்தித்தாள். பல போர் வீரர்களை ஒன்று சேர்த்தாள். ராவ் ராகிபை கல்பி என்ற இடத்தில் சந்தித்தாள். யாவரும் ஒன்று கூடி ஆங்கிலேயர்களோடு போரிட்டனர். அவளே ராணுவ உடைத்தரித்து படைகளுக்குத் தலைமை தாங்கிப் போர் முனைக்கு நடத்திச் செல்வாள்.

சிவப்பு ஜாக்கெட்—சிவப்பு அங்கி—சிவப்புத் தலைப்பாகை-இது தான் அவளுடைய ராணுவ ஆடை. ஆதலால் அவள் ஆணா பெண்ணா என்று யாராலும் கண்டு பிடிக்க முடியாது.

பயங்கரமான சண்டைக்குப் பின் ஆங்கிலத் தளபதி ரோஸ், கல்பியைப் பிடித்துக்கொண்டார். ராணியும் தாந்தியா தோபியும் காட்டிற்குள் ஓடி விட்டனர். புரட்சியை அடக்கியாகி விட்டது என்று ரோஸ் பெருமிதத்தோடு இருந்தார்.

திடீரென்று புரட்சி வீரர்கள் குவாலியர் கோட்டையைப் பிடித்தனர். இது பிரிட்டிஷ் அரசுக்கு இடி விழுந்தது போல் இருந்தது. ரோஸ் குவாலியருக்கு விரைந்தார். ராணியின் வீரச் செயல்கள் அவரைக் கிடுகிடுக்கவைத்தன.

1858 ஜூன் 17 ஆம்நாள். நண்பகல் ராணி போர் வீரர்களோடு சர்பத் குடித்துக் கொண்டிருந்தாள். பிரிட்டிஷ் படை அவர்களை நெருங்கி வந்து விட்டதற்கான அறிகுறிகள் தெரிந்தன. ராணியின் படை போர் செய்வதற்கு ஆயத்தமானது. ராணியும் குதிரையில் ஆரோகணித்து விட்டாள். ஆனால் அதற்குள் ஒரு துப்பாக்கி ரவை அவளது விலாவைத் துளைத்தது. ஒரு சிப்பாய் அவளது தலையை வெட்டி விட்டான். இவ்வளவையும் தாங்கிக்கொண்டு குதிரையை வேகமாகச் செலுத்தினாள் ராணி. ஆனால் பாதி தூரம் போவதற்குள் அவள் இறந்து விழுந்து விட்டாள். அவளது வேலைக்காரர்கள், பக்கத்திலிருந்த தோட்டத்தில் வைக்கோல் போரால் அவளது உடம்பை மூடி அவளைத் தகனம் செய்தனர்.

பிரான்ஸ் நாட்டில் ஜோன்-ஆப் ஆர்க் என்ற ஒரு வீராங்கனை வாழ்ந்ததாகச் சரித்திரம் புகழ் பாடுகிறது. அவளைப் பற்றி வரலாற்று ஆசிரியர்கள் பக்கம் பக்கமாக எழுதிக் குவித்திருக்கின்றனர். ஆனால் அவளுக்கு நிகரான ராணி லக்ஷ்மிபாய்க்குச் சரித்திரத்தில் அவ்வளவு இடம் தரப்படவில்லை. காரணம் அந்தச் சரித்திரத்தை எழுதியவர்கள் பெரும்பாலும் மேல் நாட்டுக்காரர்கள்தானே.

—**தினமணி**

---

(42–ஆம் பக்கம் தொடர்ச்சி)

யைக் காப்பது கடினம்.

மேலும், முட்டையிடப் பயன்படாத சேவலை வைத்து தீனி போடுவதும் வீண் செலவுதானே? சேவல்களை ஒதுக்கிவிட்டால், அந்த எண்ணிக்கைக்கு உள்ள பெட்டைகளைத் தீனி போட்டு வைத்துக் கொண்டால் கூடுதலான, வீணாகாத முட்டைகள் பெற்று லாபம் பெற முடியும்.

மேலும் சேவல்கள் பண்ணையில் இருப்பதால் ஒரு விகிதத்தில் பெட்டைகளின் முட்டையிடும் திறன் குறைகிறது சேவல்க[redacted] பெட்டைகளைத் துன்புறுத்திக் கொண்டே இருக்கும். இதனால் பெட்டை சரியாக முட்டையிடாது. சேவல்கள் இல்லாவிட்டால், முட்டையிடும் திறன் பெட்டைகளுக்கு உயரும்.

முட்டையில் ஜீவன் இருப்பதால் அதைச் சாப்பிடுவதில்லை என்று சொல்பவர்களையும் சாப்பிடவைக்கலாம்.

# அதிசயம்! ஆனால் உண்மை

## அத்தனைபேரும் போட்டியின்றித் தேர்வு!

### கனா பார்லிமெண்டு தேர்தல் அதிசயம்

அண்மையில் கனாவில் நடந்த பொதுத் தேர்தலில் 198 பார்லி மெண்டு மெம்பர்களும் போட்டி யின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கனாவில் 15 மாதங்களாக ஒரு கட்சி அரசாங்கமே நடந்து வரு கிறது.

மக்கள் கட்சி மகாநாடு அங்கீ கரித்த அபேட்சகர்கள் மட்டுமே அபேட்சைப் பத்திரங்கள்தாக்கல் செய்தனர். அதனால் தேர்த லுக்கே அவசியமில்லாமல் போய் விட்டது.

---

39–ஆம் பக்கத் தொடர்ச்சி

அந்நிய நாட்டினர் பலர் அடிக் கடி லண்டன் பஸ்களில் பிர யாணம் செய்வதால் அவர்களை உபசரித்து வேண்டுவன செய்ய அவர்கள் பல மொழிகளில் வல்லமைபெற்றுள்ளனர். கடமை, கண்ணியம், நாணயம், கட்டுப் பாடு போன்ற குண நலன்கள் நிரம்பியவர் லண்டன் பஸ் கண் டக்டர். கண்டக்டர் பிரயாணி களிடம் மரியாதையாக நடந்து கொள்வதால் பொறுப்பான பதவி வகிக்கும் அவரைப் பிரயாணி களும் கௌரவமாக மதித்து நடத்துகின்றனர். அவ்வப்போது ஹாஸ்ய வெடிகளை வெடித்துப் பிரயாணிகளைச் சிரிப்பில் ஆழ்த் துவதையும் லண்டன் பஸ் கண் டக்டர்கள் தமது கடமையுள் ஒன்றாகக் கருதுகின்றனர்.

லண்டன் பஸ் கண்டக்டர் களில் பெரும்பாலோர் பெண் களே! அவர்கள் பணிவாகப் பணியாற்றுவதில் வியப்பொன்று மில்லை! லண்டன் பஸ் கண்டக் டர்கள் பிரயாணிகளுக்குச் செய் யும் உதவிகள் எண்ணிலடங்கா. லண்டன்வாசி, வெளிநாட்டார் என்ற பேதமின்றி எல்லோருட னும் இன்முகத்துடன் பழகிப் பணியாற்றும் இலண்டன் பஸ் கண்டக்டர்களைப் புகழ வார்த்தை கள் இல்லை!

## 'எலெக்ட்ரானிக்' கண்டக்டர்!

எலெக்ட்ரானிக் என்றவுட னேயே எங்கே ஷாக் அடிக்குமோ என்று பயப்பட வேண்டாம்! நியூயார்க் நகரப் பஸ்களில் கண் டக்டர் கிடையாது. பஸ் பிர யாணிகள் ஏறியவுடன் டிரைவரது ஆசனத்துக்கு அருகாமையி லுள்ள ஒரு கருவியில் உரிய சில்லறையைப் போட்டால் டிக் கெட் கிடைக்கும். கண்டக்டரே இல்லாமையால் பிரயாணிகளுக் கும், கண்டக்டர்களுக்கும் நடக் கக்கூடிய தகராறுகளை நியூயார்க் கில் காண முடியாது. காசு போட்டால் டிக்கெட் கொடுக்கும் கருவிதான் எலெக்ட்ரானிக் கண் டக்டர்!

—"தினமணி சுடர்"

# வரலாற்றில் வெற்றிலை பாக்கு

**வி. கோபாலன்**

இடைக்கால இந்தியாவில் வருகை தந்த வெளி நாட்டுக்காரர்களை நம் நாட்டில் பெரிதும் கவர்ந்தது வெற்றிலைப் பாக்கு விஷயமே. மனுச்சி என்னும் சரித்திரப் பிரசித்தி பெற்ற பிரயாணி, முதன் முதலில் இந்தியாவிற்கு வந்த போது, சூரத் துறை முகத்தில் இறங்கியதும், அங்குள்ளவர்கள் செக்கச் செவேர் என்று எதையோ ஒன்றை மென்று கொண்டிருப்பதைக் கண்டு, திகைப்படைந்தாராம். அடிக்கொரு தடவை அவர்கள் ரத்தம் போன்று உமிழ்வதைக் கண்டதும், 'சரிதான் பயங்கரமான ஓர் நோய்தான் இந்திய மக்களைப் பிடித்திருக்கிறது' என்று நினைத்தாராம் மனுச்சி. அருகிலிருந்த ஓர் ஆங்கிலப் பெண்மணி விஷயத்தை விளக்கியதும்தான் மனுச்சியின் திகைப்பு தீர்ந்தது.

## வரலாற்றுத் தகவல்கள்

வெற்றிலைப் பாக்கின் பழமையையும், பெருமையையும் அவற்றின் மீது வெகு நீண்ட காலமாக இந்திய மக்கள் கொண்டிருந்த விருப்பத்தையும் பல பண்டைய தகவல்கள் உணர்த்துகின்றன. இபன் என்னும் வரலாற்றுப் பிரமுகர் வெற்றிலைக் கொடிகள் திராட்சைக் கொடிகளைப்போன்று விரும்பி வெகுவாக வளர்க்கப் பட்டதென்று எழுதுகிறார். வெற்றிலைத் தளிரும், வெற்றிலைச் சாறும் நல்ல பலன்களைக் கொடுக்கும் மருந்துகளாக உபயோகிக்கப்பட்டதாம். தென்னந் தோப்புகளில் வெற்றிலைக் கொடிகள் பயிரிடப்பட்டன வென்றும், அவை தென்னை மரங்களைச் சுற்றிப் படர்ந்து வளர்ந்தன வென்றும் எழுதுகிறார் இபன். "வெற்றிலைக் கொடி பழம் எதையும் கொடுப்பதில்லை. கனியை ஒத்த சுவையுடையதாக அதன் தளிரே விரும்பப்படுகிறது. சற்று வெண் மஞ்சளான வெற்றிலைகள் தரத்தில் உயர்ந்தவையாக அதிகமாக விரும்பப்பட்டது, தடித்த கருமை நிறமான வெற்றிலைகளுக்கு அதிக கிராக்கி இல்லை. ஏழை மக்களுக்கு தடித்த வெற்றிலைகள் குறைந்த விலைக்குக் கிடைத்தன. எல்லா வகை வெற்றிலைகள் குறைந்த விலைக்குக் கிடைத்தன. எல்லா வகை வெற்றிலைகளுக்கும் மொத்தத்தில் நல்ல கிராக்கி இருந்தது. வெற்றிலைத் தோட்டங்களில் தளிர் கொய்தல் தினம் தோறும் சுறுசுறுப்பாக நடைபெற்று வந்தது.

பெர்னியர் என்ற மற்றொரு அன்னியர் "வெற்றிலை என்பது அநேக நரம்புகள் கொண்ட ஓர் சிறிய இலை அதில் சிறிது சுண்ணாம்பை பக்குவமாகத்தடவி, வேறு சில வாசனைத் தூள்களையும் வைத்துச் சுருட்டி வாயில் போட்டுமென்று விடுவார்கள் இந்தியர்கள்" என்று குறிப்பிடு

கிறார். இதிலிருந்தும், இபன் படூடாவின் குறிப்பிலிருந்தும் வெற்றிலையோடு சுண்ணம்பையும் கலந்து உபயோகிப்பது பண்டைப் பழக்கம் என்பது புலனாகிறது. இபன் தனது குறிப்புக்களில் வாசனைப் பாக்குகளைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

## புகையிலை

வெற்றிலை, பாக்கு வரிசையில் தவிர்க்க முடியாததான புகையிலை மொகலாயப் பேரரசர் ஜஹாங்கிர் காலத்தில்தான் இந்திய மக்களுக்கு முதன் முதலில் அறிமுகமாகியது.

சூரத் துறை முகத்தில் மனுச்சிக்கு வெற்றிலை பாக்கை அறிமுகப்படுத்திய ஆங்கிலப் பெண்மணி, அவருக்கு ஒரு தரத்துக்கு வெற்றிலைப் பாக்கு தந்ததும், அதைச் சுவைத்த மனுச்சிதிக்கு மூக்காடி இறுதியில் மயக்கமே அடைந்துவிட்டார். அந்தத் தாம்பூலத்தில் புகையிலையும் கலந்திருந்ததே காரணம்.

வெற்றிலைப் பாக்கை எப்படிப் போடுவது என்பதையும் இபன் விவரிக்கிறார். முதலில் கொஞ்சம் பாக்குத்துகளை வாயில் போட்டு மெல்ல வேண்டும். பிறகு வெற்றிலையின் பின் பக்கத்தில் சுண்ணம்பைத் தடவி, சுருட்டி வாயில் போட்டுக் கொண்டு, மென்று சாளிதாக்கப்பட்ட பாக்குச் சுவையுடன் வெற்றிலையைக் கலந்து மெல்ல வேண்டும்.

இந்தியா வெங்கும் வெற்றிலை பாக்கு விருந்தின் முக்கிய அம்சமாக இருந்த தென்கிறார் மனுச்சி. சீனவைச் சேர்ந்த மஹான் என்பவர் கி. பி. 1406–ல் வங்காளத்திற்கு விஜயம் செய்தார். அவர் தம் குறிப்பில் பரஸ்பர நல்லுணர்ச்சிகளை வளர்க்கும் மகிழ்ச்சியின் மங்கலச்சின்னமாகத் தாம்பூல உபசரணையை இந்தியர்கள் கையாளுகின்றனர்" என்று குறிப்பிட்டுள்ளார்.

தாம்பூலம் பொதுவாக விருந்தின் இறுதியிலேயே கொடுப்பது வழக்கம். இபன் தமது குறிப்பில், "முகமது பின் துக்ளக்கின் அவையில் ஒவ்வொரு நாளும் விருந்து முடிந்ததும் விருந்தினர் அனைவருக்கும் கை நிறைய பாக்குத்துகளும், பட்டு நூலால் கட்டப் பெற்ற பதினைந்து வெற்றிலைகளும் கொடுக்கப்படுவது வழக்கம்" என்று எழுதியுள்ளார்.

## இலக்கியத்தில்

துளஸி தாஸரின் ராம சரித்திரத்தில் வெற்றிலை மகாத்மியம் இடம் பெற்றுள்ளது. ராமனுக்கும், சீதைக்கும் திருமணம் நிகழ்ந்து விருந்து உபசாரங்கள் முடிந்ததும் ஜனகன் தசரத சக்கரவர்த்திக்கும் அவரது நண்பர்களுக்கும் தாம்பூலம் கொடுத்து கௌரவித்ததாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதைப்போன்ற ஜயஸியின் "பத்மாவதி" எனும் காவியத்தில் சிம்ஹாசலத்து மன்னன் கந்தர்வசேனன் தன் மகள் பத்மாவதியின் திருமண வைபவம் நிகழ்ந்ததும், விருந்தினர்களுக்குத் தாம்பூல உபசாரம் செய்ததாகக் குறிப்பிடப் பெறுகின்றது.

வெற்றிலைப் பாக்குப் "போடுவது" ஓர் நாகரிகமாகவே இடைக் காலத்தில் கொள்ளப்பட்டது. மன்னர்களுக்கும், ராஜகுடும்பங்களுக்கும் தாம்பூல மோகம் அதிகமாகவே இருந்திருக்கிறது. வெற்றிலைப் பாக்கு உபயோகத்திற்காக சில அதிகாரிகளுக்கு மன்னர்கள் 'தனிமான்யமே" விட்டுள்ளதாகவும் மனுச்சி குறிப்பிட்டுள்ளார். ஷாஜஹானின் மகளான பேகம் சாகிப்பின் வெற்றிலைப் பாக்குச் செலவிற்காக சூரத் துறைமுகத்தில் கிடைக்கும் சுங்க வரிப்பணம் முழுவதையும் மகளுக்கு என்று ஒதுக்கியிருந்தாராம் ஷாஜஹான். நமக்கு இந்தச் செய்திகளை எல்லாம் குறித்து வைத்து விட்டுப் போன மனுச்சிக்கே — அவருக்கு வெற்றி பாக்கு மீதிருக்கும் சபலத்தைக் கண்ட வஸீர்கான் என்பவர் பத்து பவுன் காசுகளைக்கொடுத்து உதவினாராம்!

## தையலும் தாம்பூலமும்!

ஒரு பெண்ணின் மீதிருக்கும் காதலை அவளுக்குத் தெரியப் படுத்த ஒரு "பீடா"வை (வெற்றிலைச் சுருள்) அவள் மீது படும்படியாக வீசுவதும் ஒரு சாகசமாம்.

சில சமயங்களில் பரஸ்பர சவால்களை விடுத்துக் கொள்வதற்கு வெற்றிலைச் சுருளை சாட்சியமாகக் கொள்வது ராஜபுதனர்களின் பழக்கமாயிருந்திருக்கிறது.

பெண்களைப் பொறுத்த வரையில் வெற்றிலைப் பாக்குப் போடுவது உதடு சிவப்பாக இருக்கவே தான். கணவனுக்கு அன்பிருந்தால்தான் மனைவி வெற்றிலைப் பாக்கால் உதடு சிவக்கப் பெறுவாள் என்று ஓர் கர்ண பரம்பரை கதையும் உண்டு. ஜயஸியின், "பத்மாவதி" காவியத்தில் வெற்றிலைச் சாரால் பத்மாவதியின் தூய உதடுகள் கோவைப் பழம் போல் சிவந்திருந்ததென வர்ணிக்கப்படுகின்றது.

ஜெய்ப்பூர் மன்னர் ராஜா ஜெய் சிங்கின் அவைப்புலவர் தனது நாயகியை வர்ணித்துக் கவிபாடுகையில் "மலர்ச்சுமை தாங்காது வளைந்த கொடி போன்ற சற்று முதுகு வளைந்தும் வாயில் வெற்றிலை பாக்கு கொண்டும்." மென்மையான நீண்ட கூந்தலோடும், இமையோரங்களில் மை தீட்டியும் அவள் எழிலோடு காணப்படுகிறாள்" என்று பாடுகிறார். காவிய நாயகிகளுக்குத் தாம்பூல அழகு ஓர் அவசியம் என்பதை கவிஞர்கள் பலரும் தமது காவியங்களில் உணர்த்தியிருக்கின்றனர். வெற்றிலைக் கொடியுடன் உள்ள யக்ஷி வடிவங்களைச் சிற்பங்களில் காணலாம்.

## மூலிகை

வெற்றிலை ஓர் சிறந்த மூலிகையாகும். குழந்தைகளின் கபம், சளி, போன்ற உபாதைகளுக்கு ஆயுர் வேதாச்சார்யர்கள் வெற்றிலைகளின் மூலம் சிகிச்சை அளித்ததாகவும் மனுச்சி குறிப்பிட்டுள்ளார். வெற்றிலை ஜீரண சக்தியை அதிகரிக்கிறது என்பது வைத்தியர்களின் முடிவு. வெற்றிலையின் குணத்தை அடில்

பெஸ்ல் என்பார், "அது பசியற்றிருப்போருக்குப் பசியைத்தூண்டுகிறது. பசிப்போருக்குப் பசியை அடக்குகிறது" என்று குறிப்பிட்டுள்ளார். செயிண்ட் தாமஸ் ரோ என்பவர்வெற்றிலைமூளையைக் குளிர்ச்சியடையச் செய்கிறது என்று குறிப்பிட்டுள்ளார். சையது உஸ்மான் எழுதிய "சித்ராவளி"யில் வெற்றிலையை ஏழு அமிர்தங்களில் ஒன்று என்கிறார்.

இந்தியப் பெண்களுக்கும் வெற்றிலைப் பாக்கு மிகவும் விருப்பமானது. தாம்பூலத்தை மங்கலச் சின்னமாகப் பெண்டிர்கள் போற்றுவர். ஓர் கன்னிப் பெண் தனது மனதில் ஓர் ஆடவனை வரித்துள்ளதைத் தன் பெற்றோருக்குத் தெரிவிக்க வெற்றிலைப் பாக்கு போட்டுக்கொள்வதும் அக்காலத்தில் கையாண்ட உபாயமாகும்.

இத்துணைப் பெருமையுடைய வெற்றிலைப் பாக்கு ஓர் இணையற்ற பக்திப் பாசுரம் உருவாகவும் காரணமாக இருந்தது. காஞ்சியில் ஸ்ரீ காமாக்ஷி தேவியை பூஜித்து வந்தார் ஒரு முனிவர். ஒரு தினம் காமாக்ஷி அழகியயௌவன வடிவில் முனிவர் முன்தோன்றினாள். அந்த மங்கையைக் கண்ட முனிவர் தனது தவத்தைக் கலைக்கவே யாரோ ஒரு பெண் வந்துள்ளாள் என்று நினைத்து, தேவியைக் கண்ணெடுத்துப் பார்க்காமலே இருந்து விட்டார். அருட்பேற்றை அடையும்வேளை முனிவருக்கு வரவில்லை என நினைத்துத் திரும்பினாள் தேவி. அப்போது ஆலயத்தில் பணிபுரியும் ஓர் ஊமை பக்தனை தேவி எதிர்கொண்டாள். ஊமைக்கு இரங்கிய தேவி, அவன் வாயைத் திறக்கச் செல்லி, தனது வாயிலிருந்த வெற்றிலைச் சாறை உமிழ்ந்தாள். ஊமை, தேவியின் அருளால் கவித்துவம் வாய்க்கப் பெற்று "மூகபஞ்ச சதி" எனும் அற்புதப் பாசுரங்களைப்பொழிந்து தேவியின் அருளைப் பெற்றார்.

இங்ஙனம் பலவகைப் பெருமைகளைக் கொண்டுள்ள வெற்றிலைப் பாக்கு, இன்று தனது பெருமைகளைப் பன்மடங்கு பெருகச் செய்து கொண்டுள்ளது. வருங்காலத்திலும் அப்படித்தான்.

—"தினமணி சுடர்"

---

## எடைக்கு எடை வாடகை!

செனெக்டேடிகோ என்ற நகரில் ஒரு ஹோட்டல் சொந்தக்காரர் வாடிக்கைகாரர்களிடமிருந்து வாடகை வசூலிக்க ஒரு விசித்திர முறையைக் கையாள்கிறார். அந்த ஹோட்டலில் தங்க வரும் போது வருபவரின் எடை என்ன என்று பார்க்கிறார். ஒரு கிலோவுக்கு ஒரு லயர் வீதம் (சுமார் ஒரு பென்னி வீதம்) ஒரு நாளைக்கு வாடகை வசூலிக்கிறார்கள். ஆனால் 100 கிலோவுக்கு மேல் எடையுள்ளவர்களுக்கு 10 சதவிகிதம் சலுகை காட்டுகிறார்.

# கல்வி முறையை மாற்றி அமைக்க திட்டக் குழு முயற்சி

## 4-வது திட்டக் காலத்தில் தொழில் நுட்பப் பயிற்சிக்கு முக்கியத்துவம்

### டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் வெளியிடும் தகவல்

காரைக்குடி, ஜூன். 2—பள்ளிப்படிப்பையும் கல்லூரிப் படிப்பையும் முடித்துக்கொண்டு வெளியேறும் மாணவர்கள் உத்தியோகத்திற்குப் புகுவதற்குத் தகுதி உள்ளவர்களாக இருக்கும்படி கல்வி முறையைத் திருத்தியமைக்கவேண்டும் என்று திட்டக் கமிஷன் மெம்பர் டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் இன்று வலியுறுத்தினார்.

ராஜ்ய கல்வி 55வது மாநாட்டைத் துவக்கி வைத்து நிகழ்த்திய உரையில் டாக்டர் ராவ் இவ்வாறு குறிப்பிட்டார்.

டாக்டர் ராவ் மேலும் கூறினார்:-மிகச் சிலரே கல்லூரிப் படிப்பு கற்க முடியும். பள்ளிப் படிப்புடன் நிறுத்திக் கொள்கிறவர்கள் பெரும்பான்மையோராகையால், அவர்களுடைய நலன்களைப் பாதுகாக்க வேண்டியதவசியம். இந்த நோக்கத்துடன் திட்டக்கமிஷன் 4வது திட்ட காலத்தில் கல்வி முறையை மாற்றியமைப்பதற்கு முயன்று கொண்டிருக்கிறது. தொழில் நுட்பக் கல்விக்கு அதிக முக்கியத்துவம் வழங்கும் முறையிலும், தபால் மூலம் கல்வி கற்பதற்கு ஊக்கம் அளிக்கவும், மாலை, காலை வகுப்புகளை நடத்துவதற்கு ஊக்கம் அளிக்கவும் கல்வி முறையில் மாறுதல் செய்வதற்குத் திட்டக் கமிஷன் முயன்று கொண்டிருக்கிறது. மற்றும் 4வது திட்டக் காலத்தில் முதியோர் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். இதற்காக பிராந்திய மொழிகளில் ஏராளமான பாடப் புத்தகங்களைத் தயாரிப்பதற்கும் கிராமப் பகுதிகளில் நூல் நிலையங்களை ஆரம்பிக்கவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. மற்றும் கல்லூரி ஆசிரியர்களின் உத்தியோக வசதிகளை அபிவிருத்தி செய்யவும் முயற்சி எடுத்துக்கொள்ளப்படும். அப்படிச் செய்தால்தான் அவர்கள் வேறு வேலைகளுக்குச் செல்லாமல் இருப்பார்கள்.

டாக்டர் ராவ் மேலும் கூறினார்: கல்வி கணிசமாக விரிவடைந்திருக்கிறது. சென்ற 15 ஆண்டுகளில் கல்விச் செலவும் அதிகரித்து விட்டது. ரூ. 114 கோடியிலிருந்து ரூ. 660 கோடியாகக் கல்விச் செலவு அதிகரித்துள்ளது. ஆனால் செலவுக்குத் தகுந்த

வாறு கல்வியின் தரம் கணிசமாக அபிவிருத்தி யடையவில்லை. பள்ளிகளில் உபயோக நூலகங்கள் போதுமானபடி இல்லை. மற்றும் போதுமான சிப்பந்திகளும் இல்லை. ஆனால் சிப்பந்திகளைப் பெருக்குவதால் தரம் குறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

போதனை தரத்தை அபிவிருத்தி செய்து கொள்வதற்காக ஆசிரியர்கள் மறு பயிற்சி, கருத்தரங்குகள், தொழில் பட்டறை முதலியவற்றின் மூலமாக மறு பயிற்சி பெறவேண்டும்.

மாணவர்களிடையே காணப்படும்கட்டுப்பாடின்மையைப்பற்றி டாக்டர் ராவ் பின்வருமாறு குறிப்பிட்டார்: கெடுபிடி முறைகள் மூலமாக அல்லாமல் ஆசிரியர்களும் மாணவர்களும் பரஸ்பரம் ஒருவரோடொருவர் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்வதால் இந்தத் தீமையை அகற்றிக்கொள்ளலாம். கல்விப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதற்கு ஊக்கம் அளிக்கப்பட வேண்டும்.

## வரவேற்புரை

வரவேற்புக் கமிட்டியின் தலைவரான திரு. சி.வி.சி.டி.வி. வெங்கடாசலம் செட்டியார் தனது வரவேற்பு உரையில் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள், செகண்டரி பள்ளி ஆசிரியர்கள் ஆகியோரின் சம்பள விகிதங்களை உயர்த்த வேண்டும் என்று வலியுறுத்தினார். பி. டி. பட்டம் பெற்றவர்கள் 5 வருட கல்லூரிப் படிப்பு படித்திருந்தும் ரூ. 140 சம்பளம் பெறுகிறவர்கள். இன்ஜினீயரிங் பட்டதாரி பி. டி. பட்டதாரிகளைப் பார்க்கிலும்கூட ஒரு வருட கல்விமே கல்லூரிகளில் படித்திருக்கிறார்கள். எனினும் அவர்கள் ரூ. 275 அல்லது அதிகமாக ஆரம்பச் சம்பளம் பெறுகின்றனர். கல்லூரி ஆசிரியர்களின் சம்பளத்தையும் அதிகப்படுத்த வேண்டியதவசியம். மிகவும் புத்திசாலிகளாக உள்ள பட்டதாரிகள் ஐ. ஏ. எஸ். ஸில் சேருகின்றனர். இன்ஜினீயரிங் ஆசிரியர்கள் அதிக வருமானத்தைக் கருதி தனியார் தொழில்களில் உத்தியோகம் பெறுகின்றனர்.

பி. யு. ஸி. 3 வருட பட்டப் படிப்பு ஆகியவை காரணமாக தரம் மிகவும் குறைந்து விட்டதால், பழைய 2 வருட இன்டர்மீடியட் படிப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். ஆசிரியர்கள் மாற்றுதலுக்கான வசதிகளுடன் சர்க்கார் ஊழியர்களைப்போல நடத்தப்படவேண்டும் என்று திரு. வெங்கடாசலம் செட்டியார் கூறினார்.

மாநாட்டிற்குப் பேராசிரியர் ரத்னசாமி எம்.பி. தலைமை வகித்தார். தொழில்நுட்பப் பயிற்சிப் பள்ளிகள் அதிகமாக ஏற்படுத்தப் படவேண்டும் என்று அவர் கூறினார்.

# 2-ம் மொழியாக இந்தியைவிட ஆங்கிலம் தெரிந்தவர்கள் அதிகம்

## இந்தியாவின் 1961 மக்கட் கணக்கு தரும் தகவல்

### தமிழ் மக்களில் 0·2 சதவிகிதம் பேருக்குத்தான் இந்தி தெரியும்

புதுடில்லி ஜூலை—4

1961 ஜன கணிதப் படி இந்தியாவிலுள்ள 43·9 கோடி பேரில் ஏழு சதவிகிதத்துக்கும் குறைந்தவர்களுக்குத்தான் தங்கள் தாய் மொழியுடன் மற்றொரு இந்திய மொழி தெரியும்.

3 கோடிபேருக்கு இரு மொழிகள் தெரிந்த போதிலும், இரு மொழிகளை நன்கு எழுதப்படிக்கப் பேசத் தெரிந்தவர்கள் அதைவிட மிகக் குறைவு.

ஜனகணித அடிப்படையில் இந்தியாவின் மொழிப்பிரச்னையின் சில அம்சங்களை கல்விக் கமிஷன் காரியதரிசி ஜே. பி. நாயக் ஓர் அறிக்கையில் எடுத்துக் காட்டினார். மக்களுக்கு மற்றொரு இந்திய மொழியைப்போதிப்பது எவ்வளவு சிரமமானது என்பதை இவை காட்டுவதாக அவர் குறிப்பிட்டார்.

மொழி, குறிப்பாக பல்வேறு கல்விக் கட்டங்களில் போதனை மொழி பற்றி கமிஷன் ஆராய்ச்சி நடத்துகிறது.

### ஆங்கிலம்

ஆங்கிலம் தெரிந்தவர்கள் 1·1 கோடிக்குச் சிறிது அதிகம் என்பதை இருமொழி தெரிந்தோர் புள்ளி விவரம் காட்டுவதாக திரு. நாயக் கூறினார். இரண்டாவது மொழியாக இந்தி 96·3 லட்சம் பேருக்குத்தான் தெரியும். ஆகவே இந்தியாவில் மிக அதிகம் தெரிந்த இரண்டாவது மொழி ஆங்கிலம் என வர்ணிக்கலாம் என்றார்.

### இந்தியின் நிலை

இந்தி பேசாத இடங்களில் இந்தியின் நிலையை ஆராய்ந்து அது மகிழ்ச்சிகரமாக இல்லை என்று அவர் சொன்னார். மிக அதிகம் பேருக்கு இந்தி தெரிந்த (3·91 சதவிகிதம்) ராஜ்யம் மகாராஷ்டிரம், மராத்தி, இந்தி லிபி பொதுவாக இருப்பதும், இந்திக்கு ராஜ்ய சர்க்கார் ஊக்கமளிப்பதும் அதற்குக் காரணம்; தங்கள் ஜனத் தொகையில் இந்தி தெரிந்தவர்கள் சதவிகிதம் ராஜ்யவாரியாக வருமாறு. மேற்கு வங்காளம் 6·67; அஸ்ஸாம் 6·62 குஜராத் 3·48. மைசூர் 1·28 ஆந்திரா 1·21. கேரளா 0·21. சென்னை 0·20, ஒரிஸ்ஸா 1·78.

சுதந்தரத்துக்குப் பிறகு கடந்த 18 ஆண்டு காலத்தில் இதுதான் செய்யப்பட்டுள்ளது. நிலைமை மோசமாக இருப்பதால் நாம் அனைவரும் பரிசீலித்து எதிர்காலத்தில் நன்கு, தீவிரமாக திட்டமிடவேண்டும் என்று அவர் கூறினார்.

1961 ஜனகணிதப்படி சுமார் 43·9 கோடி மக்கள் 165 மொழிகளையும் தங்கள் தாய்மொழிகளாகக் கொண்டனர்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 8-வது அட்டவணையில் குறிப்பிடப்பட்ட 14 மொழிகளை 38 கோடி பேர், அதாவது மொத்த ஜனத்தொகையில் சுமார் 87 சத விகிதம் பேர் பேசுகின்றனர்.

மொழிவாரியாக ஜனத்தொகை விவரம் வருமாறு:—இந்தி 30.4 சத விகிதம். தெலுங்கு 8·6, வங்காளம் 7·7, மராத்தி 7·6, தமிழ் 7, உருது 5·3, குஜராத்தி 4·6, கன்னடம் 4, மலையாளம் 3·9, ஒரியா 3·6, பஞ்சாபி 2·5, அஸ்ஸாமி 1·6, காஷ்மீரி 0·4 மற்ற மொழிகள் 12·8.

தங்கள் தாய்மொழியைத் தவிர வேறு இந்திய மொழியை அறிந்தவர்களில் பெரும்பாலானவர்கள். அது ஆட்சிமொழியாக அல்லது பிராந்தியமொழியாக உபயோகிக்கப்பட்ட ராஜ்யத்தில் வாழ்வதால் அவசியம் காரணமாகக்கற்றுர்கள்.

இந்தியை இரண்டாவது மொழியாக அறிந்தவர்களில் 50·4 சதவிகிதம் பேர்தான் இந்தி பேசும் ராஜ்யங்களில் வசிக்கிருர்கள். இந்தி பேசாத பகுதிகளில் இந்தி அறிந்த பேர் அளவுக்கு இருப்பதின் பிரதான காரணம், இந்தியை யூனியன் ஆட்சி மொழியாக்க முடிவுசெய்ததாகும். இவ்வாறு நாயக்கின் அறிக்கை கூறியது.

## அதிசயம்

### 18 ஆண்டுகள்

### மகளைச் சிறைவைத்த பெற்ருேர்!

இத்தாலி ஜூன் 16-மரக் கூண்டு ஒன்றில் கடந்த 18 ஆண்டுகளாகச் சிறை வைக்கப்பட்டிருந்த ஒரு பெண்ணை தாங்கள் விடுவித்ததாக அண்மையில் போலீசார் கூறினர். அவளைச்சிறை வைத்தது அவளது பெற்ருேர்களே. 15 வயது பெண்ணாக இருந்தபோது ஒருவனைக் காதலித்ததற்காக அவளுக்கு இக்கடும் தண்டனை கிடைத்தது.

மரக்கூண்டின் நீளம் 2 மீட்டர். உயரம் 1·7 மீட்டர். பல ஆண்டுகள் கூண்டுக்குள் அடைபட்டுக் கிடந்ததால் அவளால் சரியாக நடக்கவோ அன்றிப்பேசவோ முடியவில்லை. ஆஸ்பத்திரியொன்றில் அனுமதிக்கப்பட்டாள்.

1947 ஆகஸ்டில் அவளை சிறை வைக்க முடிவு செய்ததாக பெற்ருேர்கள் கூறினராம். உடம்பில் உயிர் ஒட்டிக் கொண்டிருக்குமளவுக்கு அவளுக்கு அவர்கள் ஆகாரம் அளித்தனராம்.

அவளது காதல் கைகூடினல் அவளால் சமூகத்துக்கு அபாயம் ஏற்படலாம் என்று அஞ்சி இத்தகைய நடவடிக்கை எடுத்ததாகப் பெற்ருேர்கள் கூறினர்.

# கவலை ஒரு ஆராய்ச்சி

(ஜார்ஜ் ஆலன்)

இயல்பாகவே அனைவருடனும் நன்றாகப் பழகுபவரும், நோயாளிகளிடம் தனிப்பட்ட முறையில் அக்கறை கொண்டவருமான ஒரு டாக்டர், தாம் வேலை செய்து வந்த மருத்துவக்கூடம் ஒன்றிலிருந்த உருக்கி நோயாளிகள் அனைவரிடமும் பொதுவான ஒன்று இருக்கக் கண்டார். அதாவது அவர்களனைவரும் பெருத்த மனத் துயரத்துக்குள்ளான ஒரு வரலாறு இருந்தது.

எனவே அறிவியலடிப்படையில் நோயாளிகளிடையே ஆராய்ச்சி மேற்கொள்வதென்று அவர் முடிவு கட்டினார். உருக்கி நோயாளிகளை நெருக்கமாகக் கேள்வி கேட்டபோது, நோய் பீடிப்பதற்குச் சுமார் 18 மாதம் முதல் மூன்றாண்டு காலத்துக்கு முன்னர் அவர்களில் பெரும்பாலோருக்குக் காதலில் தோல்வி ஏற்பட்டது அல்லது ஆசை காட்டி மோசம் செய்யப்பட்டனர் அல்லது இணை இறந்தது அல்லது அன்புக்குரியவர் இறந்திருந்தார் என்ற உண்மைகள் தெரியவந்தன.

கதையில் துன்பியலை உருவாக்க வேண்டுமென்பதற்காக விக்டோரியா காலத்திய எழுத்தாளர்கள் கையாண்டு வந்த உத்திக்கு மேற்சொன்ன உண்மை அறிவியல் ஆதாரமாக நிற்கிறது. பொதுவாக அவர்கள் இளம் பெண் பாத்திர மொன்றை ஆக்கி, அது "உருக்குலைவதை"ச் சித்தரித்து, சோக ரசத்தைப் பாயவிடுவது வழக்கமாகும். கணவனோ, மனைவியோ இறந்துபோன கவலையைத் தாங்கமாட்டாமல், மற்றவர் பார்ப்பதற்கு உடல் நலத்துடன் இருந்தும் திடீரென்று இறந்து விடுவது மனித நடத்தையின் வார்ப்புருவாக இருந்து வருகிறது. சாவினாலோ கை விடப்பட்டதினாலோ மனதுக்குகந்தவரைச் சில வேளைகளில் இழந்து விடும்போது அக்கவலை, உடலைத் தாக்காமல் மனத்தை அடிக்கிறது.

கவலையினால் கடுமையான மனக் கோளாறுக்குள்ளானவர்களை மீண்டும் நன்னிலைமைக்குக் கொண்டு வருவதற்காக லண்டனுக்கருகிலுள்ள ஹோம்கௌண்டீஸ் என்னுமிடத்திலுள்ள மருத்துவக்கூடத்திலிருக்கும் மனநோய் மருத்துவர்கள் புதிய முறைபொன்றை உருவாக்கி வருகிறார்கள். ஏனென்றால் இன்று மனநோயை உண்டாக்க அல்லது அதிகரிக்கச் செய்வதிலுள்ள முக்கியமான கூறுகளில் மனக்கவலையும் ஒன்று என்று மன்நோய் மருத்துவர்களில் பலர் நம்புகின்றனர்.

குழந்தைப் பருவத்தில் கவலை உண்டாகும் விளைவுதான் பெரும் நாசத்தை யுண்டாக்கக் கூடியது

என்று சில விற்பன்னர்கள் கருதுகின்றனர். உள்ளத்திலிருப்பதற்கு முற்றிலும் தொடர்பற்ற முறையில் குழந்தைகள் வெளியில் நடந்து கொண்ட போதிலும், அவை கவலையை உள்ளுக்குள் வைத்துக் கொண்டேயிருக்கும். எடுத்துக் காட்டாக உணர்ச்சியற்ற முகத்தை வைத்துக்கொண்டு உம்மணா மூஞ்சியாகக் குழந்தை இருக்கலாம். சில வேளைகளில் சமாளிக்க முடியாத அளவுக்குக் குழந்தை குற்றங்களைச் செய்யலாம். மனத்தைஉணர்ந்து பயிற்சி பெற்ற மனத்தினால்தான், மேற் சொன்ன வழியில் குழந்தைகளிடமிருந்து வெளிப்படும் இரகசியக் கவலையை வெளியிலே கொண்டு வர முடியும். ஏனென்றால், குழந்தை தனது போக்கிரித் தனமான போக்கை வெளிக்காட்டுவதற்குப் பல மாதங்களுக்கு முன்னர், ஏன் ஓராண்டுக்கு முன்னரே கூடக் கவலைக்குக் காரணமான நிகழ்ச்சி நடந்திருக்கலாம்.

"கூட்டாளிகளைத் தேடிக் கொள்ள முடியாமல் நண்பர்களற்ற தனி மரமாகக் குழந்தைகள் பள்ளிகூடத்தில் இருக்கலாம். அல்லது அது எதிலும் அக்கறை காட்டாமல் அல்லது யாருடனும் ஒத்துழைக்காததாக இருக்கலாம். அந்தக் குழந்தையின் மனத்தில் தேங்கியுள்ள கவலையானது சொல்லெனும் மதகுகளின் வழியே வெள்ளமாகப் பீறிட்டுக்கொண்டு வருவதற்கு முன்னர் அதனுடன் மிக அன்பாக நாம் பலமுறை பேசவேண்டிவரும்; அதன் பிறகு தான் கவலையின் உண்மையான காரணத்தை நாம் அறிய முடியும்.

"செத்துப்போன தாயில்லாததை நினைத்து, அவள் உயிரோடிருந்த காலத்தில் தான் அவளிடம் நல்லபடியாக நடந்துகொள்ளவில்லையென்ற குற்றச் சிந்தனையுடன் ஒரு பெண் தன்னை வதை செய்துகொண்டிருக்கலாம். எல்லாக் குழந்தைகளுமே குறும்பு செய்கின்றன; வயது வந்தவர்களிடம் அப்போதைக்கப்போது நயக் கேட்டுடன் நடந்துகொள்கின்றன என்பதும் மெய்யே. அவற்றை அற்பமானவையாகக் கருதிப்பெற்றோர் விட்டுவிட்டால் அவை மறக்கப்பட்டுவிடும். குற்ற உணர்வு பின்னேக்கானது. சாவைப் பற்றிய முன்னறிவுடன் ஒரு பெண் தன் தாயின்மீது பாசம் வைக்க முடியாது' என்று மனநல மருத்துவர் ஒருவர் கூறுகிறார்.

வாழ்க்கையின் பாதகமான பல நிலைமைகளைப் போலவே கவலையையும் எதிர்ப்பட்டுச் சமாளிக்க வேண்டுமென்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். கவலையை அடக்கி அல்லது வேண்டுமென்றே வேலையிலீடுபட்டு வெளிக்குத் தெரிய மறந்துவிட முடியாது. கவலையை எதிர்ப்பட்டு அதைச் சமாளிக்க ஆயத்தமாகிவிட்டால், அது தானாகவே ஆறிவிடும். கவலையை நீண்ட காலத்துக்கு அடக்கியடக்கிப் புதைத்தாலோ, அதனால் எழும் குற்ற உணர்வைக் குணப்படுத்துவது மிகவும் கடினமாகிவிடும்.

—தினமணி

# செய்திச் சுருள்

## குருட்டு மாணவரின் சாதனை

### சட்டப் பரீட்சையில் 2-வது இடம் பெற்ருர் !

பெல்காம் ஜுன் 10

ரத்னகிரியைச் சேர்ந்த குருட்டு மாணவர் ஒருவர் கர்நாடக சர்வ கலாசாலை நடத்திய எல். எல். பி. பரீட்சையில் இரண்டாவது ஸ்தானத்தைப் பெற்றுள்ளார். ரத்னகிரியைச் சேர்ந்த அந்த மாணவரின் பெயர் அருண் சிவராம் தீட்சதர். அவர் பெல்காம் சட்டக் கல்லூரியில் படித்து வந்தார். சென்ற ஆண்டு முதல் எல். எல். பி. பரீட்சையில் முதலாவதாகத் தேறினர்.

கல்லூரியில் நடந்த சொற்போதனைகளை அவர் கேட்டார். தமது வகுப்பு மாணவர்களுடைய உதவியுடன் பாடங்களைப் பயின்ருர். டைப்ரைட்டரின் உதவியுடன் பரீட்சையில் கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

## கடல் அலையிலிருந்து மின்சார உற்பத்தி

கடல் பொங்குவதற்கு சந்திரனின் ஆகர்ஷண சக்தியே காரணம் என்பது பொதுவாகத் தெரிந்த விஷயம். ஓரளவுக்குச் சூரியனின் ஆகர்ஷண சக்தியும் அதற்குக் காரணமாகும். பொங்கும் கடலின் அலைகளின் சக்தியை மனிதசேவைக்கு எவ்வாறு பயன்படுத்த முடியும்?

கடல் குடா ஒன்று ஒரு அணையால் அடைக்கப்பட்டு அதில் டர்பைன்கள் வைக்கப்படுகின்றன. கடல் பொங்கும்போது டர்பைன்கள் வழியாக குடாவுக்குள் கடல் நீர் பாய்கிறது. அதனால் டர்பைன்கள் சுற்றுகின்றன. அலைகள் வடியும்போது ஜல மட்டம் குறைந்து கடலுக்கு ஜலம் திரும்புவதால் மீண்டும் டர்பைன்கள் சுற்றுகின்றன. இவை சாதாரண ரக டர்பைன்கள் அல்ல, தங்கள் சக்கரங்கள் எத்திசையில் சுற்றினாலும் அவை மின்சார விசை தயாரிப்பவை யாகும்.

பிரான்ஸ், சீனு, பிரிட்டன் ஆகிய நாடுகளில் ஏற்கனவே இத்தகைய அலை மின்சார விசை நிலையங்கள் இருக்கின்றன. இத்தகைய முதல் ரஷிய விசை நிலையம் கோலா தீப கற்பத்தின் வடக்குக் கடற்கரையில் உள்ள கிஸ்லயா குடாக்கடலில் நிறுவப்படுகிறது.

ரஷிய கடற்கரையில் மோதும் அலைகளின் சக்தியை உபயோகிப்பதால் ஆண்டுக்கு சுமார் 24,000 கோடியூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யமுடியும். தற்சமயம் வருட

மொன்றுக்கு நாட்டில் உற்பத்தி யாகும் விசையில் பாதி இது.

இப்பொழுது எதிர்கால ரஷிய அலை மின்சார நிலையங்களின் பகுதிகள் முர்மான்ஸ்க் அருகில் கட்டப்படுகின்றன. கட்டுமான இடத்திற்குப்பிறகு அவை அனுப் பப்படும்.

800 கி. வா. சக்தி உள்ள முதல் ரஷிய அலைமின்சார நிலை யம் 1966-ல் விசை உற்பத்தியை ஆரம்பிக்கும். பிறகு அதிக சக்தி யுள்ளவை கட்டப்படும். அவை பிரெண்ட்ஸ், வெண் கடல் கரை யில் நிறுவப்படும்.

## உலக மக்கள் தொகையில் இந்தியா 2-வது இடம்

ஐ. நா. புள்ளி விவர அறிக்கை

ஐ. நா. நியூயார்க், ஜூன், 13 உலகிலேயே ஜனத்தொகையில் சீனாவுக்கு அடுத்தபடியாக இந் தியா இரண்டாவது ஸ்தானத்தை வகிக்கிறது. சீனாவின் ஜனத்தொ கை (1957-ல்) 64·7 கோடியா கும். இந்தியாவின் ஜனத்தொகை 46 கோடி. சோவியத் யூனியன் மூன்றாவது ஸ்தானத்தை வகிக் கிறது. அதன் ஜனத்தொகை 22·5 கோடி. 18 9 கோடி ஜனத்தொகை யுள்ள அமெரிக்கா 4-வது ஸ்தா னத்தை வகிக்கிறது.

இந்த நான்கு நாடுகளின் மொத்த ஜனத்தொகையும் உலக ஜனத்தொகையில் பாதி அளவா கும். 1963 மத்தியில் கணக்கிடப் பட்ட உலக ஜனத்தொகை 316 கோடி. உலக ஜனத்தொகை வரு ஷம் 1·8 கோடி சதவிகிதம் அதிக ரித்து வருகிறது. இவ்விவரம் நேற்று இங்கு வெளியிடப்பட்ட ஐ. நா. புள்ளி விவர புத்தகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முழு நீள படங்களைத்தயாரிப்ப திலும் இந்தியா உலக நாடுகளில் இரண்டாவது ஸ்தானத்தை வகிக் கிறது. இந்தியாவில் தயாரான படங்களின் எண்ணிக்கை 319. முதல் ஸ்தானத்தை வகிக்கும் ஜப் பானில் 657 படங்கள் தயாரிக்கப் பட்டுள்ளன.

சினிமா பார்ப்பவர்களின் எண் ணிக்கை சீனாவில் தான் அதிக ரித்து வருகிறது. 1963-ல் சீனா வில் சினிமா பார்த்தவர்கள் எண் ணிக்கை 400 கோடி. மற்ற நாடு களில் பார்த்தவர்களின் எண் ணிக்கை: சோவியத் யூனியன் 384·9 கோடி; அமெரிக்கா 217·8 கோடி. இந்தியா 100 கோடி.

1958-க்கும் 196з-க்கும் இடையே உலகில் உணவு உற்பத் தியும் 10 சதவிகிதம் அதிகரித் திருக்கிறது. ஜனத்தொகை பெருக்க விகிதம் 9 சதவிகித மாகும்.

அந்த 5 வருஷ காலத்தில் தொழில் உற்பத்தி 4½ சதவிகிதம் அதிகரித்திருக்கிறது.

ரயில் போக்குவரத்து 27 சத விகிதம் அதிகரித்துள்ளது. உல கில் மோட்டார்களும் 40 சதவிகி தம் அதிகரித்துள்ளது.

1962-63-ம் வருஷத்துக் கிடையில் உஷ்ண உற்பத்தி 1 சத

(61-ம் பக்கம் பார்க்க)

# இந்திய ஜனநாயகம் எதிர்த்துப் போராடும் ஐம்பெரும் பூதங்கள்

## லண்டனில் பிரதம நீதிபதி கஜேந்திர கட்கர் உரை

சமூக பொருளாதார நீதி பெறுவதில், ஜனநாயக சட்ட சபையினர் கைகளில் சட்டம் ஒரு வலுவான ஆயுதம் என்று பிரதம நீதிபதி கஜேந்திர கட்கர் இன்று இங்கு கூறினார்.

"இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் கீழ் சட்டத்தின் ஆட்சி" என்பது பற்றி ஒய். எம். சி. ஏ. யில் அவர் பேசினார்.

சமூக — பொருளாதார மாறுதலுக்கு சட்டம் ஒரு வளைந்து கொடுக்கக் கூடிய சாதனம். இந்த ஆயுதத்தைப் பகுத்தறிவுடனும் சௌஜன்யமாகவும் பயன்படுத்தியதால் தன் லட்சியத்தை அடைய இந்திய ஜனநாயகம் நீடித்து முயற்சிக்க முடிந்தது.

இந்திய ஜனநாயகத்தின் கடந்த 15 ஆண்டு சரித்திரத்தைக் கவனமாகப் படித்தால், சமூக — பொருளாதார நீதியை நோக்கிச் சென்ற முயற்சியை அது காட்டும். இந்திய ஜனநாயகம் முன்புள்ள பாதை, நீளமானது. வழியில் பல அபாயங்கள் இருக்கக் கூடும்.

கடந்த காலத்தில் இந்திய ஜனநாயகம் தவறுகளைச் செய்திருக்கக் கூடும். எதிர் காலத்திலும் அது தவறுகளைச் செய்யக் கூடும். ஆனால் அரசியலமைப்பு வகுத்த பாதையில் செல்லவும், ஜனநாயக வழியில், சமூக—பொருளாதார நீதி அடையவும் அது உறுதி பூண்டிருக்கிறது.

வறுமை, அறியாமை, வேலையின்மை, நோய், அசுத்தம் ஆகிய ஐம்பெரும் பூதங்களை எதிர்த்துப் போராடுவது அதன் நோக்கம்.

இந்தப் பூதங்களை எதிர்த்துப் போராடுவதில் சட்டத்தின் உதவியுடன் இந்தியஜனநாயகம் வெற்றி பெற்றால் தான், இந்திய அரசியலமைப்பு சட்டம் வகுத்த லட்சியத்தை அது அடைந்ததாகக் கூற முடியும்.

---

(60-ம் பக்கத் தொடர்ச்சி)

விகிதமே அதிகரித்திருக்கிறது.

முந்தைய ஆண்டுகளை விட 1963-ல் விவசாயிகள் அதிக அளவு அரிசி, பார்லி, பருத்தி, புகையிலை ஆகியவற்றை உற்பத்தி செய்தனர்.

இறைச்சி உற்பத்தியும், மீன் பிடிப்பும் அதிக அளவுக்கு அதிகரித்தது.

கோதுமை, உருளைக்கிழங்கு, காப்பி உற்பத்தி குறைந்துள்ளது.

சோவியத் யூனியனிலும், பிரான்சிலுமே கோதுமை உற்பத்தி குறைந்தது; கனடா, துருக்கி, அமெரிக்கா ஆகிய நாடுகளில் உற்பத்தி அதிகரித்தது.

1960-ல் உலகில் மொத்தம் உற்பத்தியான அரிசி அளவில் மூன்றில் ஒரு பகுதியை சீனா சென்ற வருஷம் உற்பத்தி செய்துள்ளதாக புள்ளி விவரங்கள் கிடைத்துள்ளன.

# துவக்கக் கல்வி 6 ஆண்டாக உயர்த்தப்படவேண்டும்

## தெ. இ. ஆசிரியர் யூனியன் ஆய்வுக் குழுவின் கருத்து

### சுயேச்சையான மாநிலக் கல்விக் குழு நிறுவ யோசனை

சென்னை, ஜூன். 16—துரிதமான விஸ்தரிப்பு ஏற்பட்டுவரும் காலத்தில் சர்க்கார் கட்டுப்பாடு காரணமாக கல்வித்தரம்குறைந்து விட்டது என்று ஆய்வுக் குழு ஒன்று இந்தியகல்விக் கமிஷனுக்கு சமர்ப்பித்த யாதாஸ்து ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறது. தென்னிந்திய ஆசிரியர்கள் யூனியனும், யூனியன் கல்வி ஆராய்ச்சி கவுன்சிலும் இந்த ஆய்வுக் குழுவை அமைத்தது.

கல்வித் துறையில் சர்க்கார் ஆதிக்கம் பாதக பலன்களையே ஏற்படுத்துகிறது என யாதாஸ்து கூறுகிறது.

சென்னை ராஜ்யத்தில் கல்வி அமைப்பில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டிருந்த போதிலும், கல்விக் கொள்கைகளை உருவாக்குவதிலோ அன்றி அவற்றை அமலாக்குவதிலோ மக்களுக்கு அல்லது ஆசிரியர்களுக்கு அக்கறை ஏற்படச் செய்ததாகவும், சம்பந்தமுள்ளதாகவும் கூறுவதற்கில்லை.

எனவே கல்வி நிர்வாகம் சம்பந்தப்பட்ட அதிகாரங்களை பரவலாக்க வேண்டும். கல்விச் சங்கங்கள், கல்வி ஸ்தாபன நிர்வாகங்கள், சட்டசபை பார்லிமெண்டு மெம்பர்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளடங்கிய சுயேச்சையான ராஜ்ய கல்வி போர்டு ஒன்றை நிறுவ வேண்டும். கல்வி சம்பந்தமான கொள்கையை போர்டு தீர்மானிக்க வேண்டும். திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை சுயேச்சையான ஜில்லா கவுன்சில்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

கல்வி நிலவரத்தை ஆராய்வதற்காக மத்திய சர்க்காரினால்நிறுவப்பட்டகல்விக்கமிஷன் ஜூலை இறுதியில் சென்னை ராஜ்யத்துக்கு விஜயம் செய்யும்.

டாக்டர் கோத்தாரி தலைமையில் உள்ள கல்விக் கமிஷன் 6 தினங்கள் சென்னை ராஜ்யத்தில் தங்கும்.

கமிஷன் ஜூலை 28ல் சென்னையில் கூடி அதிகாரிகளுடனும் பேச்சு வார்த்தை நடத்தும். கமிஷன் ஏற்கனவே 18 சர்வகலா சாலைகளுக்கு விஜயம் செய்துள்ளது.

துவக்க கல்விக் கட்டம் 6 ஆண்டுகளாக இருக்க வேண்டும் என்று ஆய்வுக் குழுவின் யாதாஸ்து யோசனை கூறுகிறது. துவக்கக் கல்வி தற்போது 5 ஆண்டுகளாக உள்ளது.

உலக முழுவதிலும் 6 ஆண்டு துவக்கக் கல்வி அமலில் உள்ளதாக கல்வி நிபுணர் திரு. எஸ். நடராஜன் குறிப்பிட்டார்.

6 ஆண்டு துவக்கக் கல்வியின் போது மூளைக்கும், உடலுழைப்புக்கும் இணைப்பு ஏற்படுத்தவேண்டும் என்று யாதாஸ்து குறிப்பிடுகிறது. இக்கட்டத்தில் கடைசி இரண்டு ஆண்டுகளில் இரண்டாவது மொழியை பிரதானமாக ஆங்கிலத்தை மேற்கொள்வது பயனுள்ளதாக இருக்கும்.

சிந்திக்கும் திறன், சுயமாக அறிவைப் பெறுதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தப் படவில்லை. பள்ளி இறுதி ஆண்டு பரீட்சையே கல்வித் தரம் குறைய முக்கிய காரணம். இப்பரீட்சைக்குத் தயார் படுத்துவதிலேயே காலம் செலவாகிறது. பாடங்களை நெட்டுருப் போடும் பழக்கத்தை இது ஊக்குவிக்கிறது.

பள்ளி ரிக்கார்டுகளும், பள்ளியின் மதிப்பீடும், ஒரு மாணவனின் தகுதியைத் தீர்மானிப்பதில் முக்கிய அம்சங்களாக விளங்க வேண்டும்.

பாடப் புத்தகங்கள் சம்பந்தப்பட்டவரை அநேக அங்கீகரிக்கப்பட்ட புத்தகங்களிலிருந்து ஒன்றைப் பொறுக்கும் ஏற்பாடு இருக்க வேண்டும் என்று யாதாஸ்து தொடர்ந்து குறிப்பிடுகிறது.

மலிவுப் பாடப் புத்தகங்கள் கோரிக்கையை யாதாஸ்து கண்டிக்கிறது.

ஆசிரியர் கல்வி சம்பந்தப்பட்டவரை தேசிய கமிஷன் ஒன்றை தோற்றுவிக்க யாதாஸ்து சிபாரிசு செய்கிறது. இக்கமிஷன் கொள்கைகளை வகுக்கவேண்டும்; பாடத்திட்டத்தை உருவாக்க வேண்டும், கல்வி டிப்ளமோ, டிகிரிகளை வழங்க கமிஷன் வேண்டும். கீழ்க் கட்டத்தில் ராஜ்ய ஆசிரியர் கல்விக் கவுன்சில்கள் இருக்கவேண்டும்.

பிராவிடண்டு நிதிக்குப் பதில் ஆசிரியர் ஓய்வு நிதியொன்றை ஏற்படுத்துமாறு யாதாஸ்து சிபாரிசு செய்கிறது.

## திரு. சுந்தரவடிவேலு உயர் கல்வி டைரக்டராகிறார்

சென்னை, மே. 20—கல்வி டைரக்டர் காரியாலயம் இரு பிரிவுகளாக அமைக்கப்பட்டுள்ளது. உயர்நிலைக் கல்விக்கு ஒரு டைரக்டரும், செகண்டரிக் கல்விக்கு ஒரு டைரக்டரும் இருப்பார்கள்.

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் பயனாக, தமிழகம் கல்வித் துறையில் சிறப்பான முன்னேற்றம் அடைந்திருக்கிறது. மாநில சீரமைப்புக்குப் பிறகு முதல் ஆண்டில் அதாவது 1957–58-ம் ஆண்டில் கல்விக்காகச் செலவிடப்பட்ட தொகை ரூ. 11 கோடி. கல்விச் செலவு 1960–61—ல் ரூ. 14 கோடியாக உயர்ந்திருக்கிறது. தற்போது ரூ. 35 கோடி அளவுக்குச் செலவு உயர்ந்திருக்கிறது மூன்றாவதுக்குக் குறையாத மக்கள்

தொகையுள்ள பகுதிகள் எங்கிலும் தொடக்கப் பள்ளிகள் உள்ளன. இரண்டாவது திட்டகால முடிவில் 1400 செகண்டரிப் பள்ளிகள் உள்ளன. ஆண்டு தோறும்எஸ்.எஸ்.எல் ஸி. தேர்வு செல்லும் மாணவர்கள் எண்ணிக்கை பெருமளவில் பெருகி வருகிறது. இரண்டாவது திட்டக் கால முடிவில் தமிழ் நாட்டில் 79 கலைக்கல்லூரிகள் இருந்தன. அவற்றுள் அரசாங்க கலைக் கல்லூரிகளின் எண்ணிக்கை 13 ஆகும். இந்த ஆண்டில் ஆரம்பிக்க உத்தேசிக்கப் பட்டிருக்கும் 7 அரசாங்கக் கலைக் கல்லூரிகளையும் சேர்த்து, 100-க்கு மேல் கலைக்கல்லூரிகள் இருக்கும் நிலை விரைவில் ஏற்படும்.

இங்ஙனம் கல்வி அபிவிருத்திப் பணிகளால் கல்வித் துறைக்குப் பொறுப்புக்கள் மிகுதியாகி விட்டன. குறிப்பாக அரசாங்கத் தேர்வுகள் கமிஷனராகவும் பொது நூலகங்களின் நெறியாளராகவும் உள்ள கல்வித் துறை இயக்குநருக்குப் பொறுப்புகள் மிகுதியாக இருக்கின்றன. எனவே கல்வித் துறையில் செகண்டரிக் கல்விக்கும் (தொடக்கக் கல்வி உட்பட) உயர்நிலைக் கல்விக்கும் தனித்தனிப் பிரிவுகள் ஏற்படுத்த வேண்டியது பற்றி சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட பல தரப்பிலிருந்தும் யோசனைகள் கூறப்பட்டது.

நான்காம் திட்டத்தில் பெருமளவில் மேற்கொள்ளவிருக்கும் கல்விப் பணிகளைக் கருதியும், கல்வித்துறை நிர்வாக வசதிகளைக் கருதியும், அந்த யோசனைகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. அதன்படி பொதுக்கல்வி நெறியாளர் பிரிவு என்றும், செகண்டரி கல்வி நெறியாளர் பிரிவு என்றும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. உயர்நிலைக் கல்வி நெறியாளர் பொது நூலகங்கள் நெறியாளராகவும் இருப்பார். செகண்டரிக் கல்வி நெறியாளர் தொடக்கக் கல்வி உட்பட செகண்டரிக் கல்வி சம்பந்தமாகக் கவனிப்பதோடு, பாடப்புத்தகங்களை நிர்ணயிக்கும் பொறுப்பையும் கவனித்துக் கொள்வார். இதற்கான அரசாங்க உத்தரவு உடனடியாக அமுலுக்கு வருகிறது.

பொதுக் கல்வி நெறியாளர் திரு. எஸ். டி. சுந்தரவடிவேலு உயர்நிலைக் கல்வி டைரக்டராகப் பதவி மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார். இந்திய அரசாங்கப் பதவிக்கு அனுப்பப்பட்டிருக்கும் டாக்டர் எம். டி. பால் தற்போதைய பதவி நிலையில் மாறுதல் எதுவுமின்றி செகண்டரிக் கல்வி டைரக்டராக நியமிக்கப்பட்டிருக்கிறார். பொதுக்கல்வி (பாடப்புத்தகங்கள்) துணைடைரக்டரான திரு. வி. டி. டைட்டஸ் தற்காலிகமாக செகண்டரிக் கல்வி டைரக்டராக இருப்பார்.

Edited Printed and Published by P. VEERARAGHAVAN,
at Venkatesan Press, 2-65, Broadway, Madras-1.